உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பரஞ்சோதி முனிவர்

அருளிச்செய்த

வேதாரணிய புராண

வசன சங்கிரகம்.

ஆயிரம் பாடலுக்குச் சரியான கதாரூபம்

வேதாரணியம் பிரதோஷ மடாதிபர்

ஸ்ரீலஸ்ரீ மா. சோமாஸ்கந்த பட்டாரகரவர்கள்

இயற்றியதை

அன்பர்களின் வேண்டுகோளின்படி

ஷை மடாதிபர் குமாரர்

மா. சோமா. முத்துமாணிக்க பட்டாரகர்

அவர்களால்

சென்னை :

கவுணியன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1939.

ரிஜிஸ்டர்ட்.] [விலை அணா 8.

உ

சிவமயம்.

முகவுரை.

சுத்த ஷாட்குண்ய பரமாகாச சுவயம்ப்ரகாச சொரூபியாய் விளங்கிய சிவபெருமான் ஆன்மாக்களுய்யும் பொருட்டு அருள் வடிவாகிய சிவலிங்கத் திருமேனிகொண்டெழுந்தருளிய சிவ க்ஷேத்திரங்கள் பலவுள்ளன. அவைகளுள் மிகச் சிறப்புற்று விளங்கிய இந்த ஸ்ரீ வேதாரணிய க்ஷேத்திர புராணத்தின் வசன சங்கிரகத்தை கதைரூபமாக என்னுடைய தந்தையார் ஸ்ரீமான் மா. சோமாஸ்கந்த பட்டாரகர் அவர்கள் இயற்றியிருந்ததை அச்சிடுவித்து விளக்கவேண்டுமென்னும் விருப்பம் என் மனதிற் றோன்றி நாள்தோறும் வளர்ந்தோங்கியதே யெனினும் என்னுடைய பலவகையான சாவகாசமின்மை இடந்தரவேயில்லை. இங்ஙனமிருப்ப பல அன்பர்கள் அச்சிடுவித்துத் தரல்வேண்டு மென வேண்டிக் கொண்டனர். அப்பொழுது ஸ்ரீ வேதாரணி யேசுவரப் பெருமானுடைய திருவருளை முன்னிட்டு அச்சிடுவித் தேன். சிவநேயத் தவச்செல்வர்கள் அனைவரும் இப்புத்தகத்தினை வாங்கி விஷயங்களை உணர சிவபெருமானுடைய திருவருளை இறைஞ்சுகின்றேன்.

இங்ஙனம்,

மா. சோமா. முத்துமாணிக்க பட்டாரகர்.

சருக்க அட்டவணை.

		பக்கம்.
1.	தல விசிட்ட சருக்கம்	15
2.	இலிங்கோத்பத்திச் சருக்கம்	23
3.	மணிகர்ணிகைச் சருக்கம்	26
4.	வேதநதிச் சருக்கம்	29
5.	கோடி தீர்த்தச் சருக்கம்	34
6.	மணவாளச் சருக்கம்	37
7.	புவனிவிடங்கச் சருக்கம்	41
8.	விரகத்தி விமோசனச் சருக்கம்	43
9.	பிரமசாரிச் சருக்கம்	47
10.	கோலாகலச் சருக்கம்	49
11.	மகாபலிச் சருக்கம்	52
12.	சவுதாசச் சருக்கம்	54
13.	விசுவாமித்திரச் சருக்கம்	57
14.	குளகேசச் சருக்கம்	63
15.	தனபாலச் சருக்கம்	67
16.	தேவர் தொழுமன்றச் சருக்கம்	68
17.	தீர்த்த முத்திச் சருக்கம்	71

உ

ஸ்ரீ வீரகத்திச்சேதக விநாயகர் துணை.

ஸ்ரீ வேதாரணிய தல தேவாரங்கள்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்-திருவிராகம்-பண்-நட்டபாடை

சிலைதனை நடுவிடை நிறுவியொர் சினமலி யரவது கொடுதிவி
தலம்மலி சுரரசு ரர்களொலி சலசல கடல்கடை வுழிமிகு
கொலைமலி விடமெழ அவருடல் குலைதர வதுநுகர் பவனெழில்
மலைமலி மதில்புடை தழுவிய மறைவன மமர்தரு பரமனே. 1

கரமுத லியவவ யவமவை கடுவிட வரவது கொடுவரு
வரன்முறை யணிதரு மவனடல் வலிமிகு புலியத ளுடையின
னிரவலர் துயர்கெடு வகைநினை யிமையவர் புரமெழில் பெறவளர்
மரம்நிகர் கொடைமனி தர்கள்பயின் மறைவன மமர்தரு பரமனே.

இழைவளர் தருமுலை மலைமக ளினிதுறை தருமெழி லுருவினன்
முழையினின் மிகுதுயி லுறுமரி முசிவொடு மெழமுள ரியொடெழு
கழைநுகர் தருகரி யிரிதரு கயிலையின் மலிபவ னிருளுறும்
மழைதவழ் தருபொழி னிலவிய மறைவன மமர்தரு பரமனே. 3

நலமிகு திருவித ழியின்மலர் நகுதலை யொடுகன கியின்முகை
பலசுரம் நதிபட வரவொடு மதிபொதி சடைமுடி யினன்மிகு
தலம்நில வியமனி தர்களொடு தவமுயல் தருமுனி வர்கடம
மலமறு வகைமனம் நினைதரு மறைவன மமர்தரு பரமனே. 4

கதிமலி களிறது பிளிறிட வுரிசெய்த வதிகுண னுயர்பசு
பதியதன் மிசைவரு பசுபதி பலகலை யவைமுறை முறையுணர்
விதியறி தருநெறி யமர்முனி கணனொடு மிகுதவ முயல்தரும்
அதிநிபு ணர்கள்வழி படவளர் மறைவன மமர்தரு பரமனே. 5

கறைமலி திரிசிகை படையடல் கனல்மழு வெழுதர வெறிமறி
முறைமுறை யொலிதம ருகமுடை தலைமுகிழ் மலிகணி வடமுகம்
உறைதரு கரனுல கினிலுய ரொளிபெறு வகைநினை வொடுமலர்
மறையவன் மறைவழி வழிபடு மறைவன மமர்தரு பரமனே. 6

இருநில னதுபுன லிடைமடி தரவெரி புகவெரி யதுமிகு
பெருவளி யினிலவி தரவளி கெடவிய னிடைமுழு வதுகெட

விருவர்க ளுடல்பொறை பொடுதிரியெழிலுரு வுடையவனினமலர்
மருவிய வறுபத மிசைமுரன் மறைவன மமர்தரு பரமனே. 7

சனம்வெரு வுறவரு தசமுக னொருபது முடியொடு மிருபது
கனமரு வியபுய நெரிவகை கழலடி யிலோர்விர னிறுவின
வினமலி கணநிசி சரன்மகிழ் வுறவருள் செய்தகரு ணையனென
மனமகிழ் வொடுமறை முறையுணர் மறைவன மமர்தரு பரமனே 8

அணிமலர் மகள்தலை மகனய னறிவரி யதோர்பரி சினிலெரி
திணிதரு திரளுரு வளர்தர வவர்வெரு வுறலொடு துதிசெய்து
பணியுற வெளியுரு வியபர னவனுரை மலிகடல் திரளெழும்
மணிவள ரொளிவெயின் மிகுதரு மறைவன மமர்தரு பரமனே. 9

இயல்வழி தரவிது செலவுற வினமயி லிறகுறு தழையொடு
செயன்மரு வியசிறு கடமுடி யடைகையர் தலைபறி செய்துதவ
முயல்பவர் துவர்பட முடல்பொதி பவரறி வருபர னவனணி
வயலினில் வளைவள மருவிய மறைவன மமர்தரு பரமனே. 10

வசையறு மலர்மக ளிலவிய மறைவன மமர்பர மனைநினை
பசையொடு மிகுகலை பலபயில் புலவர்கள் புகழ்வழி வளர்தரு
மிசையமர் கழுமல நகரிறை தமிழ்விர கனதுரை யியல்வல
விசைமலி தமிழொரு பதும்வல அவருல கினிலெழில் பெறுவரே. 11

பண்-இந்தளம்-கதவு அடைக்கப் பாடியது

சதுரம்மறை தான்துதி செய்து வணங்கும்
மதுரம்பொழில் சூழ்மறைக் காட்டுறை மைந்தா
இதுநன்கிறை வைத்தருள் செய்க வெனக்குன்
கதவந்திருக் காப்புக்கொள் ளுங்கருத் தாலே. 1

சங்கந்தர ளம்மவை தான்கரைக் கெற்றும்
வங்கக்கடல் சூழ்மறைக் காட்டுறை மைந்தா
மங்கையுமை பாகமு மாகவி தென்கொல்
கங்கைசடை மேலடை வித்த கருத்தே. 2

குரவங்குருக் கத்திகள் புன்னைகள் ஞாழல்
மருவும்பொழில் சூழ்மறைக் காட்டுறை மைந்தா
சிரமும்மல ருந்திகழ் செஞ்சடை தன்மே
லரவம்மதி யோடடை வித்த வழகே. 3

படர்செம்பவ ளத்தொடு பன்மலர் முத்த
மடலம்பொழில் சூழ்மறைக் காட்டுறை மைந்தா
வுடலம்முமை பங்கம தாகியு மென்கொல்
கடனஞ்சமு தாவது வுண்ட கருத்தே. 4

வானோர்மறை மாதவத் தோர்வழி பட்ட
தேனார்பொழில் சூழ்மறைக் காட்டுறை செல்வா
ஏனோர்தொழு தேத்த விருந்தநீ யென்கொல்
கானார்கடு வேடுவ னான கருத்தே. 5

பலகாலங்கள் வேதங்கள் பாதங்கள் போற்றி
மலரால்வழி பாடுசெய் மாமறைக் காடா
உலகேழுடை யாய்கடை தோறுமுன் னென்கொல்
தலைசேர்பலி கொண்டதி லுண்டது தானே. 6

வேலாவலை யத்தய லேமிளிர் வெய்துஞ்
சேலார்திரு மாமறைக் காட்டுறை செல்வா
மாலோடய னிந்திர னஞ்சமு னென்கொல்
காலார்சிலைக் காமனைக் காய்ந்த கருத்தே. 7

கலங்கொள் கடலோதமு லாவுங்க ரைமேல்
வலங்கொள் பவர்வாழ்த் திசைக்கும் மறைக்காடா
இலங்கையுடை யானடர்ப் பட்டிட ரெய்த
அலங்கல்விர லூன்றிய ருள்செய்த வாறே. 8

கோனென் றுபல்கோடி யுருத்திரர் போற்றுந்
தேனம்பொழில் சூழ்மறைக் காட்டுறை செல்வா
ஏனங்கழு கானவ ருன்னைமு னென்கொல்
வானந்தல மண்டியுங் கண்டிலா வாறே. 9

வேதம்பல வோமம் வியந்தடி போற்ற
ஓதம்முல வும்மறைக் காட்டி லுறைவாய்
ஏதில்சமண் சாக்கியர் வாக்கிவை யென்கொல்
ஆதரொடு தாமலர் தூற்றிய வாறே. 10

காழிந்நக ரான்கலை ஞானசம் பந்தன்
வாழிம்மறைக் காடனை வாய்ந்தறி வித்த
ஏழின்னிசை மாலையீ ரைந்திவை வல்லார்
வாழியுல கோர்தொழ வானடை வாரே. 11

பண் - பியந்தைக்காந்தாரம்

பொங்கு வெண்மணற்கானற் பொருகடற்றிரைதவழ் முத்தங்
கங்கு லாரிருள்போழுங் கலிமறைக்காடமர்ந் தார்தாந்
திங்கள் சூடினரேனுந் திரிபுரமெரித்தன ரேனு
மெங்கு மெங்கள்பிரானார் புகழலதிகழ்பழி யிலரே. 1

கூனி ளம்பிறைசூடிக் கொடுவரித்தோ லுடை யாடை
யானி லங்கிளரைந்து மாடுவர்பூண்பது மரவங்
கான லங்கழியோதங் கரையொடுகதிர்மணி ததும்பத்
தேன லங்கமழ்சோலை திருமறைக்காடமர்ந் தாரே. 2

நுண்ணி தாய்வெளிதாகி நூல்கிடந்திலங்குபொன் மார்பிற்
பண்ணி யாழெனமுரலும் பனிமொழியுமையொரு பாகன்
தண்ணி தாயவெள்ளருவி சலசலநுரைமணி ததும்பக்
கண்ணி தானுமோர்பிறையார் கலிமறைக்காடமர்ந் தாரே. 3

ஏழை வெண்குருகயலே யிளம்பெடைதனதெனக் கருதித்
தாழை வெண்மடற்புல்குந் தண்மறைக்காடமர்ந் தார்தாம்
மாழை யங்கயலொண்கண் மலைமகள்கணவன தடியின்
நீழ லேசரணாக நினைபவர்வினைநலி விலரே. 4

அரவம் வீக்கியஅரையும் அதிர்கழல்தழுவிய அடியும்
பரவ நாஞ்செய்தபாவம் பறைதரவருள்பவர் பதிதான்
மரவ நீடுயர்சோலை மழலைவண்டியாழ்செயு மறைக்காட்
டிரவு மெல்லியும்பகலு மேத்துதல்குணமென லாமே. 5

பல்லி லோடுகையேந்திப் பாடியுமாடியும் பலிதே
ரல்லல் வாழ்க்கையரேனு மழகியதறிவரெம் மடிகள்
புல்ல மேறுவர்பூதம் புடைசெலவுழிதவர்க் கிடமாம்
மல்கு வெண்டிரையோத மாமறைக்காடது தானே. 6

நாகந் தான்கயிறாக நளிர்வரையதற்குமத் தாகப்
பாகந் தேவரொடசுரர் படுகடலளறெழக் கடைய
வேக நஞ்செழவாங்கே வெருவொடுமிரிந்தெங்கு மோட
ஆகந் தன்னில்வைத்தமிர்த மாக்குவித்தான்மறைக் காடே. 7

தக்கன்வேள்வியைத்தகர்த்தோன்றனதொருபெருமையையோரான்
மிக்கு மேற் சென்றுமலையை யெடுத்தலுமலைமக ணடுங்க
நக்குத் தன்றிருவிரலா லூன்றலுநடுநடுத் தரக்கன்
பக்க வாயும்விட்டலறப் பரிந்தவன் பதிமறைக் காடே. 8

விண்ட மாமலரோனும் விளங்கொளியரவணை யானும்
பண்டுங் காண்பரிதாய பரிசினனவனுறை பதிதான்
கண்ட லங்கழியோதங் கரையொடுகதிர்மணி ததும்ப
வண்ட லங்கமழ்சோலை மாமறைக்காடது தானே. 9

பெரிய வாகியகுடையும் பீலியுமவைவெயிற் கரவாக்
கரிய மண்டைகையேந்திக் கல்லெனவுழிதருங் கழுக்க
ளரிய வாகவுண்டோது மவர்திறமொழிந்துநம் மடிகள்
பெரிய சீர்மறைக்காடே பேணுமின்மனமுடை யீரே. 10

மையு லாம்பொழில்சூழ்ந்த மாமறைக்காடமர்ந் தாரை
கையி னாற்றொழுதெழுவான் காழியுண்ஞானசம் பந்தன்
செய்த செந்தமிழ்ப்பத்துஞ் சிந்தையுட்சேர்க்கவல் லார்போய்ப்
பொய்யில் வானவரோடும் புகவலர்கொளவலர் புகழே. 11

திருவிராகம் - பண் - சாதாரி

கற்பொலி சுரத்தினெரி கானினிடை மாநடம தாடிமடவா
ரிற்பலி கொளப்புகுது மெந்தைபெரு மானதிட மென்பர்புவிமேன்
மற்பொலி கலிக்கடன் மலைக்குவடெ னத்திரைகொ ழித்தமணியை
விற்பொலி நுதற்கொடியி டைக்கணிகை மார்கவரும் வேதவனமே.

பண்டிரை பவப்புணரி யிற்கனக மால்வரையை நட்டரவினைக்
கொண்டுகயி றிற்கடைய வந்தவிட முண்டகுழ கன்றனிடமாம்
வண்டிரைநிழற்பொழிலின் மாதவியின் மீதணவுதென்றல்வெறியார்
வெண்டிரைகொள்செம்பவளமுந்துகடல்வந்தமொழிவேதவனமே.

காரியன்மெலோதிநதி மாதைமுடி வார்சடையில் வைத்துமலையார்
நாரியொரு பான்மகிழு நம்பருறை வென்பர்நெடு மாடமருகிற்
றேரியல்வி ழாவினொலி திண்பணில மொண்படக நாளுமிசையால்
வேரிமலி வார்குழனன் மாதரிசை பாடலொலி வேதவனமே. 3

நீறுதிரு மேனியின்மி சைத்தொளிபெ றத்தடவி வந்திடபமே
யேறியுல கங்கடொறும் பிச்சைநுக ரிச்சையரி ருந்தபதியாம்
ஊறுபொரு ளின்றமிழி யற்கிளவி தேருமட மாதருடனார்
வேறுதிசை யாடவர்கள் கூறவிசை தேறுமெழில் வேதவனமே. 4

கத்தரிகை துத்திரிக றங்குதுடி தக்கையொடி டக்கைபடகம்
மெத்தனையு லப்பில்கரு வித்திரள லம்பவிமை யோர்கள்பரச
வொத்தறமி தித்துநட மிட்டவொரு வர்க்கிடம தென்பருலகின்
மெய்த்தகைய பத்தரொடு சித்தர்கண்மிடைந்துகளும்வேதவனமே.

மாலைமதி வாளரவு கொன்றைமலர் துன்றுசடை நின்றுசுழலக்
காலையி லெழுந்தகதிர் தாரகைம டங்கவன லாடுமரனூர்
சோலையின்ம ரங்கடொறு மிண்டியின வண்டுமது வுண்டிசைசெய
வேலையொலி சங்குதிரை வங்கசுற வங்கொணரும் வேதவனமே. 6

வஞ்சக மனத்தவுணர் வல்லரண மன்றவிய வார்சிலைவளைத்
தஞ்சக மவித்தவம ரர்க்கமர னாதிபெரு மானதிடமாங்
கிஞ்சுக விதழ்க்கனிக ளூறியசெவ் வாயவர்கள் பாடல்பயில
விஞ்சக வியக்கர்முனி வக்கணநி றைந்துமிடை வேதவனமே. 7

முடித்தலைகள் பத்துடைமு ருட்டுருவ ரக்கனைநெ ருக்கிவிரலா
ரடித்தலமுன் வைத்தலம ரக்கருணை வைத்தவ னிடம்பலதுயர்
கெடுத்தலை நினைத்தறவி யற்றுதல்கி ளர்ந்துபுல வாணர்வறுமை
விடுத்தலை மதித்துநிதி நல்குமவர் மல்குபதி வேதவனமே. 8

வாசமலர் மேவியுறை வானுநெடு மாலுமறி யாதநெறியைக்
கூசுதல்செ யாதவம ணாதரொடு தேரர்குறு காதவரனூர்
காசமணி வார்கனக நீடுகடலோ டுதிரைவார் துவலைமேல்
வீசுவலை வாணரவை வாரிவிலை பேசுமெழில் வேதவனமே. 9

பந்தமுர வங்கடல்வ ளங்கெழுவு காழிபதி மன்னுகவுணி
வெந்தபொடி நீறணியும் வேதவன மேவுசிவ னின்னருளினாற்
சந்தமிவை தண்டமிழி னின்னிசையெ னப்பரவு பாடலுலகிற்
பந்தனுரைகொண்டுமொழிவார்கள்பயில்வார்களுயர்வானுலகமே.10

திருநாவுக்கரசு நாயனார் அருளிச்செய்த திருக்குறுந்தொகை

பண்ணி னேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே. 1

ஈண்டு செஞ்சடை யாகத்து ளீசரோ
மூண்ட கார்முகி லின்முறிக் கண்டரோ
ஆண்டு கொண்டநீ ரேயருள் செய்திடும்
நீண்ட மாக்கத வின்வலி நீக்குமே. 2

அட்டமூர்த்திய தாகிய வப்பரோ
துட்டர் வான்புரஞ் சுட்டசு வண்டரோ

பட்டங் கட்டிய சென்னிப் பரமரோ
சட்ட விக்கத வந்திறப் பிம்மினே 3

அரிய நான்மறை யோதிய நாவரோ
பெரிய வான்புரஞ் சுட்டசு வண்டரோ
விரிகொள் கோவண வாடைவி ருத்தரோ
பெரிய வான்கத வம்பிரி விக்கவே. 4

மலையில் நீடிருக் கும்மறைக் காடரோ
கலைகள் வந்திறைஞ் சுங்கழ லேத்தரோ
விலையின் மாமணி வண்ணவு ருவரோ
தொலைவி லாக்கத வந்துணை நீக்குமே. 5

பூக்குந் தாழைபு றணியரு கெலாம்
ஆக்குந் தண்பொழில் சூழ்மறைக் காடரோ
ஆர்க்குங் காண்பரி யீரடி கேளுமை
நோக்கிக் காணக் கதவைத் திறவுமே. 6

வெந்த வெண்பொடி பூசும்வி கிர்தரோ
அந்த மில்லி யணிமறைக் காடரோ
யெந்தை நீயடி யார்வந் திறைஞ்சிட
இந்த மாக்கத வம்பிணி நீக்குமே. 7

ஆறு சூடும ணிமறைக் காடரோ
கூறு மாதுமைக் கீந்த குழகரோ
ஏற தேறிய வெம்பெருமா னிந்த
மாறி லாக்கத வம்வலி நீக்குமே. 8

சுண்ண வெண்பொடி பூசுஞ்சு வண்டரோ
பண்ணி யேறுகந் தேறும்ப ரமரோ
வண்ண லாதிய ணிமறைக் காடரோ
திண்ண மாக்கத வந்திறப் பிம்மினே. 9

விண்ணுளார் விரும்பி யெதிர் கொள்ளவே
மண்ணுளார் வணங்கும் மறைக் காடரோ
கண்ணி னு லுமைக் காணக்கத வினைத்
திண்ணமாகத் திறந்தருள் செய்ம் மினே. 10

அரக்க னைவிர லாலடர்த் திட்டநீர்
இரக்க மொன்றிலீ ரெம்பெரு மானிரே
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ
சரக்க விக்கத வந்திறப் பிம்மினே. 11

திருநேரிசை.

இந்திர னோடுதேவ ரிருடிக ளேத்துகின்ற
சுந்தர மானார்போலுந் துதிக்கலாஞ் சோதிபோலுஞ்
சந்திர னோடுங்கங்கை யரவையுஞ் சடையுள்வைத்து
மந்திர மானார்போலு மாமறைக் காடனாரே. 1

தேயன நாடராகித் தேவர்கள் தேவர்போலும்
பாயன நாடறுக்கும் பத்தர்கள் பணியவம்மின்
காயன நாடுகண்டங் கதனுளார் காளகண்டர்
மாயன நாடர்போலு மாமறைக் காடனாரே. 2

அறுமையிவ் வுலகுதன்னை யாமெனக் கருதிநின்று
வெறுமையின் மனைகள்வாழ்ந்து வினைகளா னலிவுணாதே
சிறுமதி யரவங்கொன்றை திகழ்தரு சடையுள்வைத்து
மறுமையு மிம்மையாவார் மாமறைக் காடனாரே. 3

கால்கொடுத் திருகையேற்றிக் கழிநிறைத் திறைச்சிமேய்ந்து
தோல்படுத் துதிரநீராற் சுவரெடுத் திரண்டுவாசல்
ஏல்வுடைத் தாவமைத்தங் கேழுசா லேகம்பண்ணி
மால்கொடுத் தாவிவைத்தார் மாமறைக் காடனாரே. 4

விண்ணினார் விண்ணின்மிக்கார் வேதங்கள் விரும்பியோதப்
பண்ணினார் கின்னரங்கள் பத்தர்கள் பாடியாடக்
கண்ணினார் கண்ணினுள்ளே சோதியாய் நின்றவெந்தை
மண்ணினார் வலங்கொண்டேத்து மாமறைக் காடனாரே. 5

அங்கையு ளனலும்வைத்தா ரறுவகைச் சமயம்வைத்தார்
தங்கையில் வீணைவைத்தார் தம்மடி பரவவைத்தார்
திங்களைக் கங்கையோடு திகழ்தரு சடையுள்வைத்தார்
மங்கையைப் பாகம்வைத்தார் மாமறைக் காடனாரே. 6

கீதராய்க் கீதங்கேட்டுக் கின்னரந் தன்னைவைத்தார்
வேதராய் வேதமோதி விளங்கிய சோதிவைத்தார்
ஏதராய் நட்டமாடி யிட்டமாய்க் கங்கையோடு
மாதையோர் பாகம்வைத்தார் மாமறைக் காடனாரே. 7

கனத்தினார் வலியுடைய கடிமதி லரணமூன்றுஞ்
சினத்தினுட் சினமாய்நின்று தீயெழச் செற்றார்போலுந்
தனத்தினைத் தவிர்ந்துநின்று தம்மடி பரவுவார்க்கு
மனத்தினுண் மாசுதீர்ப்பார் மாமறைக் காடனாரே. 8

தேசனைத் தேசன்றன்னைத் தேவர்கள் போற்றிசைப்பார்
வாசனை செய்துநின்று வைகலும் வணங்குமின்கள்
காசினைக் கனலையென்றுங் கருத்தினில் வைத்தவர்க்கு
மாசினைத் தீர்ப்பர்போலு மாமறைக் காடனாரே. 9

பிணியுடை யாக்கைதன்னைப் பிறப்பறுத் துய்யவேண்டிற்
பணியுடைத் தொழில்கள்பூண்டு பத்தர்கள் பற்றினாலே
துணிவுடை யரக்கனோடி யெடுத்தலுந் தோகையஞ்ச
மணிமுடி பத்திறுத்தார் மாமறைக் காடனாரே. 10

தேரையு மேல்கடாவித் திண்ணமாத் தெழித்துநோக்கி
யாரையு மேலுணரா வாண்மையான் மிக்கான்றன்னைப்
பாரையும் விண்ணுமஞ்சப் பரந்ததோள் முடியடர்த்துக்
காரிகை யஞ்சலென்பார் கலிமறைக் காடனாரே. 1

முக்கிமுன் வெகுண்டெடுத்த முடியுடை யரக்கர்கோனை
நக்கிருந் தூன்றிச்சென்னி நாண்மதி வைத்தவெந்தை
யக்கர வாமைபூண்ட வழகனார் கருத்தினாலே
தெக்குநீர்த் திரைகள்மோதுந் திருமறைக் காடனாரே. 2

மிகப்பெருத் துலாவமிக்கா னக்கொரு தேர்கடாவி
யகப்படுத் தென்றுதானு மாண்மையால் மிக்கரக்க
னுகைத்தெடுத் தான்மலையை யூன்றலு மவனையாங்கே
நகைப்படுத் தருளினானார் நான்மறைக் காடுதானே. 3

அந்தரந் தேர்கடாவி யாரிவ னென்றுசொல்லி
யுந்தினான் மாமலையை யூன்றலு மொள்ளரக்கன்
பந்தமாந் தலைகள்பத்தும் வாய்கள்விட் டலறிவீழச்
சிந்தனை செய்துவிட்டார் திருமறைக் காடனாரே. 4

தடுக்கவுந் தாங்கவொண்ணாத் தன்வலி யுடையனாகிக்
கடுக்கவோர் தேர்கடாவிக் கையிரு பதுகளாலு
மெடுப்பனா னென்னப்பண்ட மென்றெடுத் தானையேங்க
வடுக்கவே வல்லனாரா மணிமறைக் காடுதானே. 5

நாண்முடிக் கின்றசீரான் நடுங்கியே மீதுபோகான்
கோள்பிடித் தார்த்தகையான் கொடியன்மா வலியனென்று
நீண்முடிச் சடைபர்சேரு நீள்வரை யெடுக்கலுற்றான்
றோள்முடி நெரியவைத்தார் தொன்மறைக் காடனாரே. 6

பத்துவா யிரட்டிக்கைக ளுடையன்மா வலியனென்று
பொத்திவாய் தீமைசெய்த பொருவலி யரக்கர்கோனைக்
கத்திவாய் கதறவன்று கால்விர லூன்றியிட்டார்
முத்துவாய்த் திரைகள்மோது முதுமறைக் காடனாரே. 7

பக்கமே விட்டகையான் பாங்கிலா மதியனாகிப்
புக்கநன் மாமலைக்கீழ்ப் போதுமா றறியமாட்டான்
மிக்கமா மதிகள்கெட்டு வீரமு மிழந்தவாறே
நக்கன பூதமெல்லா நான்மறைக் காடனாரே. 8

நாணஞ்சு கையனாகி நன்முடி பத்தினோடு
பாணஞ்சு முன்னிழந்து பாங்கிலா மதியனாகி
நீணஞ்சி தானுணரா நின்றெடுத் தானையன்று
வேணஞ்சு கைகள் செய்தா ரெழின்மறைக் காடனாரே. 9

கங்கைநீர்ச் சடையுள்வைக்கக் காண்டலு மங்கையூடத்
தென்னையான் றேர்கடாவிச் சென்றெடுத் தான்மலையை
முன்கைமா நரம்புவெட்டி முன்னிருக் கிசைகள்பாட
அங்கைவா ளருளினானா ரணிமறைக் காடுதானே. 10

திருக்குறுந்தொகை.

ஓத மாகடல் பாவியு லகெலா
மாத ரார்வலங் கொண்மறைக் காடரைக்
காதல் செய்து கருதப்படு மவர்
பாத மேத்தப் பறையுநம் பாவமே. 1

பூக்குந் தாழை புறணி யருகெலாம்
ஆக்கந் தானுடை மாமறைக் காடரோ
ஆர்க்குங் காண்பரி யீரடி யார்தம்மை
நோக்கிக் காண்பது நும்பணி செய்யிலே. 2

புன்னை ஞாழல் புறணி யருகெலா
மன்னி னார்வலங் கொண்மறைக் காடரோ
அன்ன மென்னடை யாளையோர் பாகமாச்
சின்ன வேட முகப்பது செல்வமே. 3

அட்ட மாமலர் சூடி யடும்பொடு
வட்டப் புன்சடை மாமறைக் காடரோ
நட்ட மாடியு நான்மறை பாடியும்
இட்ட மாக விருக்குமி டமதே. 4

நெய்த லாம்பல் நிறைவயல் சூழ்தரு
மெய்யி னூர்வலங் கொண்மறைக் காடரோ
தையல் பாகங்கொண் டீர்கவர் புன்சடைப்
பைதல் வெண்பிறை பாம்புடன் வைப்பதே. 5

துஞ்சும் போதுந் துயிலின்றி யேத்துவார்
வஞ்சின் றிவலங் கொண்மறைக் காடரோ
பஞ்சின் மெல்லடிப் பாவை பலிகொணர்ந்
தஞ்சி நிற்பது மைந்தலை நாகமே. 6

விண்ணு ளார்விரும் பியெதிர் கொள்ளவே
மண்ணு ளார்வணங் கும்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்மினே. 7

திருவி னூர்செல்வ மல்கு விழாவணி
மருவி னூர்வலங் கொண்மறைக் காடரோ
உருவி னாளுமை யானையோர் பாகமாய்
மருவி னாய்கங்கை யைச்சென்னி தன்னிலே. 8

சங்குவந் தலைக்குந் தடங் கானல்வாய்
வங்க மார்வலங் கொண்மறைக் காடரோ
கங்கை செஞ்சடை வைப்பது மன்றியே
யங்கை யில்லன லேந்த லழகிதே. 9

குறைக்காட் டான்விட்ட கோகுத்த மாமலை
யிறைக்காட் டியெடுத் தான்றலை யீரைந்து
மறைக்காட் டானிறை யூன்றலும் வாய்விட்டான்
இறைக்காட் டாயெம்பி ரானுனை யேத்தவே. 10

திருத்தாண்டகம்

தூண்டு சுடரனைய சோதிகண்டாய் தொல்லமரர் சூளா மணி தான்கண்டாய், காண்டற்கரிய கடவுள்கண்டாய் கருதுவார்க் காற்ற வெளியான்கண்டாய், வேண்டுவார் வேண்டுவதே யீவான் கண்டாய் மெய்ந்நெறிகண்டாய் விரதமெல்லாம், மாண்ட மனத் தார் மனத்தான்கண்டாய் மறைக்காட்டுறையு மணாளன்றானே. 1

கைகிளரும் வீணை வலவன்கண்டாய் காபாலிகண்டாய் திக ழுஞ்சோதி, மெய்கிளரு ஞான விளக்குக்கண்டாய் மெய்யடியா ருள்ளத்து வித்துக்கண்டாய், பைகிளரு நாகமசைத்தான்கண்டாய்

பராபரன்கண்டாய் பாரூரான்கண்டாய், வைகிளருங் கூர்வாட் படையான்கண்டாய் மறைக்காட்டுறையு மணாளன்றானே. 2

சிலந்திக் கருண்முன்னஞ் செய்தான்கண்டாய் திரிபுரங்கள் தீ வாய்ப் படுத்தான்கண்டாய், நிலந்துக்க நீர்வளிதீ யானுன்கண்டாய் நிருபியரூபியுமாய் நின்றான்கண்டாய், சலந்துக்க சென்னிச் சடை யான்கண்டாய் தாமரையான் செங்கண்மால்தானேகண்டாய், மலந் துக்க மால்விடையொன் றூர்ந்தான்கண்டாய் மறைக்காட்டுறையு மணாளன்றானே. 3

கள்ளிமுதுகாட்டி லாடிகண்டாய் காலனையுங்காலாற் கடந் தான்கண்டாய், புள்ளியுழைமானின் றோலான்கண்டாய் புலியுரிசே ராடைப் புனிதன்கண்டாய், வெள்ளிமிளிர் பிறைமுடிமேற் சூடி கண்டாய் வெண்ணீற்றான்கண்டாய் நஞ்செந்தின்மேய, வள்ளிமணா ளர்க்குத் தாதைகண்டாய் மறைக்காட்டுறையு மணாளன்றானே. 4

மூரிமுழங்கொலிநீ ரானுன்கண்டாய் முழுத்தழல்போன்மேனி முதல்வன் கண்டாய், ஏரிநிறைந்தனைய செல்வன்கண்டா யின்னடி யார்க்கின்பம் விளைப்பான்கண்டாய், ஆரியன்கண்டாய் தமிழன் கண்டா யண்ணாமலையுறையு மண்ணல்கண்டாய் வாரிமதகளிறே போல்வான்கண்டாய் மறைக்காட்டுறையு மணாளன்றானே. 5

ஆடன்மால்யானை யுரித்தான்கண்டாய் அகத்தியான்பள்ளி யமர்ந்தான்கண்டாய், கோடியான்கண்டாய் குழகன்கண்டாய் குளி ராரூர்க்கோயிலாக் கொண்டான்கண்டாய், நாடியநன்பொருள்க ளானுன்கண்டாய் நன்மையோடிம்மைமற் றம்மையெல்லாம், வாடியவாட்டம் தவிர்ப்பான்கண்டாய் மறைக்காட்டுறையு மணா ளன்றானே. 6

வேலைசேர்நஞ்ச மிடற்றான்கண்டாய் விண்டடவுபூங்கயிலை வெற்பன்கண்டாய், ஆலைசேர்வேள்வி யழித்தான்கண்டா யமரர் கடாமேத்து மண்ணல்கண்டாய், பானெய்சேரானஞ்சு மாடிகண் டாய்பருப்பதத்தான்கண்டாய்பரவைமேனி, மாலையோர்கூறுடைய மைந்தன்கண்டாய் மறைக்காட்டுறையு மணாளன்றானே. 7

அம்மையயக்கு மமிர்துகண்டாய் அந்தேன்றெளிகண்டாய் ஆக்கஞ்செய்திட், டிம்மையயக்குமிறைவன்கண்டா யென்னெஞ்சே யுன்னி யினியான்கண்டாய், மெய்ம்மையே ஞானவிளக்குக்கண் டாய் வெண்காடன்கண்டாய் வினைகள்போக, மம்மாறுக்கும் மருந்துகண்டாய் மறைக்காட்டுறையு மணாளன்றானே. 8

மூலநோய்தீர்க்கு முதல்வன்கண்டாய் முத்தமிழுநான்மறையு மானான்கண்டாய், ஆலின்கீழ்நால்வர்க் கறத்தான்கண்டா யாதியு மந்தமு மானான்கண்டாய், பாலவிருத்தனு மானான்கண்டாய் பவளத்தடவரையே போல்வான்கண்டாய், மாலைசேர்கொன்றை மலிந்தான்கண்டாய் மறைக்காட்டுறையு மணாளன்றானே. 9

அயனவனுமாலு மறியாவண்ண மாரழலாய்நீண்டுகந்த வண்ணல்கண்டாய், துயரிலங்கைவேந்தன் றுலங்கவன்று சோதிவிரலா லுற வைத்தான்கண்டாய், பெயரவர்க்குப்பேரருள்கள் செய்தான்கண்டாய் பேரும்பெரும்படையோ டீந்தான்கண்டாய், மயருறு வல்வினைநோய் தீர்ப்பான்கண்டாய் மறைக்காட்டுறையு மணாளன்றானே. 10

சுந்தரமூர்த்தி நாயனார் - பண் - காந்தாரம்.

யாழைப்பழித் தன்னமொழி மங்கையொரு பங்கன்
பேழைச்சடை முடிமேற்பிறை வைத்தானிடம் பேணில்
தாழைப்பொழி லூடேசென்று பூழைத்தலை நுழைந்து
வாழைக்கனி கூழைக்குரங் குண்ணும்மறைக் காடே. 1

சிகரத்திடை யிளவெண்பிறை வைத்தானிடந் தெரியில்
முகரத்திடை முத்தின்னொளி பவளத்திர ளோதத்
தகரத்திடை தாழைத்திரண் ஞாழற்றிரள் நீழன்
மகரத்தொடு சுறவங்கொணர்ந் தெற்றும்மறைக் காடே. 2

அங்கங்களு மறைநான்குடன் விரித்தானிட மறிந்தோம்
தெங்கங்களு நெடும்பெண்ணையும் பழம்வீழ்மணற் படப்பைச்
சங்கங்களு மிலங்கிப்பியும் வலம்புரிகளு மிடறி
வங்கங்களு முயர்கூம்பொடு வணங்கும்மறைக் காடே. 3

நரைவிரவிய மயிர்தன்னொடு பஞ்சவ்வடி மார்பன்
உரைவிரவிய வுத்தமனிட முணரல்லுறு மனமே
குரைவிரவிய குலைசேகரக் கொண்டற்றலை விண்ட
வரைபுரைவன திரைபொருதிழிந் தெற்றும்மறைக் காடே. 4

சங்கைப்பட நினையாதெழு நெஞ்சேதொழு தேத்தக்
கங்கைச்சடை முடியுடையவர்க் கிடமாவது பரவை
அங்கைக்கட லருமாமணி யுந்திக்கரைக் கேற்ற
வங்கத்தொடு சுறவங்கொணர்ந் தெற்றும்மறைக் காடே. 5

அடல்விடையினன் மழுவாளினன் அலராலணி கொன்றைப்
படருஞ்சடை முடியுடையவர்க் கிடமாவது பரவைக்
கடலிடையிடை கழியருகினிற் கடிநாறுதன் கைதை
மடலிடையிடை வெண்குருகெழு மணிநீர்மறைக் காடே. 6

முளைவளரிள மதியுடையவர் முன்செய்தவல் வினைகள்
களைகளைந்தெனை யாளல்லுறு கண்டன்னிடஞ் செந்நெல்
வளைவிளைவயற் கயல்பாய்தரு குணவார்மணற் கடல்வாய்
வளைவளையொடு சலஞ்சலங்கொணர்ந் தெற்றும்மறைக்காடே. 7

நலம்பெரியன சுரும்பார்ந்தன நங்கோனிட மறிந்தோம்
கலம்பெரியன சாருங்கடற் கரைபொருதிழி கங்கைச்
சலம்புரிசடை முடியுடையவர்க் கிடமாவது பரவை
வலம்புரியொடு சலஞ்சலங்கொணர்ந் தெற்றும்மறைக் காடே. 8

குண்டாடியுஞ் சமணுடியுங் குற்றுடுக்கையர் தாமும்
கண்டார்கண்ட காரணம்மவை கருதாதுகை தொழுமின்
எண்டோளினன் முக்கண்ணின னேழிசையினன் அறுகால்
வண்டாடுதன் பொழில்சூழ்ந்தெழு மணிநீர்மறைக் காடே. 9

பாரூர்பல புடைசூழ்வள வயல்நாவலர் வேந்தன்
வாரூர்வன முலையாளுமை பங்கன்மறைக் காட்டை
ஆரூரன தமிழ்மாலைகள் பாடும்மடித் தொண்டர்
நீரூர்தரு நிலனேடுயர் புகழாகுவர் தாமே. 10

திருச்சிற்றம்பலம்.

உ

ஸ்ரீ வேதாரணிய புராண வசன சங்கிரகம்.

புண்ணிய பூமியாகிய இந்நிலவுலகத்தின்கண்ணே பலவிதமான வளப்பங்களினாலே சிறந்து விளங்கிய ஸ்ரீ வேதாரணிய க்ஷேத்திரத்திலே சிவசந்நிதான தேவபக்தஜன சபா மண்டபத்திலே சிவபெருமானுடைய மாசிமீ மஹோத்சவ தெரிசனஞ் செய்து சூழ்ந்திருந்த உத்தம பக்தஜன மத்தியில் அருணந்தி தேவர் என்பவர் எழுந்து இந்த வேதாரணிய க்ஷேத்திர மாகாத்மியத்தை பரஞ்சோதி முனிவர் தமிழினாலே சொல்லல் வேண்டும் என்று கேட்ட வழியே சொல்லுகின்றேன் என்று சொல்லத் தொடங்கினார்.

தல விசிட்டச் சருக்கம்

அநாதிமலமுத்த பரமபதியாகிய சிவபெருமானைத் தங்களுடைய இருதய கமலத்தில் தியானஞ் செய்து யாகாதி கிருத்தியங்களைச் செய்து வாழ்ந்துகொண்டிருக்கின்ற சவுனகாதி நைமிசாரணிய வாசிகளாகிய முனிபுங்கவர்கள் ஒருங்கு சேர்ந்து உத்தமோத்தமமாகிய சர்வ சிவபுராணங்களையு மாராய்ந்து சொல்லத்தக்க சூதமகா முனிவரை நோக்கி ஒ முனி சிரேஷ்டரே! இம்மை மறுமைப் பயன்களைத் தரத்தக்க அநேக சிவக்ஷேத்திர விசேஷங்களை யநுக்கிரகம் பண்ணினீர். அவைகளுள் நான்கு வேதங்களும் பூசித்து இட்டசித்தி யடைந்த வேதாரணிய க்ஷேத்திர விசேஷம் அடங்கவில்லை. ஆதலாலதைச் சொல்லியருள வேண்டும் என்று வேண்டவே, சூதமகரிஷி மகிழ்ந்து ஒ முனிபுங்கவர்களே! உங்களாலே கேழ்க்கப்பட்ட வேதாரணிய க்ஷேத்திர விசேஷமானது முன்னொரு காலத்திலே கிருபாநிதியாகிய பரமசிவன் விஷ்ணுமூர்த்திக்கு அநுக்கிரகம் பண்ண அவர் வேதவியாசருக்குச் சொல்ல அவர் எனக்குச் சொன்ன பிரகாரம் சொல்லுகின்றேன் கேட்பீர்களாக.

அளவில்லாத துன்பங்களைப் போக்கிப் பலவிதமான இன்பங்களைத் தரத்தக்கது. புண்ணிய க்ஷேத்திரங்களுள் சிரோரத்னமாய்

விளங்குவது. போக மோக்ஷங்களைத் தரத்தக்கது. இந்த மண்ணுலகமல்லாது எல்லா உலகங்களுங் கொண்டாடத்தக்கது. நினைக்கின்றவர்கள், துதிக்கின்றவர்கள், தரிசிக்கின்றவர்கள் எல்லா உலகத்தவர்களாலேயும் வணங்கப்பெற்று சிவபெருமானுடைய திருவடியையும் அடைவார்கள். யாகந் தவந் தானமிவை பலவாகச் செய்யினும், வேதாரணியம் என்று ஒருதரம் நினைத்த புண்ணிய பலனின் பதினறில் ஒரு பங்குக்கு ஒவ்வாதாகும். ஒருதரம் நினைத்த வளவிலே, கொலை முதலிய பஞ்சமகா பாதகங்களைப் போக்கும் அங்குள்ள வேதநதி என்னுந் தீர்த்தத்தில் ஒருமுறை ஸ்நானஞ் செய்தவர்கள் உத்தமமான பெரிய க்ஷேத்திரங்களில் பத்து வருஷம் வாசஞ்செய்து பெருந்தவங்கள் செய்த பலனை யடைவார்கள். வேதநதி, மணிகர்ணிகை, கோடிதீர்த்தம் மூன்றிலும் ஸ்நானஞ் செய்து சிவபெருமானையுந் தெரிசித்தால் நிச்சயமாக நிரதிசய வின்ப மோக்ஷத்தை யடைவார்கள். சந்திர புஷ்கரணி, சூர்ய புஷ்கரணி என்னுந் தீர்த்தங்களில் சோமவாரம், பானுவாரத்தில் ஸ்நானஞ் செய்தவர்கள், சந்திரபதம், சூரியபத மிவைகளில் வெகு நாளிருந்து அப்பால் மோக்ஷத்தை அடைவார்கள். அகஸ்தியாச்சிரமத்திலே அம்முனிவராலே யாக்கப்பட்ட தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்தவர்கள் அளவில்லாத சுகத்தை அநுபவிப்பார்கள். வேதாமிர்தத்திலே ஸ்நானஞ்செய்தால் மோக்ஷத்தை அடைவார்கள் விசுவாமித்திர தீர்த்தத்திலே ஸ்நானஞ் செய்தால் எந்தவிதமான பிராயச் சித்தங்களாலும் நீங்கப்படாத மஹாபாபங்களும் நீங்கிவிடும். கேட்டீர்களோ முனிவர்களே அந்த விசுவாமித்திராசிரமத்திலே ஒரு வன்னி விருக்ஷமிருக்கிறது அவ்விருக்ஷத்தில் உதிர்கின்ற இலையை சிரசிலே தரித்துக்கொண்டவர்கள் நோய்களினாலும் வேறுவிதமான துன்பங்களினாலும் வருந்தமாட்டார்கள். அம்மரத்தடியிலிருந்து மந்திரங்களை செபஞ் செய்தால் ஒன்று அநந்தமாய்ச் சித்தியாகும். அவ்விடத்திலுள்ள மண்ணை சிரத்திலே கிள்ளிவைத்துக் கொண்டவர்கள் மோக்ஷத்தை அடைவார்கள். அவ்விடத்தில் அன்னதானஞ் செய்தாலுஞ் சிராத்தஞ் செய்தாலுஞ் சீவன் முத்தராவார்கள். மணிகர்ணிகா தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்தவர் அதன்கரையில் திலதானத்தையும் வேதநதியில் சுவர்னதானத்தையும் கோடி தீர்த்தத்தில் வெள்ளி தானத்தையும் வேதாமிர்தத்தில் பூமி தானத்தையுஞ் செய்தல் அளவிறந்த மேன்மையான பலன்களைத்தரும்.

குற்ற மற்ற முனி சிரேஷ்டர்களே ! வேதாரணிய க்ஷேத்திரத்துக்குள்ளேயிருக்கின்ற ஒடை, வாவி, கிணறு, பொய்கை, ஏரி, ஆறு, வாய்க்கால், தடாகம் முதலியனவன்றி தண்ணீர் தங்குஞ் சிறு குழி முதலியனவும் கங்கைக்குச் சமானமாகுமென்று நூல்கள்

முறையிடும். எவ்வளவு பெரிய யாகங்களுந் தானங்களும், விரதங்களும் இங்குள்ள தீர்த்தஸ்நான பலனுக்கொவ்வாது. காசியிலிறந்தவர்கள் மோக்ஷத்தை அடைவார்கள். திருவாரூரிலே பிறந்தவர்கள் மோக்ஷத்தை அடைவார்கள். சிதம்பரத்தை தரிசித்தவர்கள் மோக்ஷத்தை அடைவார்கள், வேதாரணியத்தில் தீர்த்த ஸ்நானஞ்செய்தவர்கள் மோக்ஷத்தை அடைவார்கள். ஆதலால் தீர்த்த விசேஷமிங்கே அதிகமாகும். எறும்பு ஈ முதலிய எந்த சீவராசிகளானாலும் இங்கே பிறந்தால் மறு பிறவியின்றி மோக்ஷத்தை அடையும் நல்ல தவத்தைச் செய்தவர்களுக்கல்லது வேறு பாபிகளுக்கு இந்த இடத்தில் விருப்பம் உண்டாகாது. ஒருமுறை இங்கு வருவார்களேயானால் அரியவினைகளினின்று நீங்குவார்கள். இரண்டாவது முறை வருவார்களானால் பதிபுண்ய சிரேட்டராவார்கள். மூன்றுமுறை வந்தால் சிவசாரூப முத்தி அடைவார்கள் என்றால் பலமுறை வருபவர்கள் பலன்கள் சொல்ல முடிந்ததன்று. விருப்பத்துடன் ஒரு இமைக்கூட்டளவு இருப்பார்களானால் அவர்கள் சர்வபாக்கிய சம்பன்னராய் அநுபவித்து அப்பால் சிவலோகப் பிராப்தியையும் அடைவார்கள் என்றால் ஏகாக்கிர சித்தத்துடன் இந்த இடத்தில் எப்போதும் வசிப்பவர்களுடைய மேன்மையை யார் சொல்லவல்லார்கள். எல்லைக்குள் வசிக்கின்ற சராசர உருவமெல்லாஞ் சிவவடிவமாகும். வேதாரணிய க்ஷேத்திரத்திலே இறக்கின்ற எந்த சீவர்களானாலும் அவர்களுக்குச் சிவபெருமான் வலது செவியிலே ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை உபதேசித்து மோக்ஷ சாம்ராஜ்யமடையச்செய்வார். எந்த இடத்திலே இறந்தவர்களேயாயினும் அவர்களுக்குத் தேகாந்தத்தில் செய்யுங் கிரியைகளை இங்கே செய்தால் அவர்களும் மோக்ஷமடைவார்கள். எங்கேயாவது இறந்தவர்களுடைய நகத்தையாயினும், மயிரையாயினும், எலும்பையாயினும் எல்லைப் புறத்திலே கொண்டு வந்து சேர்த்து விடுவார்களானால் அவர்களும் மோக்ஷமடைவார்கள். எந்த நாட்டிலேயானாலும் இருப்பவர்கள் அல்லது இறந்தவர்கள் பேரைச் சொல்லி தருப்பையை கூர்ச்சரூபமாக முடிந்து க்ஷேத்திரத்திலுள்ள எந்தத் தீர்த்தத்தில் நனைத்தாலுமவர்களும் மோக்ஷமடைவார்கள். அணுவளவானபொருளை இங்கே தானஞ்செய்தால் அது மகாமேருவளவு சொர்னதான பலனைத்தரும் என்றாற் பெரிய தானங்களைச் செய்த பலன்களைச் சொல்ல முடிந்ததன்று. வறியவர்களுக்கு கன்னிகாதானஞ் செய்துவைத்தவர்கள் கோடி தலைமுறைவரையில் சிவலோகத்திலே வாழ்வார். கோதானஞ் செய்தவர்கள் தம்முடைய ஏழுபிறவிகளில் செய்த பசுஹத்தி முதலிய பாவங்களிருப்பினும் நீங்கப்பெறுவார்கள். இளைத்தவர்களாய் ஏழையாய் இருக்கும் நோயாளிகளுக்கு நோய்நிவர்த்திக்க மருந்து உபயோகித்தவர்கள் சிவபதத்தை யடைவார்கள்.

சிவபெருமான் எழுந்தருளி யிருக்கின்ற ஆலயத்தில் சொற்பமாகவாவது பணி செய்வார்களானால் அது சிவபதத்தைக் கொடுக்குமென்று சொன்னால் பெருந்திருப்பணி செய்பவர் புண்ணியத்தை யாராலும் சொல்ல முடியாது. வேதாரணிய க்ஷேத்திரத்திலே சிவபெருமானுடைய முடியிலணியும்படியாக தனத்தைக் கொடுத்து எவலாளர் மூலமாகவோ தன்னுடைய சரீரப் பிரயாசையினாலோ நந்தவனத்தை யுண்டாக்கி வைத்தவர்கள் தேவலோகத்திலே போய் அங்குள்ள போகங்களைச் சொந்தமாக அனுபவிப்பார்கள். பஞ்சாக்ஷர மந்திரத்தை அங்கிருந்து ஒருமுறை தியானஞ் செய்தால் ஒரு லக்ஷமுறை செபித்த பலனை அடைவார்கள். பூமிதானஞ் செய்தவர்கள் இகபோகத்தையும், பரமோக்ஷத்தையும் அடைவார்கள். அந்தணர்களுக்கு மனையையும், மாதவர்கள் தங்கும்படி மடங்களையும் உண்டாக்கி வைத்தவர்களும் சிவலோகத்தை அடைவார்கள். கிரகஸ்த தருமங்கள் செய்துக்கொண்டு வாழும்படிக்கு கிரகத்தை உண்டாக்கிக் கொடுத்தவர்கள் பலனைச் சொல்ல முடியாது. தவத்தர்களுக்கும், அதிதிகளுக்கும், அங்கயீனர்களுக்கும், ஏழைகளுக்கும் அந்த இடத்திலே அன்னதானஞ் செய்தவர்கள் பலனைச் சிவபெருமானல்லது வேறு யாராலும் சொல்லமுடியாது. உச்சிப்பொழுதிலே பிச்சை ஏற்பவர்களுக்கு ஒருபிடி அன்னங் கொடுத்தவர்களைத் தரிசித்தவர்களுடைய பாபங்கள் முழுமையும் போய் பெரும் புண்ணியப் பலனாகிய இன்பத்தை அனுபவிப்பார்களேயானால் விரும்பியபடி உண்ணும்படி அன்னமளித்தவர்கள் பலனை யார்தான் சொல்லுவார்கள். வெய்யிற் காலத்திலே ஒரு பலம் நிறையளவாகிய தீர்த்தத்தை தாகசாந்தியின் பொருட்டுக் கொடுத்தவர்கள், சூரியக்கிரஹண புண்ய காலத்தில் உத்தம சிவக்ஷேத்திரங்களிலே மஹாமேருவளவு சொர்னதானஞ் செய்த பலனை அடைவார்களானால் தண்ணீர்ப் பந்தரை யமைத்து இச்சாபிரகாரம் தீர்த்த தானஞ் செய்பவர்களை இவ்விடத்திலேயே மனிதர் என்று சொல்லலாகாது. ஈச பதத்தை யடைந்தவராகச் சொல்லவேண்டும். மார்கழி மீ முழுமையும் புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்து விரதமாக இருந்து இயன்ற தானதருமங்களைச் செய்து வில்வ தளத்தினாலே சிவபெருமானுக்கு சகஸ்ரநாம அர்ச்சனை செய்து வந்தவர்கள் தம்முன் நூறு குலத்தவர்களுடன் சிவலோகத்தை அடைவார்கள். எல்லாம் அழிகின்ற பிரளய காலத்திலும் அந்த க்ஷேத்திரத்துக்கு அழிவு இல்லை. புனருற்பவ ஏதுவாகிய மாயையும் அங்கு ஒடுங்கி நிற்கும். வேதாரணிய க்ஷேத்திர யாத்திரை செய்யவிரும்புவர்கள் புறப்படும்போது முதலிலே சங்கல்பஞ்செய்து ஸ்நானஞ் செய்து விபூதி ருத்திராக்ஷ முதலிய சிவசின்னந் தரித்து ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை இடைவிடாது ஜபித்துக்கொண்டு ஒருகால போஜனஞ் செய்து விரதியாய் குடை

மிதியடி, வாகனம், தாம்பூலம் முதலியவைகளை உபயோகப்படுத்தாமல் அந்த இடத்திற்கு வந்து சரீர சுத்தி செய்து மணிகர்ணிகா தீர்த்தத்தில் சங்கல்பஞ் செய்து மேற்சொல்லிய தீர்த்தத்திலே எள்ளைப் போட்டு முதலிலே பைரவமூர்த்தியை ப்ரார்த்தனை செய்து சொல்லுதற்கரிய வேதமுடிவில் ஆராய்கின்ற அறிவுவடிவமே நமஸ்காரம். வேதாரணிய க்ஷேத்திர வாசத்தையுடையவரே உமக்கு நமஸ்காரம். பிரகாசிக்கின்ற தீர்த்தங்களுக்கெல்லாம் தலைவனாய் நிற்கின்ற பரஞ்சோதி ஸ்வரூபரே உமக்கு நமஸ்காரம். மகாபாதகங்களை முற்றும் போக்குகின்ற பராபர முதலே உமக்கு நமஸ்காரம் என்னும் இந்த மகா வாக்கியங்களை வாயினாலே சொல்லி தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து நித்திய கருமாநுஷ்டானங்களை முடித்து கரையில் பிதிரர்களுக்குச் செய்யும் பிண்ட தருப்பணாதிகளைச் செய்து அப்பால் வேத தீர்த்தத்திற்குச் சென்று முன் சொன்ன பிரகாரமே அங்கு நடத்தி தென்பாகத்திலுள்ள கோடிக்குச் சென்று ஒரு கருங்கல்லை கிருத்தி யென்கின்ற பிசாசின் பொருட்டு இட்டு முன் சொல்லியபடி சங்கல்பாதிகளுடன் ஸ்நானஞ் செய்து அங்கங்கு நியமித்த தானங்களையும் நடத்தி மீண்டு வேதாரணியேசுவரப் பெருமானுடைய சந்நிதானத்தை யடைந்து ஐந்து முறை யல்லது மூன்று முறை பிரதக்ஷிணம், நமஸ்காரஞ் செய்து தமக்குள்ள பொருளுக்குத் தக்கவாறு உலோபகுணமன்னியில் பொருளைக் கொடுத்து அபிஷேக நைவேத்தியாதி உபசார பூசைகளை நடத்தி உணவில்லாமல் விரதமாக பஞ்சாக்ஷர செபஞ் செய்து கொண்டிருந்து இராக்காலத்தைக் கழித்து காலையிலெழுந்து தீர்த்த ஸ்நானஞ் சிவ தெரிசன பஞ்சாக்ஷர செபம் முதலியவைகளுடன் கருமாநுட்டானங்களை நடத்தி சிவபெருமான் திருப்தி யடையும்படி பிராம்ஹண போஜனம், மாஹேசுவர பூசை செய்து அவர்களுடைய ஆசிர்வாதத்துடன் அநுமதி பெற்று பாரணஞ்செய்து முடித்தலே முறையாம். இந்த பிரகாரம் நடத்தினவர்கள் இந்த உலகத்திலே அளவில்லாத செல்வத்துடன் பல போகங்களை யநுபவித்து சிவலோகத்தை நிச்சயமாக அடைவார்கள். ஓ முனிவரர்களே! இன்னமும் கேட்பீர்களாக. கூலிப் பொருள் பெற்றுக்கொண்டு வேதஞ் சொல்லிக் கொடுத்தவர்களும், நித்திய கர்மாநுட்டானத்தைவிட்ட பதிதர்களும், நஞ்சிட்டவர்களும், பிறர் மனைவியையும், பிறர் பொருளையும், பிறர் பூமியையும், தம் வலிமையினாலே கவர்ந்துகொண்ட பாபிகளும், பெரியோர்களைக் கோபித்தவர்களும் ஆகிய மகா பாபிகளும் அவ்விடத்திற் புகுவார்களேயானால், பாவந் தீரப் பெறுவார்கள். தம்முடைய பெருமையை நினைத்து உத்தமர்களை சபையிலே கோபித்தல், வறியவர்களுக்கு வாக்களித்த பொருளைக் கொடாமை, உத்தமர்களுணவைத் தடுத்தல், பசுக்கள் நீருண்ணப் புகுதலைத் தடுத்தல், குற்ற

முறுந் தன்னைப் புகழ்ந்து பேசுதல். பசுவைக் கொல்லுதல், அரச ரிடங் கோட்சொல்லுதல் இவை முதலியவை பிரமஹத்திக்குச் சமான பாபம் என்று சாத்திரங்கள் முறையிடும்.

ஒருவன் அநுட்டித்த சத்காரியத்தை நிறுத்தல், சிவஞான வழியை நீக்கல், அடியாரிடத்தன்பின்மை, சபையில் பொய்ச்சான் றுரைத்தல், உண்ணுதாரிடத்திலுண்ணல், காம விருப்பத்தினுலே மதுபானஞ் செய்யும் மாதரைக் கூடி மகிழ்தல் ஆகிய இவைக ளெல்லாம் கள்ளுண்ட பாவத்திற்கொப்பாகும்.

உருத்திராக்கம், நெய், பொன் முதலிய உலோகங்கள், தாம்பூலம், கர்ப்பூரம். சுகந்தம் இவைகளை மறைவாகக் கவர் தல், அடைக்கலப் பொருளைக் கொடாது கவர்தல், வஸ்திரம், நெல் முதலியவைகளைத் திருடுதல், யானை, குதிரை, பசுக்கூட்டம், இரத்தினம் இவைகளைத் திருடுதல் எல்லாம் பொன்னைத் திருடும் பாவத்தை யொக்குமென்று நூல்கள் சொல்லும்.

சிநேகிதன், சகோதரன், புத்திரன் இவர்கள் மனைவியைப் புணர்தல், சகோதரியை, புத்திரியை விரும்பல், சேடியை, இழி குலப் பெண்களைப் புணர்தல், ஒத்த குலத்தோனிருக்கக் கன்னி கையை அவனுக்குக் கொடுக்காமல் வைத்திருத்தலாகிய பாவங்க ளெல்லாம் குருபத்தினியைப் புணர்ந்த பாவமொக்குமென்று நூல்கள் சொல்லும்.

இத்தகைய மஹா பாதகங்களைச் செய்தவர்களும், ஒப்புக் கொண்டவர்களும், இவைகளுக்கொப்பான எப்பாதகங்களைச் செய் தவர்களும், வேதங்களாலே பூசிக்கப்பட்ட அந்த இடத்தை அணுகுவார்களேயானுல் அப்பாவங்களினின்று நீங்குதல் அடை வார்கள்.

பிரமசாரிக்கு சுக்ல ஸ்கலிதமானுல் அந்த இடத்தில் வந்து வேதநதி, வேதாமிர்தம், மணிகர்ணிகை மூன்றிலும் ஐந்து தினம் ஸ்நானஞ் செய்து உபவாசமா யிருந்து ஸ்தோத்ர நமஸ்காரஞ் செய்து, பஞ்சாக்ஷரத்தை ஒரு லக்ஷ உரு செபித்தால் அப்பாவந் தீரும். கிருகத்தனுக்கானுல் முன்முறை சொன்னதில் பாதி செய்யத்தீரும். வானப்ரஸ்தனுக்கானுல் முன்முறையின் இரட்டி செய்யத் தீரும். சந்நியாசிக்கானுல் ஒரு மாதம் ஆகார வர்ச்சிதனு யிருந்து முன்சொன்ன பிரமசாரிக்குச் சொன்னதுபோற் செய் யத் தீரும். விதவைக்கானுல் கிருகத்த புருஷனுக்குப்போலச் செய்யத் தீரும்.

அந்த க்ஷேத்திரத்துக்குச் செல்லாத கால்கள் ஒன்றுக்குமுதவாத வீண் கட்டையாகும், அச்சிவபெருமானை கூப்பாத கைகள் ஒன்றுக்குமுதவாத கொம்பாகும். வணங்காத தலை வீணான பாரமாகும், காணாத கண்கள் பீலிக்கண்களாம், அவ்வரன் புகழ் கேளாத செவி அசேதனச் செவியாம், புகழ் சொல்லித் துதியாத நாவானது சுவையறியாத தோலாகும், அவ்வாலயத்தை பிரதக்ஷிணம் செய்யாத உடல் சவ உடம்பாம், இன்னும் உரிய பணிவிடைகள் செய்யாது சஞ்சரிக்கும் உடல் காற்றடைத்த வீண் துருத்தியொக்கும்.

ஆதலினாலே செல்வ நிலையாமை, யாக்கை நிலையாமை முதலியவைகளை நினைத்து நரை, திரை, மூப்பு முதலிய இடையூறுகள் வந்து நேருமுன்னமே இகபர வின்பத்தை விரும்பினவர்களாகிய அறிவுடையோர் அந்த இடத்தை விரும்பி அடைவார்கள்.

மனிதர்களுக்கு உள்ள வாழ்நாளில் நித்திரையினால் சில காலமும், இளமைக் காலத்து அறிவின்மையினாற் சில காலமும், யௌவன காலத்து மாதர் கலவியின்ப முதலியவற்றால் சில காலமும், கிழப் பருவத்தாற் சில காலமும் கழியும். ஆதலால் நேர்ந்த காலத்திலே வேதாரணிய க்ஷேத்திரத்தை யடைந்து மூன்று தீர்த்தங்களிலேயும் ஸ்நானஞ் செய்துச் சிவபெருமானைத் தெரிசனஞ் செய்தால் அவர்கள் சீவன் முத்தராவார்களென்பது வேத நிச்சயமாம். அதுவேயுமல்லாமல் பிரமன், விஷ்ணு, இந்திரன் முதலிய தேவர்களும், சனகர் முதலிய முனிவர்களும், சேடனாதி நாகர்களும், யக்ஷ சித்த கந்தர்வாதிகளாகிய எல்லோரும் இந்த க்ஷேத்திரத்துக்கு சமானமான இடம் மூன்று உலகங்களிலுமில்லை என்று மகிழ்ந்து கொண்டாடுவார்கள். தீர்த்தங்களிலே ஸ்நானஞ் செய்தலே சிவார்ச்சனையாகும். அதைச் செய்து பிரதக்ஷிணமுஞ் செய்தவர்கள் மோக்ஷ நிமித்தமாய் வேறு பிரயத்தனங்கள் செய்ய வேண்டுவதில்லை. அந்த க்ஷேத்திரத்துக்கு வருபவர்களுக்கு அன்னபானாதி யளித்தவர்கள் அசுவமேத யாக பலனை யடைவார்கள். அங்கு வர நேர்ந்தவர் இழிகுலத்தவரானாலும் மேன்மக்களேயாம். அது நேரப் பெறாதவர்கள் பிராமணர்களானாலும் இழிந்தவர்களேயாம். நதிகளுக்குள் கங்கையும், விலங்குகளுக்குள்ளே பசுவும், சாஸ்திரங்களுக்குள் வேதமும், அறத்திலே துறவறமும், சத்திகளுக்குள்ளே உமாதேவியும், விருக்ஷங்களுக்குள் கற்பக தருவும், மலைகளுக்குள்ளே மஹா மேருவும், குருசிரேஷ்டரில் ஞான தாதாவும், சாதியிலே பிராமணனும், தேவர்களிலே பரமசிவனும் அதிகம் போல க்ஷேத்திரங்களில் மேன்மையுடையது வேதாரணியமாம். ஒரு வருஷம் அல்லது ஒரு மாதம், ஒரு பக்ஷம், ஒரு தினம், ஒரு

க்ஷணம், அரை க்ஷணமாவது க்ஷேத்திர எல்லைக்குள் வசித்தால் இலேசாக முத்தி அடைவார்கள். விஷ்ணு பதம், பிரம்ம பதம், இந்திர பதம் இன்னும் இதர சுக பதங்களை விரும்பித் தவஞ் செய்திருப்பதில் மலப் புழுவாக வேதாரணியத்தி லிருப்பது மேன்மையென்று வேதங்கள் சொல்லும். அவ்விடத்தி லிறந்தவர்களுக்கு இயமவாதை இல்லை. பைரவ சூலாக்கிரத்தில் வைத்து பாப நிவர்த்தி செய்து உடனே சிவபெருமான் முத்தியைக் கொடுப்பார் கேட்டீர்களோ முனிவர்களே! இவ்வளவு புண்ய க்ஷேத்திரமென்று சொல்லி யிருக்கின்றபடியினாலே எந்த பாபத்தையுஞ் செய்யலாம் போக்கிக் கொள்ளலாமென்று துணிந்து செய்வார்களேயானால் அவர்கள் சூரிய சந்திரர் உள்ள காலம் வரையில் மஹா நரகத்திலே கிடந்து அழுந்துவார்கள். ஒருவாறு புண்ணியமிருந்து மீட்டு அங்கு இறப்பார்களேயானால் முத்தியை அடைவார்கள்.

ஆசாபாச நிவர்த்தியை அடைந்தவர்கள் அல்லது பேராசையுடையவர்கள் அங்கு வசிப்பார்களேயானால் பாபத்தை யடைவார்கள். எப்படி புண்ணிய பலனானது அதிகமாய் நேருமோ அது போலவே அங்கு செய்யும் பாப பலனும் அதிகமாகப் பெருகும். ஆதலால் அங்கு பாபஞ் செய்யமாட்டார்கள். ஒருவாறு சத்காரிய வழியிலே வினை வழியாய் பாபம் வருமானால் பைரவ தெரிசன பிரார்த்தனையினாலே நீக்கிக்கொள்ளலாம். அங்கிருந்து செய்யுங் காரியங்களெல்லாம் சிவச் செயலென்று அகந்தையை நீக்கி உண்மையாக சிவார்ப்பணஞ் செய்து கொண்டிருக்கும் உத்தமர்கள் வினைவழி செல்லாது சிவானந்தத்தை அனுபவிப்பார்கள். இந்த க்ஷேத்திரத்துக்கு சத்தியகிரி, ஆதிசேது, மறைசை, தக்ஷிண கைலாசம், தேவசபை, ஞானபூமி, பரமயானம் முதலிய இன்னும் பல நாமங்களுமுண்டு. அவ்விடத்தில் ஒரு சிவராத்திரியில் தங்கி பூசை, விரதம் முதலியவைகளைச் செய்வார்களானால் ஆயிரஞ் சிவராத்திரி புண்ணிய பலனைத் தரும். அன்று தவத்தர்களாகிய உத்தமர்களுக்கு உபயோகப்படச் செய்யும் பொருளானது ஒன்று ஒரு கோடியாய்ப் பெருகி விளங்கும். ஓ முனிபுங்கவர்களே! முன்னொரு காலத்தில் சாலிகோத்திரன் என்னும் பிராமணனொருவன் மிகுந்த வறுமையுடையவனாய் அகத்திய முனிவரை வேண்ட அவரருளியபடியே வந்து சிவராத்திரி விரதமிருந்து இகபோகமும் பரமோக்ஷமும் அடைந்தான். அன்றியும் அதுபோலவே வேதபதி என்னும் பிராமணனும் மேற்சொல்லியபடி ஒரு சிவராத்திரி தினந் தங்கி விரதமிருந்து அதன் பிரயோசனமாய் அனந்த ஐசுவரியங்களை அடைந்து பின்பு மோக்ஷத்தையும் அடைந்தான். இன்னும் இந்த க்ஷேத்திரத்தில் எழுந்தருளிய ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமான் சிவாராதனஞ் செய்து சூரபத்மாவை சங்காரஞ்செய்து

தேவேந்திரனுக்கு அவன் பதவியாகிய இந்திரபோகத்தை அனுபவிக்கச் செய்தார். தருமபுத்திராதி பாண்டவர் வந்து சக்கிரவர்த்திகளாய் வாழ்ந்தார்கள். இம்மட்டோ முனிவரர்களே! தேவேந்திரனுக்கும், வருணனுக்கும் வந்த பிரமஹத்தி நிவர்த்தியாயது. வசிட்டருக்கு குஷ்ட ரோகமும், வசிட்ட குமாரருக்கு சாப நிவாரணமுஞ் செய்தது. குபேரனனவன் இந்த க்ஷேத்திர வாசஞ் செய்து சிவபெருமானது தோழன் என்னும் பெருமையை அடைந்தான். சனகராதி அநேக முனிவர்கள் அங்கே வந்து வாசஞ்செய்து அவ்விசேஷத்தினலே அட்டமாசித்தி யடைந்தார்கள். பூலோக வாசிகள் பலரும், தேவலோக வாசிகள் பலரும் இன்னும் பலரும் அங்கு வந்து வசித்தும் தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்தும், மூர்த்தியை ஆராதித்தும் எண்ணிலாத போக மோக்ஷங்களை யடைந்தார்கள். முற்றறிவுடையவர்களுக்குஞ் சொல்ல முடியாத வேதாரணிய க்ஷேத்திர மகாத்மியத்தை சிறியேனகிய நான் சொல்ல முடியுமா. எல்லாவல்லமையையும் உடைய சிவபெருமான் நெடு நாட்களெண்ணிச் சொல்லத் தொடங்கினல் சொல்லமுடியுமோ அல்லது அப்போதும் முடியாதோ, நான் சொல்லவல்லனல்ல முனிவர்களே என்று சூத மகரிஷி அருளிச் செய்தார்.

தல விசிட்டச் சருக்கம் முற்றிற்று.

இலிங்கோத்பத்திச் சருக்கம்

ஒ முனிவரர்களே! தல விசிட்டத்தை உங்களுக்குச் சொன்னேம். இனி இலிங்கோத்பத்தியைச் சொல்லுகின்றேம் கேட்பீர்களாக. முன்னெரு பிரம கற்பத்திலே விஷ்ணு மூர்த்தியானவர் அரக்கர்களை வதஞ்செய்யும்பொருட்டு இராமனக வந்து அவதரித்து அநேக வானரச் சேனைகளோடு இலங்கைக்குச் சமீபமிது வென்று வேதாரணிய க்ஷேத்திரத்துத் தென்பாற் கடற்கோடி வழியாகத் திருவணை செய்து சென்று இராவணுதி அரக்கர்களைக் கொன்று திரும்பி வருங்காலத்திலே அணைவழி நடுவில் இறந்த இராவண ரூபமாய்ப் பிரமஹத்தியானது இராமனைத் தொடர்ந்து பற்றக்கண்ட தவமுனிவர்கள் மனம்நடுங்கி ஏ இராமா! உன்னலே கட்டப்பட்ட சேது மூலத்திலே போய் சிவாராதனஞ் செய்தால் இப்பாவம் நீங்குமென உடனே தன் கோதண்ட கோடியால் அணையை மூன்றிடத்தில் உடைத்து விட்டு வந்து தவஞ்செய்தற் குரிய இடத்தை ஆலோசனை செய்யுங் காலத்தில் சாபாலி என்னு முனிவர் எழுந்து இராமனைப் பார்த்து சேது மூலத்திலே சத்திய

க்ஷணம், அரை க்ஷணமாவது க்ஷேத்திர எல்லைக்குள் வசித்தால் இலேசாகமுத்தி அடைவார்கள். விஷ்ணுபதம், பிரம்மபதம், இந்திர பதம் இன்னும் இதர சுக பதங்களை விரும்பித் தவஞ் செய்திருப்பதில் மலப் புழுவாக வேதாரணியத்தி லிருப்பது மேன்மையென்று வேதங்கள் சொல்லும். அவ்விடத்தி லிறந்தவர்களுக்கு இயமவாதை இல்லை. பைரவ சூலாக்கிரத்தில் வைத்து பாப நிவர்த்தி செய்து உடனே சிவபெருமான் முத்தியைக் கொடுப்பார் கேட்டீர்களோ முனிவர்களே! இவ்வளவு புண்ய க்ஷேத்திரமென்று சொல்லி யிருக்கின்றபடியினாலே எந்த பாபத்தையுஞ் செய்யலாம் போக்கிக் கொள்ளலாமென்று துணிந்து செய்வார்களேயானால் அவர்கள் சூரிய சந்திரர் உள்ள காலம் வரையில் மஹா நரகத்திலே கிடந்து அழுந்துவார்கள். ஒருவாறு புண்ணியமிருந்து மீட்டு அங்கு இறப்பார்களேயானால் முத்தியை அடைவார்கள்.

ஆசாபாச நிவர்த்தியை அடைந்தவர்கள் அல்லது பேராசையுடையவர்கள் அங்கு வசிப்பார்களேயானால் பாபத்தை யடைவார்கள். எப்படி புண்ணிய பலனானது அதிகமாய் நேருமோ அது போலவே அங்கு செய்யும் பாப பலனும் அதிகமாகப் பெருகும். ஆதலால் அங்கு பாபஞ் செய்யமாட்டார்கள். ஒருவாறு சத்காரிய வழியிலே வினை வழியாய் பாபம் வருமானால் பைரவ தெரிசன பிரார்த்தனையினாலே நீக்கிக்கொள்ளலாம். அங்கிருந்து செய்யுங் காரியங்களெல்லாம் சிவச் செயலென்று அகந்தையை நீக்கி உண்மையாக சிவார்ப்பணஞ் செய்து கொண்டிருக்கும் உத்தமர்கள் வினைவழி செல்லாது சிவானந்தத்தை அனுபவிப்பார்கள். இந்த க்ஷேத்திரத்துக்கு சத்தியகிரி, ஆதிசேது, மறைசை, தக்ஷிண கைலாசம், தேவசபை, ஞானபூமி, பரமயானம் முதலிய இன்னும் பல நாமங்களுமுண்டு. அவ்விடத்தில் ஒரு சிவராத்திரியில் தங்கி பூசை, விரதம் முதலியவைகளைச் செய்வார்களானால் ஆயிரஞ் சிவராத்திரி புண்ணிய பலனைத் தரும். அன்று தவத்தர்களாகிய உத்தமர்களுக்கு உபயோகப்படச் செய்யும் பொருளானது ஒன்று ஒரு கோடியாய்ப் பெருகி விளங்கும். ஓ முனிபுங்கவர்களே! முன்னொரு காலத்தில் சாலி கோத்திரன் என்னும் பிராமணனொருவன் மிகுந்த வறுமையுடையவனாய் அகத்திய முனிவரை வேண்ட அவரருளியபடியே வந்து சிவராத்திரி விரதமிருந்து இகபோகமும் பரமோக்ஷமும் அடைந்தான். அன்றியும் அதுபோலவே வேதபதி என்னும் பிராமணனும் மேற்சொல்லியபடி ஒரு சிவராத்திரி தினந் தங்கி விரதமிருந்து அதன் பிரயோசனமாய் அனந்த ஐசுவரியங்களை அடைந்து பின்பு மோக்ஷத்தையும் அடைந்தான். இன்னும் இந்த க்ஷேத்திரத்தில் எழுந்தருளிய ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமான் சிவாராதனஞ் செய்து சூரபத்மாவை சங்காரஞ்செய்து

தேவேந்திரனுக்கு அவன் பதவியாகிய இந்திரபோகத்தை அனுபவிக்கச் செய்தார். தருமபுத்திராதி பாண்டவர் வந்து சக்கிரவர்த்திகளாய் வாழ்ந்தார்கள். இம்மட்டோ முனிவரர்களே! தேவேந்திரனுக்கும், வருணனுக்கும் வந்த பிரமஹத்தி நிவர்த்தியாயது. வசிட்டருக்கு குஷ்ட ரோகமும், வசிட்ட குமாரருக்கு சாப நிவாரணமுஞ் செய்தது. குபேரனானவன் இந்த க்ஷேத்திர வாசஞ் செய்து சிவபெருமானது தோழன் என்னும் பெருமையை அடைந்தான். சனகராதி அநேக முனிவர்கள் அங்கே வந்து வாசஞ்செய்து அவ்விசேஷத்தினலே அட்டமாசித்தி யடைந்தார்கள். பூலோக வாசிகள் பலரும், தேவலோக வாசிகள் பலரும் இன்னும் பலரும் அங்கு வந்து வசித்தும் தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்தும், மூர்த்தியை ஆராதித்தும் எண்ணிலாத போக மோக்ஷங்களை யடைந்தார்கள். முற்றறிவுடையவர்களுக்குஞ் சொல்ல முடியாத வேதாரணிய க்ஷேத்திர மகாத்மியத்தை சிறியேனாகிய நான் சொல்ல முடியுமா. எல்லாவல்லமையையும் உடைய சிவபெருமான் நெடுநாட்களெண்ணிச் சொல்லத் தொடங்கினல் சொல்லமுடியுமோ அல்லது அப்போதும் முடியாதோ, நான் சொல்லவல்லனல்ல முனிவர்களே என்று சூத மகரிஷி அருளிச் செய்தார்.

தல விசிட்டச் சருக்கம் முற்றிற்று.

இலிங்கோத்பத்திச் சருக்கம்

ஓ முனிவரர்களே! தல விசிட்டத்தை உங்களுக்குச் சொன்னேம். இனி இலிங்கோத்பத்தியைச் சொல்லுகின்றேம் கேட்பீர்களாக. முன்னொரு பிரம கற்பத்திலே விஷ்ணு மூர்த்தியானவர் அரக்கர்களை வதஞ்செய்யும் பொருட்டு இராமனாக வந்து அவதரித்து அநேக வானரச் சேனைகளோடு இலங்கைக்குச் சமீபமிது வென்று வேதாரணிய க்ஷேத்திரத்துத் தென்பாற் கடற்கோடி வழியாகத் திருவணை செய்து சென்று இராவணாதி அரக்கர்களைக் கொன்று திரும்பி வருங்காலத்திலே அணைவழி நடுவில் இறந்த இராவண ரூபமாய்ப் பிரமஹத்தியானது இராமனைத் தொடர்ந்து பற்றக்கண்ட தவமுனிவர்கள் மனம்நடுங்கி ஏ இராமா! உன்னாலே கட்டப்பட்ட சேது மூலத்திலே போய் சிவாராதனஞ் செய்தால் இப்பாவம் நீங்குமென உடனே தன் கோதண்ட கோடியால் அணையை மூன்றிடத்தில் உடைத்து விட்டு வந்து தவஞ்செய்தற்குரிய இடத்தை ஆலோசனை செய்யுங் காலத்தில் சாபாலி என்னு முனிவர் எழுந்து இராமனைப் பார்த்து சேது மூலத்திலே சத்திய

கிரி என்று ஒரு க்ஷேத்திரமும், பக்கலில் சத்தியநதி என்னுமொரு நதியுமிருக்கிறது. அந்த தீர்த்தத்திலே ஸ்நானஞ் செய்து அங்குள்ள அந்த ஸ்தலத்திலே தவஞ்செய்து கொண்டிருந்தால் சிவபெருமான் சாந்நித்தியமாகி இப்பாவத்தைப் போக்குவதன்றி வேண்டிய பலன்களையுந் தரும் என்று சொல்லக் கேட்ட இராமன் உடனே அவ்வாறே வடக்கு நோக்கிச் செல்கின்ற சத்திய நதியிலே ஸ்நானஞ் செய்து உத்தமமான தவத்தைச் செய்து கொண்டிருந்தவளவிலே கருணைக் கடலாகிய சிவபெருமான் பங்குனி மாதத்திலே உத்திர நட்சத்திரத்திலே உச்சிக் காலத்திலே சிவலிங்க ரூபமாய் மணிகர்ணிகா தீர்த்தத்துடனே பிரசன்னமாகி அதிற் சகள ரூபமாய் மான், மழு, காளகண்டம், திரிநேத்திரம், சதுர்ப்புயம், சர்ப்பம், சந்திரன், கொன்றைப் பூமாலை முதலிய அடையாளங்களுடனே ஆயிரஞ் சூரியர்கள் ஒருகாலத் தோன்றி யுதித்தாற் போன்ற பேரொளி விளங்கவும், பெருங்கருணை வெள்ளம் பொங்கிப் பெருகவும் திருவுருவக் காட்சி தந்த மாத்திரத்திலே இரண்டு கண்களினும் ஆனந்தவெள்ளம் பெருகவும், உரோமஞ் சிலிர்க்கவும், வாய் குளறவும் அளவில்லாத துதிகள் சொல்லி நமஸ்கரித்து நிற்கின்ற இராமனைப் பார்த்து ஏ இராமா! உன்னாலே செய்யப்பட்ட தவங்களை நோக்கி நான் மிகவுஞ் சந்தோஷமடைகிறேன் உன்னுடைய பிரமஹத்தியானது நீங்கிவிட்டது நீ கவலைபடைய வேண்டாம் உன் பிரமஹத்தியை நீக்கும் பொருட்டே மஹா புண்ணிய தீர்த்தமாகிய மணிகர்ணிகையை இதோ கொண்டு வந்திருக்கின்றேன் இதை நமஸ்காரஞ் செய்து ஸ்நானம் பண்ணினவர்கள் பிரமஹத்தி முதலிய மஹா பாபங்களினின்றும் விடுதலை யடைவார்கள் என்ற திருவாக்கைக் கேட்டு உடனே விதிப்படி ஸ்நானஞ் செய்து சிவபெருமானை வணங்கி என்னைப்பற்றிய பிரமஹத்தி மஹா பாபத்தைப் போக்கியருளிய பிரபுவே எக்காலத்தினு மிந்த இடத்திலே எழுந்தருளியிருந்து அன்பர்களுக்கு அநுக்கிரகஞ் செய்ய வேண்டும் என்று வேண்டியபடியே இராமனுக்கு உடன்பாடு செய்து சத்தியகிரியிலே சத்திய நதியின் மேல்கரையிலே கிழக்கு முகமாக சிவலிங்க வடிவமா யெழுந்தருளி யிருந்தார். ஆனபடியினாலே முனிவர்களே! இந்த இலிங்கமானது பிரமகல்பம், விஷ்ணுகல்பம் முதலிய கல்ப காலங்களினு மசைவில்லாதபடி யிருந்து சர்வ பிரபஞ்சங்களுந் தம்மிடத்திலே யொடுங்க நிற்கும் ஒவ்வொரு பிரளய காலத்திலேயும் பிரமதேவனுக்கு வேத உண்மைகளையும், சிருட்டி முறைகளையும் உபதேசித்தருளுவார். ஒரு கற்பத்திலே பிரமதேவன் படைத்தற்றொழில் தெரியாதவனாய் அதையடையும் பொருட்டு வேதாரணியத்தை யடைந்து அநேக தவங்கள் செய்தும் கூடாமையினால் தன்னுடைய சிரசை வெட்டி ஓமஞ்செய்யத் தொடங்கிய போது கிருபாநிதியாகிய சிவபெருமான் பிரசன்னமானார்.

அப்போது பிரமதேவன் அனேக ஸ்தோத்திர நமஸ்காரங்கள் செய்து எம்பெருமானே எனக்கு படைக்குந் தொழில் வல்லமையை அருளல் வேண்டுமென்று விண்ணப்பம் செய்யச் சிவபெருமான் ஏ பிரமனே எல்லாம் வேதத்தினுள்ளே யொடுங்கி இருக்கின்றதாதலால் வேதவுண்மையை முன்னமே என்னிடத்தில் தெரிந்துகொண்டால் யாவும் உனக்கு விளங்கும் என்று சொல்லக் கேட்டு வணங்கிய பிரமதேவனுக்கு வேதத்தினுண்மையை உபதேசஞ்செய்தார். அப்போதே சிருட்டி வல்லபமடைந்த பிரமதேவனும் ஏ கருணைவள்ளலே! இந்தச்சிவலிங்க வடிவத்திலெப்போதும் எழுந்தருளியிருந்து எல்லோருக்கும் வரம் கொடுக்கவேண்டுமென்று வேண்டினார். அவ்வாறு அருளியதான சிவலிங்க மேன்மையை யாவர் சொல்லவல்லவர். இம்மையிலே புத்திரர், மனைவி, கிரகம், பூமி, பசு, கல்வி, ஞானம், தவம் முதலிய பலன்களையும் அப்பால் மேல் உலக ஆட்சிகளை யடைந்து முத்தியையடைய விரும்பினவர்களும் அச் சிவலிங்க வடிவைக்கண்டு தரிசித்தலன்றி நினைந்தாலும் பெறுவார்கள். இன்னுந் திருவடியை வணங்கினவர்கள் சத்துரு சயத்தையும், சாஸ்திர வல்லபத்தையும், பலவிதமான சித்திகளையும், ரோகநிவர்த்தியையும், பல துஷ்டக்ரக தோஷநிவர்த்தியையும் அடைந்து பிரமபதம், விஷ்ணுபதமாகிய பதவிகளையும் மிக இலேசாக அடைவார்கள். சிவாலயத்தில் மூன்றுமுறை வலஞ் செய்தால் பிறவிநோய் தீரும். வீதியிலே வலஞ் செய்தால் நரகத் துன்பம் நீங்கும். திருவீதியிலே அங்கப்பிரதக்ஷணஞ் செய்தால் சிவனோடொன்றும் வாழ்வு நல்கும். இதர மூர்த்திகளுக்கு சோடசோபசார பூசையே விசேடமாகும். வேதவனேசப் பெருமானுக்கு வலம் வருதலே பெரியபூசையாம். வலஞ் செய்ய என்று நினைத்தால் கருடமந்திரங் கேட்ட விஷம்போல பாபம் நீங்கும். வலஞ் செய்தால் ஒரு அடிக்கு ஒரு அசுவமேதயாக பலனாகும், பிரதோஷ காலத்தில் சோமசூத்திர பிரதக்ஷணஞ் செய்தால் மிக்க விசேடம். முதலில் நந்தியையும் வல இடமுறையாய்ச் சண்டீசரையும் மீட்டு நந்தியையும் வணங்கி சோமசூத்திரம் புகுந்து பிற்பாடு சண்டீசர் பின்னர் நந்தியைச்சார்ந்தால் இதுசோமசூத்திரமாம். வலமாகவும், இடமாகவும் வலஞ்செய்தால் ஆயிரம் பிரதக்ஷணபலமாம். சோமசூத்திர பிரதக்ஷணம் ஒன்று இரண்டு லக்ஷ பிரதக்ஷண பலமாம். நந்தி, சண்டீசர், சோமசூத்திரம் இவைகளைக் கண்டு கண்டு நமஸ்கரித்து பிரதக்ஷிணஞ் செய்தால் கோடி பிரதக்ஷிண பலமாம். அங்கப் பிரதக்ஷிணஞ் செய்தால் நூறுகோடி பிரதக்ஷிண பலமாம் வீதியில் ஒரு பிரதக்ஷணஞ் செய்தால் அனந்த பிரதக்ஷண பலனும் சிவபெருமானுக்கு பூசை விசேடமான போதிலும் வலஞ் செய்யாத பக்ஷத்தில் பூசையாகாது. பூசைசெய்யாது வலஞ்செய்தால் அதுவே பூசையாகக்கொண்டு அநுக்கிரகஞ் செய்வார். வேதவனேசப் பெரு

மாணே நித்திரைவிட்டெழுந்தவுடனே தியானஞ் செய்தவர்களும் சரீரம் நீங்கும்போதும் எங்கேயிருந்துந் தியானஞ் செய்தவர்களும் மோக்ஷமடைவார்கள். சிவ சொத்தைக் கவர்ந்தவர்கள் நரகத்திலே நெடுநாள் கிடந்து பின் ஈனசாதியராய்ப் பிறப்பார்கள் மறதியினல் கவர்ந்தவர்கள் கூனராய்ப் பிறப்பார்கள் தெரிந்து திருடினவர்கள் குருடராவார்கள் கோபத்தினலேபூமியை,நெல்லைத்திருடினவர்கள் அனேககற்பகாலம் நரகத்திலேகிடந்துபின் தரித்திரராய்ப் பிறந்து வருந்துவார்கள் ஆதலால் வேதவனேசன் பொருள் என்பதொன்றையும் கவர்தல் கூடாவாம் இதை படித்தவர்கள் கேட்டவர்கள் கேட்க விரும்பினவர்கள் அளவில்லாத செல்வமடைந்து மோக்ஷத்தையும் அடைவார்கள்.

இலிங்கோத்பத்திச் சருக்கம் முற்றிற்று.

மணிகர்ணிகைச் சருக்கம்.

ஓ முனிவர்களே! இலங்கோத்பத்தியைச் சொன்னேம். இனி மணிகர்ணிகையின் வைபவஞ் சொல்லுகிறேம் கேட்பீர்களாக! காசியிலேயுள்ள மணிகர்ணிகையைப்போல் பரமசிவனுடைய திருவருளினலே எல்லாவுயிர்களும் பிழைக்கும் பொருட்டு உண்டாக்கப்பட்ட தீர்த்தமாம் இதில் பிரமஹத்தி முதலிய பாவம் நீங்கும் இது உச்சிக்காலத்தில் உதித்தபடியினலே ஸ்நானத்திற்கும் உச்சிக் காலமே விசேடமுடையது. காலேயில் காசி மணிகர்ணிகையில் ஸ்நானஞ்செய்தலும் உச்சியில் இதில் மூழ்குதலும் சமான பலனும் அதற்கு அதிகமான பலனும் நேரும் ஒன்றை நினைத்து மூழ்கினல் அதுகிடைக்கும். ஒன்றும் வேண்டாது ஸ்நானம் செய்தால் முத்தி இன்பம் கிடைக்கும். பானுவாரம் அமாவாசை உச்சிக் காலத்தில் நாபியளவு தீர்த்தத்திலே நின்று ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை பன்னீராயிரம் உரு செபித்தால் மகா சித்தராவார் அவரைப் பார்த்தவர்களுடைய பாவங்கள் நிவர்த்தியாகும் தை மாதம் உதயகாலத்தில் மூழ்கினவர்களுக்கு இயமவாதையில்லை தேவலோகமடைவார்கள். மாசி மாதத்தில் ஸ்நானஞ் செய்தவர்களும் இன்னும் புண்ணியகாலத்தில் ஸ்நானஞ்செய்தவர்களும் மோக்ஷமடைவார்கள். முன்னெரு காலத்திலே கங்கை முதலிய நதிகள்யாவும் திருக்கைலாசபதியை அடைந்து ஏ கைலாஸவாச! உலகத்திலேயுள்ளவர்கள் செய்த பாவங்களை எங்களிடத்தில் வந்து தீர்த்துக் கொள்ளுகிறுர்கள் எங்களுடைய பாவ நிவர்த்தி எந்தயிடத்திலே என்றுகேட்கச் சிவபெருமான் கருணைகூர்ந்து ஓ நதிகளே! தெற்குத் திசையிலே வேதாரணியத்திலே மணிகர்ணிகை என்னும் தீர்த்த மொன்றுண்டு

அதில் சிவராத்திரி புண்ணியகாலத்தில் ஸ்நானஞ்செய்து எம்மை தரிசித்தால் அளவில்லாத பாவங்களும் நீங்கும் அரி பிரமாதி தேவர்களும் தத்தம் பாதங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் பொருட்டு அங்குவந்து ஸ்நானஞ் செய்து தரிசனஞ் செய்வார்கள் என்று சொல்லக்கேட்டு சிவராத்திரி புண்ணியகாலத்தில் வந்து நதிகள் பாவங்களைப் போக்கிக்கொண்டன. அது முதல் கங்கை என்பவள் ஒவ்வொரு நாளிலும் உச்சிநேரத்திலே வந்து ஸ்நானஞ் செய்துவருகின்ருள். மணிகர்ணிகையில் ஸ்நானஞ் செய்யாமல் கங்கையில் மூழ்கினுலும் பலனில்லை இதில் அதன் பின்னரே கங்கையில் ஸ்நானஞ் செய்தல் முறையாம். முன்னொருநாள் மலைநாட்டிலே கவுணியர் கோத்திரத்திற் பிறந்த திரிபுராரி என்னும் பிராமணனொருவன் காசியில் போய் கங்காஸ்நானஞ் செய்யவெழுந்து வட திசையைநோக்கி நெடுநாட்களாகக் காடு மலை முதலிய வழிகளைத் தாண்டி செகந்நாதம் என்னும் இடத்தைத் தெரிந்து அப்பால் செல்லும்போது ஒரு பெண்மணி அவனெதிர்ப்படக்கண்டு ஏ பெண்ணே! நீ இந்த இடத்தில் தனி வருவதற்குக் காரணமென்ன எங்கேபோகின்ருய் என வினவ ஏ பிராமணு! என் பெயர் யமுனை வேதாரணியத்திலேயுள்ள மணிகர்ணிகா தீர்த்த ஸ்நானத்தை யுத்தேசித்துப் புறப்பட்டேன் நீயார் எங்குசெல்கின்ருய் என மலைநாட்டிலேயுள்ள பிராமணன் என் பெயர் திரிபுராரி பிறவித் துன்பம் நீங்கி முத்தியடையும்படி கங்கையில் ஸ்நானஞ் செய்யச் செல்கின்றேன் என்ருன். அதுகேட்ட யமுனை கூறுகின்ருள் ஏ பிராமணு! கங்கா ஸ்நானமும், பலனும் கிடைக்கவேண்டுமானல் வேதாரணியம்போய் மணிகர்ணிகையில் ஸ்நானஞ்செய்து வருதல் வேண்டும் அப்படியில்லாது கைகூடாது. நீ உத்தேசித்துச் செல்லுகின்ற கங்காதேவியும் ஒவ்வொருநாளும் போய் ஸ்நானஞ் செய்து வருகின்ருள் ஆதலால் நான் சொல்லியபடியே திரும்பு எனக் கேட்ட திரிபுராரி அதற்கிசையாது வட திசையிலே நெடுந்தூரம் நடந்தான். அளவுகடந்ததூரஞ்சென் றுங்காசியுங் கங்கையும் எதிர்ப்படாமையால் மன நொந்து நெடுந்தூரம் நடந்து நேராமைக்குக் காரணம் யாது என்ன பாவஞ்செய்தோமோ என்று ஒரு மரத்தடியில் இளைப்புடனே இருக்கக் கங்காதேவியானவள் திருவருளினலே சொல்லுகின்ருள் ஏபிராமணு! என்னுடைய சகோதரியான யமுனை சொன்னவார்த்தையைத்தட்டி நீ வந்தபடியால் உனக்கு நேரவில்லை என்னிடத்திலேவந்து ஸ்நானஞ் செய்த பலனடைய வேண்டுமானல் வேதாரணியம்போய் மணிகர்ணிகையிலே ஸ்நானஞ்செய்து வரக்கடவாய், நானும் பிரதிதினம் அங்குபோய் ஸ்நானஞ்செய்து வருகிறவள் எனக்கேட்டு மகிழ்ந்து ஆச்சரியமடைந்து திரும்பிவந்து மணிகர்ணிகையினும், கோடியினும், வேதநதியினும் விதிப்படி ஸ்நானஞ்செய்து வேதவனேசனைத் தரிசித்து அப்பால் காசியில்

கங்கையில்போய் மூழ்கி இஷ்டபலனையடைந்தான். அன்றியும் கங்கையிலாடியுந் திராத பாவமானது மணிகர்ணிகையிலாடித் தீர்ந்த கதையொன்றுண்டு கேளுங்கள். முன்னொரு காலத்திலே தென்னாட்டிலேயுள்ள கவுசிகன் என்னும் ஒரு பிராமணன் கங்கையில் மூழ்கி காவடியுடன் பஞ்சாக்ஷரத்தை செபித்து அதுவே துணையாய் வருகின்றகாலத்தில் வழிநடுவில் இரண்டுவேதாளங்கள் நமக்கு நல்ல ஆகாரமென்று நினைத்து நில்லு நில்லு என அதட்டி ஓடி வந்தன அவன் பஞ்சாக்ஷர செபஞ்செய்து வருதலைக்கண்டு நடுங்கி ஒதுங்கி வணங்கி நின்று சொல்லுகின்றன, ஏ பிராமணா! யாங்களிவ்வழியில் கொன்றவர்க ளனேகர்கள் இன்றும் உன்னைக் கொன்று தின்னும்படியே வந்தோம் உன் வாயில் உச்சரிக்கும் பஞ்சாக்ஷர சப்தத்தினாலே நாங்கள் மிகவும் பயந்து ஒதுங்குகிறோம் ஆனால் உன்னைப்போன்ற உத்தம பக்தர்களைக் கண்டதில்லை நாங்களிப்படிக் கெட்டகாரியஞ் செய்து கெடுதலடையாத வழியைச் சொல்லுமென அலறுகின்ற பேய்களைப்பார்த்து நீங்கள் யார் இந்த வேதாளவடிவம் வர என்னபாவஞ்செய்தீர்கள்சொல்லுங்களென்ன ஒரு பசாசு எழுந்து ஏ பிராமணா! யான் காமரூபமண்டலம் என்னுமிடத்திலுள்ள பிராமணன் வாங்கத்தகாத தானங்களை வாங்கியும் கூலிக்கு வேதஞ் சொல்லிவைத்தும் இந்தத் தீய பேயுடலைப் பெற்றேன் இதைத்தீர்க்க வேண்டுமென மற்றப்பேய் எழுந்து நின்று நான் கலிங்கதேசத்தில் பிறந்த பிராமணன் வேதசாஸ்திரங்களை மிகுதியாக அறிந்தவன் காமவழியிலே சென்று தாய் தந்தையர்கள் தேடிய பொருளை யழித்தும் முதுமைக்காலத்தில் அவர்களைக் காப்பாற்றாதபடி விட்டு காசியிலேபோய் ஒரு பிராமண வீட்டிலே நட்பாக இருந்து பல தீய செயல்களைச் செய்து அப்பிராமணன் நித்திரை செய்யும்போது ஒரு பெரிய கல்லினாற் கொன்று அம்மனையிலுள்ள பொன் முதலிய பொருள்களைக் கவர்ந்து ஓடுங்காலத்தில் அந்நகர அரசனனவன் கண்டுபிடித்து தண்டித்துத் தலையையும் வெட்டி வீழ்த்தினான் இதில் முதலில் பிரமஹத்தியும், பொன்திருடுதலும், துர்மரணமும் நேர்ந்தபடியால் இப்பேயுடலடைந்தேன் என்னை விடுவிக்கவேண்டு மென்று சொல்ல இவ்வாறு இரண்டு வேதாள வார்த்தைகளையுங் கேட்டு யான் உங்களுடைய கருமநிவர்த்திக்குச் செய்யவேண்டுவது என்ன சொல்லுங்கள் என்ன, உடனே பைசாசங்கள் வணங்கி சுவாமீ எங்களுக்காகக் காசியில் கங்கையில் சங்கல்பஞ் செய்து, ஸ்நானஞ் செய்து பிண்ட தருப்பணாதிகளைச் செய்தால் இப்பேயுடல் நீங்கி நற்கதியடைவோமெனப் பிராமணனிரங்கிச் சென்று அவ்வாறே செய்ய காமரூப தேச பசாசு ஒன்று மட்டிலு முத்தியடைந்தது. முத்தி நேர்படாத மற்றப் பசாசு பிராமணனைப் பார்த்து சுவாமீ காசியிலே கங்கைக்கரை பிராமணனைக் கொன்ற மஹா பாபமுங்கூடப் பெற்

றவனுதலால் முத்தி இன்று கிடைக்கவில்லை என் நிமித்தம் இன்னும் ஒன்று செய்தல்வேண்டும் அதாவது தென் திசையிலே வேதாரணியம் என்னுந் தலத்திலே மணிகர்ணிகா தீர்த்தத்திலே விதிப்படி ஸ்நானஞ்செய்து பிண்டதருப்பணுதிகளைச் செய்தாலிப் பேய்வடிவு நீங்குமெனக்கேட்ட பிராமணன் பைசாசத்தையும் அழைத்துக்கொண்டு வேதாரணியம் வந்து மணிகர்ணிகைக் கரையிலிருந்து சங்கற்பஞ் செய்து விதிப்படி மூழ்கி பிண்டதருப்பணுதி செய்து வேதநதி, கோடி தீர்த்தம் இவைகளில் மூழ்கி வேதாரணியேசுவரப் பெருமானுடைய சந்நிதியடைந்து எம்பெருமானே இப் பேய்க்கு இவ்வுடலை நீக்கி மோக்ஷத்தை யளித்தருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தான் அப்போதே முத்தியடைந்தது. முனிவர்களே! கங்கையிலாடியுந் தீராத பாவமானது ஒருவனுக்காக மற்றவனுடி மணிகர்ணிகையில் பாவம் தீர்ந்ததன்றி மோக்ஷமும் நேர்ந்ததென்றால் அதன் பெருமையை யாராலே சொல்லமுடியும் இந்தத் தடாகக் கரையில் எதனை தானஞ்செய்தாலும் பிதிரர் காரியங்களைச் செய்தாலும் அளவில்லாததாகப் பெருகி விளங்கும் இம்மை மறுமைப் பயன்களை யருளத்தக்க மணிகர்ணிகையின் சமீபத்தை யடைந்தவர்களும் நினைந்தவர்களும் கண்டவர்களும் புகழ்ந்து பேசினவர்களும் மகாபாவங்களினின்று நீங்குவார்கள் என்றால் ஸ்நானஞ் செய்தவர்கள் பலனை யாவரறியத்தக்கவர்கள் நீலங்கலந்த வெள்ளிய விருஷபத்தை அக்குளக்கரையில் சிவபெருமானுக்கென்று தானஞ்செய்வார்களே யானால் அவ்விடபத்தின் சரீரத்திலே யுள்ள ரோமங்களில் ஒரு ரோமத்துக்கு அவர் வம்ச பிதிர்க்களுடன் ஆயிரம் வருஷம் சிவபதத்தில் வாழ்வார்கள் மணிகர்ணிகா தீர்த்த வைபவத்தைச் சொன்னவர்களுங் கேட்டு மகிழ்ந்தவர்களும் இம்மையில் மஹா போகத்தை யனுபவித்து பிறகு மோக்ஷ இன்பத்தை யடைவார்கள்.

மணிகர்ணிகைச் சருக்கம் முற்றிற்று.

வேதநதிச் சருக்கம்.

ஓ முனிவர்களே! மணிகர்ணிகையின் விசேடத்தைச் சொன்னோம் இனி வேதநதி வைபவஞ்சொல்லுகின்றோம் கேட்பீர்களாக! இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என்னும் வேதங்கள் நான்கும் புருடவடிவாய் ஆகமசாஸ்திர புராணுதிகளாகிய அங்கங்களுடனே எழுந்து தம்மை பதிதர்களாகிய ஈனர்கள் அத்தியயனஞ் செய்ததனல் மந்திரபலங் குறைந்திருக்கிறபடியால் மந்திரபல பூரணத்தை

படையும்பொருட்டு சத்தியகிரி என்னும் இந்த க்ஷேத்திரத்தை யடைந்து சத்தியகிரீசுவரனை வேண்டித் தவஞ்செய்துகொண் டிருக்குங்காலத்தில் வேதநாதனுக்குவடதிசையில் நூறுவிற்கிடை தூரத்திலே தங்கள் பெயரால் வேதாமிருதமென்று ஒரு புண்ணிய தீர்த்த முண்டாக்கி அதில் ஸ்நானஞ் செய்து மணிகர்ணிகை யிலும் மூழ்கி புண்யகாலங்களில் வேதநதியிலும் ஸ்நானஞ்செய்து வேதசிவாகம வழியாய்ச் சிவபெருமானை அர்ச்சனை செய்துகொண் டிருக்குங்காலத்திலே ஒரு மார்கழி மாதத்திலே வியதிபாத புண்ய தின உதய காலத்திலே அருவுருவமான சிவலிங்கவடிவில் நின்று உருவத் திருமேனிகொண்டெழுந்து தம்மைப் பலகாலங்களாய் அர்ச்சனைசெய்து தவஞ்செய்துக் கொண்டிருக்கின்ற வேதங்களை நோக்கி ஓ வேதங்களே! உங்களுடைய பூசைக்கு நாம் மிகவுஞ் சந்தோஷமடைந்தோம் எவர்கள் அன்புடனே வழிபட்டாலும் அவர்களுக்கு வரங்கொடுக்கவே இங்கு எழுந்தருளியிருக்கின்றோம் உங்களுக்கு வேண்டிய வரங்களைக்கேளுங்கள் என வேத புருஷர் கள் ஆனந்தபரவசத்தர்களாய் நின்று நெற்றிக்கண்ணையுடைய எம் பெருமானே உமது திருவருளினலே குறைகளெல்லாந் தீர்ந்து இம்மைப்பயன்களும் அடைந்தோம் இன்னுஞ் சில வரங்களும் வேண்டுகின்றோம் அதாவது எக்காலத்திலேயும் இந்தப் பிரகாரம் பூசைசெய்துக்கொண் டிங்கேயிருக்கவும் பல பல பிரமகல்பங்களி லேயும் மிருகம், பறவை, மரம், செடி, புல், பூடு முதலியவைகளாய் இங்கே வாழ்ந்துக்கொண்டிருக்கும்படிக்கும் இன்றுமுதல் வேதா ரணியம் வேதநதி வேதாரணியேசுவரன் வேதாமிருதம் என்று மூர்த்தி தலம் தீர்த்தமாகிய எல்லாவற்றிற்கும் எங்கள் பெயர் விளங் கவும் எங்களாலே ஆக்கப்பட்ட வேதாம்ருத தீர்த்தத்தில் யார் ஸ்நானஞ் செய்தாலும் அவர்கள் பாவம் நீங்கி உம்முடைய திரு வருளுக்குப் பாத்திரராகும்படிக்கும் மார்கழி மாதத்திலே வியதி பாதத்திலே எங்களுக்குக் கருணைவள்ளலாகிய நீர் அனுக்கிரகம் பண்ணின தினமாகிய இதில்எக்காலத்திலும்வேதநதிவேதாமிருதம் முதலிய தீர்த்தங்களிலே ஸ்நானஞ் செய்து உம்மை தரிசித் தவர்கள் எவர்களானாலும் அவர்கள் மோக்ஷம் அடையவும் இந்த வரங்களை அநுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று வேண்டிய வேத புருஷர்களைநோக்கி ஓ வேதபுருஷர்களே! நீங்கள் வேண்டியஎல்லா வரங்களையுந் தந்தோம் நீங்கள் உத்தமர்களாகிய அந்தணர் முகத் திலே எப்போதுமிருந்திடக்கடவீர் உம்மை ஆறு அங்கங்களுடனே யார் எடுத்து ஓதினார்களோ அவர்களும் நம்முடைய பதவியடை வார்கள் என்றுசொல்லி மறைந்தருளினார். வேதாரணியேசுவரப் பெருமானுடைய சந்நிதான நேர்க்கடலிலே சத்தியநதியானது பத்து யோசனை தூரங் கலந்து நிற்கின்றது அதை நினைந்தவர்களும் புகழ்ந்தவர்களும் பரிசித்தவர்களும் அளவில்லாத பாவத்தைப்

போக்குவார்கள் ஸ்நானஞ் செய்தவர்கள் சீவன் முத்தராவார்கள் வேதநதியிலே மூழ்கி வேதவனேசப் பெருமானை தரிசனஞ் செய்தவர்கள் பெருஞ்செல்வத்தையும், நீண்டஆயுளையும்,ஞானத்தையும் அடைவதல்லது நினைந்தன யாவுமடைந்து முத்தியையும் அடைவார்கள் முக்காலுஞ்சொல்லுகின்றேம் உண்மையாகும். தீர்த்த விசேஷங்களைச் சொல்லுகின்ற வேதங்களே வந்து ஸ்நானஞ் செய்யுமானல் நதிகள் வந்து தோயுமேயானல் இதன்பெருமை யாராலே சொல்ல முடியும் இந்தநதிக்குத் தேவபூடணம் என்று ஒரு நாமம் உண்டு யாதுகாரணத்தா லென்னின் வைவஸ்வத மனுவானவர் அரசாண்டுவருங் காலத்திலே நாரத மஹரிஷியானவர் வந்து வேதநதியிலே ஸ்நானஞ் செய்து வேதாரணியேசுவரர் சந்நிதியில் வீணகானத்துடன் ஸ்தோத்திரஞ் செய்து வசிக்குங் காலத்தில் இராவணன் அங்கே வந்து ஒ முனிசிரேட்டரே ! தேவலோகத்தை விட்டு இப்போது இங்குவரக் காரணமென்னவெனக் கேட்டு ஏ ராவணு ! இது மஹாபுண்ய க்ஷேத்திரம் இந்த நதியின் வைபவஞ்சொல்ல முடியாது. பரமசிவன் பார்வதி தேவியுடன் இதிலிருந்து தரிசனங் கொடுப்பார் ஆதலால் இதில் ஸ்நானஞ் செய்யும் பொருட்டு வந்திருக்கிறேன் எனக்கேட்ட இராவணன் அவ்விசேஷத்தைச் சொல்ல வேண்டுமென முனிவர் எனக்குச் சிறிது தெரிந்ததைச் சொல்லுகிறேன் கேட்பாயாக என்று சொல்லுகின்ருர். மாணிமாத னென்கிற பிராமணனெருவன் கைலாசபதியாகிய சிவபெருமானை மகா பூசைசெய்து நீங்குதற்கரிய அன்பினுலே வேண்டி நிற்கின்றபோது அப்பிராமணனைப் பார்த்து ஏ பிராமணு ! உன்னுலே செய்யப்பட்ட பூசையினுலே மிகவுஞ் சந்தோஷமடைந்தோம் உனக்கு வேண்டிய வரத்தைக் கேள் என்ன ஏ பிரபுவே ! இந்த வேதநதியிலே கணபதி, சுப்ரமணியர், உமாதேவியார் இவர்களுடன் சிவகணங்கள் சூழும்படி சாந்நித்தியமாய் எழுந்தருளியிருந்து ஸ்நானஞ்செய்பவர்களுக்கு பாவம் பிணி இவைகளை நீக்கி சரீரதிடம் முதலியவைகளுடன் மோக்ஷத்தைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டபடியே அநுக்கிரகித்து நிற்றலாலே அந்நதிக்குத் தேவபூஷணமென்று இவ்வுலகத்திலும் தேவலோகத்திலுஞ் சொல்லுவார்கள் என்றதைக்கேட்ட இராவணன் உடனே சத்தியநதியிலே ஸ்நானஞ் செய்து கரையேறியவுடன் பஞ்சாவரணத்துடன் தரிசனங் கிடைக்கப்பெற்று ஆச்சரியமடைந்து தொழுதவணங்கிப் பலவிதமாக ஸ்தோத்திரஞ் செய்து வேண்டியவரங்களைப் பெற்றுக்கொண்டு இலங்கைக்குச் சென்ருன் இதுவுமன்றி முன்னெருநாள் மேனகை என்பவள் மான் வடிவமாய் வந்து வேதநதிக்கரைப் புன்னைக்காட்டிலே திரிந்தபோது சித்திரை மாதம் பரணி நட்சத்திரம் கிருஷ்ண பக்ஷம் திருதியை திதி ஞாயிற்றுக்கிழமை நடுப்பகல் ஆகிய இந்நாளிலே ஓர் வேடன்

அம்மானை விரட்டியெய்த மாத்திரத்தில் பாய்ந்த அம்புடனே நதியிலே விழுந்து இறந்தது. நதியில் வீழ்ந்த வீழ்ச்சியயர்வினாலே அபரிமிதமான ஞானத்துடன் மேனகை என்னும் மேன்மையும் அடைந்தது இந்த புண்ணியகாலத்திலே ஸ்நானஞ் செய்தவர்கள் மஹா பாபிகளானாலும் இம்மை மறுமைப் பயனை அடைவார்கள் இந்நதிக்கரையிலே பொன் முதலிய தானங்களைச் செய்யின், ஒன்று அனந்தமாகும் பிதுர்க்களுக்கு பிண்ட தருப்பண சிரார்த்தாதிகளை இயன்றபொருள்கொண்டு செய்வார்களானாலும் தேவலோகத்திலே தேவர்கள் வணங்கயிருந்து அப்பால் சிவபதத்தை அடைவார்கள் இன்னமும் கேட்பீர்களாக. திலோத்தமை என்பவள் மான் வடிவாய்த் திரியும்போது நீர்வேட்கையினால் நீரருந்தி அதனாலே மிருக சாபம் நீங்கப் பெற்றாள் சூசுமாரன் என்கிற அரசனானவன் பல க்ஷேத்திரங்களும் போய் தரிசித்து தீர்த்த ஸ்நானங்களும் கிரமப் படி செய்து கொண்டு வருங்காலத்தில் தென்கடற் கோடியாகிய வேதாரணிய க்ஷேத்திரத்திற்குவந்து வேதநதிக்கரையை யடைந்த போது பஞ்சாவரணங்களுடன் சிவபெருமான் தரிசனங்கொடுக்கக் கண்டு ஆச்சரியமடைந்து பிரம விஷ்ணுக்களுந் தேடியறியப் படாத வடிவம இலேசாக இங்கே வெளிப்படக் காரணமென்னவென்று ஆலோசித்து நிற்குங் காலத்திலே புலஸ்திய மஹாரிஷியானவர் அங்குவர அரசன் பணிந்து தான்கண்ட புதுமைகளைச் சொல்லி காரணம் என்னவென்று கேட்க அங்குள்ள விசேஷங்களை கிரமமாக அரசனுக்குச் சொல்லுகின்றார் ஓ அரசனே! இது வேதாரணியம் என்கிற தேவ பக்தசபை இது நான்கு வேதங்களும் போங்கி புகழ்கின்றன வேதநதி இந்த தீர்த்தத்தில் துலா மாதத்திலேயும் கார்த்திகையும் விசாகமுஞ் சேர்ந்த பௌர்ணமிகளிலும் உமாதேவியாருடன் சிவபெருமான் சாந்நித்தியமாவார். முன்பு பிரமா, விஷ்ணு வேண்டிய இந்த மூன்று காலமல்லது அன்பர்களுக்கு ஸ்நானஞ் செய்த எக்காலத்திலும் தரிசனங் கொடுப்பார் ஆதலாலிதில் மூழ்கினவர்கள் பாபவிமோசனஞ் செய்து முத்தியின்பத்தை யடைவார்கள் முன்னொரு காலத்திலே ஒரு பிராமணன் செய்த பாபத்தால் பிரமராக்ஷதனானான் பெரும் பழியைச் செய்கின்ற அப்பிரமராக்கதன் ஒரு தவத்தனை வணங்கி நின்று யான் இந்த வடிவினின்றும் நீங்கி நற்கதியடைவது எப்படி புண்ணிய பாபம் என்பன எது சொல்லல் வேண்டுமென ஏ பிரம ராக்ஷசே புண்ணியத்தை முழுமையாகச்செய்வது முடியாது சிலசொல்லுகின்றேன் கேள், பிற உயிர்களிடத்தில் இரக்கத்துடன் செய்வதே புண்ணியம். மோனமென்பது உண்மை கூறுதல், உயர்ந்தோர்க்கு உணவளித் துண்ணல், நாணம் என்பது பொறுமையையடைதல் வீண் வார்த்தையை நீக்குதலே இயமம் நீதி நூல்வழி நிற்பதுதான் நியமம். நியமம் தவறின்றிச் செய்வதே விரதம் பரோபகாரஞ்

செய்தலே சிவபூசை, புறங்கூறுததுவே துதி, உயிர்க்கொலை செய்யாததுவே தவம், தன் மனைவியல்லது இச்சியாதிருத்தலே துறவு, நன்று தீது என்று மயங்காததே புலனடக்கல், பெரியோரைக் கூடுதலே ஆதனம், உள்ளச்சுத்தியே சமாதி, மாயையின் வடிவைத் தெரிதலே யோகம், சிவ சீவ ஐக்கியமுறை தெரிதலே ஞானம், இந் நல்வினைகள் பெரும் பேறுகளைத் தரும் நூல்வழிக்கு மாறிநடப்பதே தீவினையாம். அத்தீவினை மோகத்தாலும், பேராசையாலுங் கோபத்தினுலும் வரும் ஞானமே தரும் மோக்ஷம், அம்முத்தியாற் பேரின்பம் வரும், அதற்கு நல்ல தருமங்களே ஏதுவாம், அதையுணர்ந்து சொல்லுமிடத்து வானினும், பூலோகத்திலேயும் இன்பமே தரும். பாபமோவென்ருல் இம்மையிலும் மறுமையிலும் துன்பமேதரும் என்றவளவிலே இராக்கதன் சொல்லுகின்ருன். ஏ அந்தண! புண்யபாபம் அனுபவிப்பதெங்கே முத்தியாலடையும் பலன் யாது? என்று கேட்கச் சொல்லுகின்ருன். செய்யும்நல்வினைகள் புண்ணியமாகும், தீவினையாவதுபாபம், புண்ணியமானது சுவர்க்கத்தைத் தரும், பாபம் நரகத்திலே புகுத்தும், இன்பத்தை யனுபவிக்கத்தக்க சுவர்க்கம் இந்திர பத முதல் இருபத்துயேழிடமாம், துன்பத்தை யனுபவிக்கத்தக்க நரக பூமி இருபத்தெட்டாம், புண்ணிய பாபங்களை சுவர்க்க நரகங்களிலிருந்து அனுபவித்து எஞ்சியதை இகலோகத்திலே யனுபவிப்பார்கள், எப்படி அனுபவிப்பார்களானுல் நல்ல மனைவி, நல்ல புத்திரர்கள், நல்ல பூமி, நல்ல பொருள் இவைகளை யுடைத்தாய் கடன் பிணி முதலியவைகளின்றி யிருத்தலே இங்குள்ள புண்ணியப் பயனை இன்பமாம்.

குற்றம் பொருந்திய மனைவியும், கொடுமையான புத்திரரும், கெட்ட நிலமும், கெட்ட பொருளும் உடைத்தாய் பிணி, கடன், அலைச்சல் இவைகளுடன் வாழ்தலே இங்குள்ள பாபப் பயனுகிய துன்பமாம். இந்த புண்ணிய பாபப் பயனுகிய இன்ப துன்பங்களெண்ணுமிடத்து அநித்தியமாம். இது தீர்ந்தால் முத்தி கைகூடும். அம் முத்தியால் பேரின்பம் வரும் என்று சொல்லிய அந்தணனைப் பார்த்து இராக்கதன் சொல்லுகின்ருன். எந்த வகையினுலும் பரோபகார வழியினின்ருல் அத்தவத்தினுற் போகமும் முத்தியுமாகும் என்றீர், இப்பிறவி நீங்கி முத்தி யடையும் வழியை யருளல் வேண்டுமென்ருன்.

அது கேட்ட பிராமணன் ஓ பிரமராக்கதனே! அப்படி யுனக்கு எண்ணமிருக்குமானுல் வேதாரணியத்திலே வேதநதியிலே போய் ஸ்நானஞ் செய்து அதில் பிரசன்னமாய் விளங்குகின்ற சிவபெருமானை வணங்கினுல் பிறவி நீங்கி முத்தி யடையலாம்

என்று அவன் மனதிலே அது அழுந்தும்படி மாதுர்காமி, கோலாகலன் முதலிய சிலர் முத்தி யடைந்த வைபவங்களைச் சொல்லக் கேட்டு மகிழ்ந்து அவ்விராக்கதன் அவனடியிலே வீழ்ந்து நமஸ்காரஞ் செய்து வேதநதியை அடைந்து ஸ்நானஞ் செய்தவுடனே இராக்கத உடலானது நீங்கி சந்திரசேகரப் பெருமான் உமாதேவியுடன் காட்சி கொடுக்க வீழ்ந்து வணங்கி மோக்ஷத்தை யடைந்தான். சொல்லுமிடத்து இவை முதலிய அளவில்லாத பெருமையை யுடையது வேதநதி என்று சுசுமார ராசனுக்குப் புலஸ்திய ரிஷியானவர் சொல்லக் கேட்டு அவ்வரசன் பரமானந்த பரிதனுய்க் கீழே விழ்ந்து நமஸ்காரஞ் செய்து வேதநதியிலே ஸ்நானஞ் செய்து எழும்ப சிவபெருமான் ஸ்கந்தர், விநாயகர், உமாதேவி, சண்டேசுரர் இதர தேவர்களுடன் தெரிசனங் கொடுக்கப் புளகாங்கிதங் கொண்டு ஆனந்தக் கடலில் மூழ்கினவனுய் புதிய மஞ்சனம் புஷ்பம் தூபதீப நைவேத்தியாதிகளுடன் மஹாபூசைசெய்து மகிழ்ச்சியடைந்தான். அன்று முதலாகச் சுசுமார பூசிதம் என்று ஒரு பெயருண்டாயிற்று. முனிவர்களே! ஆடினவர்களுக்கு அபரிமித ஞானத்தைக் கொடுக்கிறபடியினலே வாணி தீர்த்தம் என்றுஞ் சொல்லுவார்கள். சர்வ உலகங்களுக்குங் கர்த்தாவாகிய சிவபெருமான் தன் பரிவாரங்களுடனே சாந்நித்தியமாய் எழுந்தருளி யிருக்கிறபடியாலும் எல்லா விசேஷங்களையும் அறிந்து சொல்லத் தக்க வேத புருஷர்களே வந்து ஸ்நானஞ்செய்து இட்டசித்தி யடைந்தமையால் இந்த தீர்த்தத்துக்குச் சமானமாய் வேறு ஒன்றையுஞ் சொல்ல முடியாது. தேவகுரு முதலியோர்களும் பல காலங்கள் சொன்னுலுஞ் சொல்ல முடியாத பெருமையை யாவர்தாஞ் சொல்லவல்லார். இது பரம ரகசியமா யுள்ளது விரும்பினவர்கட்கன்றிச் சொல்லத் தக்கதல்ல, இதைப் படிப்பவர்களும், கேட்பவர்களும் சிவஞான சம்பன்னராவார்கள்.

வேதநதிச் சருக்கம் முற்றிற்று.

கோடி தீர்த்தச் சருக்கம்

ஓ முனிவர்களே! வேதநதியின் பெருமையைச் சொன்னேம் இனிக் கோடி தீர்த்த விசேஷத்தைச் சொல்லுகின்றேம் கேட்பீர்களாக. கடலின் தென்கீழ்க் கோடியானபடியாலும் ஆதி இராமனுடைய கோதண்டம் கோடிதோயப் பெற்றமையாலும் ஆடினவர்கள் அடையும் நன்மைகள் கோடிக் கணக்கானபடியினுலுங் கோடி தீர்த்தம் என்று சொல்லுவார்கள். உலகத்திலே எவர்களானுலும் ஆதி இராமனடைந்த சேது மூலத்திலோ அல்லது அவன்

கோதண்ட கோடியாற் கீறிய இடத்திலோ இதில் எங்கேயாயினும் எக்காலத்தாயினும் மூழ்கினும் முத்தி யடைவார்கள். வியதீபாதம், தக்ஷிணாயனம், உத்தராயணம், மாதப் பிறப்பு, அமாவாசை, பௌர்ணமாவாசை, விஷு புண்யகாலம் இவைகள் கடலாடற்குறிய புண்ய காலங்களாம். எந்தக் காலத்திலும் ஆடினவர்கள் முத்தி யடைவார்களென்றால் கடலாடற்குரிய மேற்சொல்லிய புண்ய காலத்தொன்று கூடுமாயின் அப்போது ஸ்நானஞ் செய்த பலனை யாரெடுத்துச் சொல்ல வல்லவர்கள். முன்சொன்ன புண்ய காலத்தல்லது வேறு கடல்களிலாடல் நினைத்தாலும் தீமையாகும். இங்கே மூழ்குதற்கோர் காலகற்பனைக ளில்லையாம். பெரும் பொய்யுடையவராய் மஹா பாபங்களைச் செய்தவர்களானாலும் சத்தியவந்தர்களாகிய உத்தமர்களையும் வேதத்தையும் இகழ்ந்தவர்களானாலும் இக்கடற் கோடியிலே ஸ்நானஞ் செய்தால் பாப விமோசனத்தை யடைவார்கள். இதை நினைந்தாலும் புகழ்ந்தாலும் கண்டாலும் தீய வினைகள் கெட்டோடும் என்றால் ஸ்நானஞ் செய்த பலனைச் சொல்லவும் வேண்டுமா? மாதா, பிதா, குரு இவர்களை நிந்தனை செய்தவர்களானாலும் அடைக்கலம் புகுந்தவர்களை நம்பினவர்களைக் கொன்ற பாபியர்களானாலும் இதில் மூழ்குவார்களேயானால் பாபம் நீங்குவதன்றி முத்தியும் அடைவார்கள். வடதிசையிலுள்ள கங்கையில் பத்து வருஷமிருந்து மூழ்கின பலனை ஒரு தினத்திலே இங்கு ஸ்நானஞ் செய்து அடையலாம் இந்த கோடி தீர்த்தத்தில் ஒருதின மாடினவர்கள் அசுவமேதயாகம் முதலிய பல யாகங்களின் பலன்களினுங் கோடி மடங்கு பலனடைவார்கள். தேவர்களுக்குள்ளே சிவபெருமான் மேன்மையுடையவர்போல பூலோக தீர்த்தங்களுக்குள்ளே இந்த கோடி தீர்த்தம் விசேஷமுடையதாம். கோடியில் ஸ்நானம் பண்ணினவனுடைய ஒரு திவலை பட்டவளவில் இரண்டு பேர்கள் பெரும்பேறு அடைந்தார்கள் அதைச் சொல்லுகின்றோம் கேட்பீர்களாக.

முன்னொரு காலத்திலே தமிழ் நாட்டிலே வணிகர் குலத்திலே குபேர சம்பத்தையுடையவனாக ஏமாங்கதனென்னும் ஒரு வணிகனிருந்தான். அவன் தன் வியாபார வழியினாலே பலகோடி பொருள்களைச் சம்பாதனஞ் செய்தும் சன்மார்க்கமாகிய தரும வழியில் ஒரு சிறிதுஞ்செலவுசெய்யாமல் தன் மனைவியுந் தானுமாயளவில்லாத போகங்களை யனுபவித்துக் கொண்டிருந்தான். இவ்வாறு சில காலஞ் சென்ற பின்னர் இளமைக் காலம் நீங்கி முதுமைப் பருவங் கிட்டியபோது திருவருளினாலே அவ்வணிகன் என்ன காரியஞ் செய்தோம் இதுவரையில் தருமம் ஒன்றுஞ் செய்யவில்லை, நம்மையாளுந் தலைவராகிய சிவபெருமானை ஒரு

போது நினைத்தோமில்லை, செல்வமோ நிலையில்லாதது, இதை நிலையாக நினைத்துக் காலம் போக்கிய நமக்குச் சமானமான தீயவ ரொருவருமில்லை என அளவு கடந்து மனம் வருந்தி இனியாவது மேற்கதி யடையும் வழி தேடவேண்டுமென நினைத்துத் தாம் தேடிய பொருளைப் பாதிசெய்து ஒரு பாதிப் பொருளை தம்மு டைய புத்திரர்களுக்குக் கொடுத்து மற்றைப் பாதியை எடுத்துக் கொண்டு தன் மனைவியோடுங் கூடவெழுந்து திருவாரூரை வந்த டைந்து இதில் தருமஞ் செய்தால் ஒன்று பலவாகுமென்று நினைத்து அங்கு பல தண்ணீர்கள், அன்னசாலைகள், நந்தவனங் கள், வழிச்சாலை முதலியவைகளுடன் கோயிற் றிருப்பணிகளையும் பலவாகச் செய்தான். இவ்வாறு சிலகாலஞ் செய்திருந்து தானும் மனைவியுமாக அநுமரணமாக திருவாரூரில் அடைந்தார்கள். உத் தம க்ஷேத்திர மரணத்தினால் இருவரும் மோக்ஷ மடைந்தார்கள். இப்படியாக இவர் பிரிந்த பின்னரிவர் புதல்வர்களாகிய சுதேவன் வசுதேவன் என்கின்ற இரண்டு பிள்ளைகளும் உலகத்தவர்களாலே பழிக்கும்படியான நடையினராய்க் காமஞ் செய்தல், கட்குடித் தல், தீயவர்களுறவு முதலிய தீச்செய்கைகளினால் இருவரும் ஒரு மனதுடையவராய்ப் பொருளை யழித்து விட்டார்கள். பொரு ளில்லாமையால் தீச்செயல்களுக்கு வேண்டும் பொருளை நகரில் கொள்ளை அடிக்கவே அரசனாணையினாலே காட்டிலே சஞ்சரிக்க வேண்டியவர்களானார்கள். வனவாசம் வந்தவுடன் அங்குள்ள மிருகங்களைக் கொன்று தின்று பசியாற்றிக்கொண்டு வேடர்கள் போலத் திரிந்தார்கள். கொலைத் தொழிலுள்ள இருவரில் மூத்த வனானவன் ஒருவழி பிரிந்தவளவிலே பன்றிக் கூட்டங்கள் நெருங் கிக் கொல்லும்படியும் மற்ற இளையவனை அன்றைக்கே கருநாகந் தீண்டவும் இருவரும் ஒன்றாக ஒரு நேரத்தில் மரணமடைந்தார் கள். இவர்களை காலதூதர்கள் வந்து காலபாசத்தாற் பிணித்து இயம சந்நிதியிற் சேர்க்கத் தருமராசன் இருவர்களுடைய நல் வினை தீவினையை நிதானித்து முன்னவனை நரகத்திற்குப் போகும் படி செய்து இளையவனாகிய வசுதேவன் என்பவனை அன்புடன் பார்த்து நீ தேவலோகத்துக்குப் போவாயாக என்றான். அப் போது வசுதேவன் ஏ தருமராசனே! நாங்களிருவரும் ஒன்றாகப் பிறந்தோம் நாங்கள் வாழ்ந்ததுஞ் செய்ததும் ஒருதரமான வினை யன்றி வேறில்லை அதுபோலவே ஒன்றாக யிறந்தோம் இருவர் வினைத் தொடர்ச்சியும் ஒன்றாக வொத்திருக்குமாயின் என் முன் னவனை நரகமடையச் செய்து என்னைத் தெய்வலோக மடையச் சொல்லிய காரணமென்ன அருள் செய்ய வேண்டுமென்று கேட் டான். அவ்வணிகனை இயமதருமராசன் பார்த்துக் கருணை கூர்ந்து ஏ வசுதேவா! உன் பிறப்பிலே ஒரு புண்ணியம் ஏறி யிருக்கின் றது அது என்னவென்றால் விரிவாகிய காட்டிலே ஒரு மிருகத்

தைத் தேடிச் செல்கின்றபோது ஆதி இராமனாலே கட்டப்பட்ட அணையின் சமீபத்தை யடைந்தாய் அன்று தைமாத அமாவாசை புண்ய காலமானபடியால் அநேகம் பேர்கள் கடலிலே ஸ்நானஞ் செய்து கரையேறி நின்றார்கள். அப்படி நின்றவர்களில் ஆடை யவிழ்த்து உதறியவர்களுடைய ஆடையின் ஒரு திவலை உன் சிரசிலே பட அதனால் வலிய பாபங்கள் முழுதும் நீங்கி அப்பொழுதே இப்போது சொல்லிய தேவலோக வாழ்வு உனக்குண்டாயிற்று. கோடியில் வீழ்ந்து வருங் காற்றானது மேலே தோயப் பெற்றாலும் பாப விமோசன மடைந்து கோடிக்கணக்கான புண்ணிய பலனை யடைவார்கள் என்று அதன் பெருமைகளைச் சொல்லி உனக்குக் கிடைத்த புண்ணியத்தில் பதினாறிலே ஒரு பங்கை உன் தமையனாகிய அவனுக்குக் கொடுப்பாயாகில் உன்னுடன் அவனையும் தேவலோகம் வரும்படி செய்வேன் எனக்கேட்டு வசுதேவன் பதினாறில் ஒரு பங்கு தத்தஞ் செய்ய சுதேவனும் நரகத்தினின்றெழுந்து இருவருமாய் சுவர்ண விமானத்திலேறி சுவர்க்கலோக மடைந்தார்கள். கோடி தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்தவர்களுடைய ஈர வஸ்திரத்தின் திவலை தோயப் பெற்றவன் மட்டிலுமல்லாமல் அவனாலே விரும்பப்பட்டவனும் தேவலோகம் அடைந்தான் என்று சொல்வோமானால் இதன் பெருமை இவ்வளவு என்று நம்மாலே சொல்ல முடியுமோ முடியாது. கோடி தீர்த்த மேன்மையைக் கேட்பவர்களும் கேட்டு மகிழ்பவர்களும் இங்குள்ள போகங்களைக் குறைவற அனுபவித்து சிவானந்த மோக்ஷத்தையும் அடைவார்கள்.

கோடி தீர்த்தச் சருக்கம் முற்றிற்று.

மணவாளச் சருக்கம்

முனிவர்களே! விண்ணுலகமும் மண்ணுலகமும் கொண்டாடத் தக்க கோடி தீர்த்த விசேஷத்தைச் சொன்னோம், இனி கருணை வள்ளலாகிய சிவபெருமான் அகத்திய மகா முனிவரின் பொருட்டுத் திருக்கல்யாணக் கோலத்தை அநுக்கிரகஞ் செய்த கதையைச் சொல்லுகின்றோம் கேளுங்கள். முன்னொரு காலத்தில் விந்திய மலைக்கும் மஹா மேருவுக்கும் ஒரு கலகம் விளைந்தபோது அங்கு வந்த நாரத முனிவரைப் பார்த்து ஐயா முனி சிரேட்டரே! எங்களில் மேன்மையுடையவர்கள் யார் தேவரீர் சொல்லவேண்டுமென நாரத முனிவர் இது யாருக்குந் தெரிந்ததுதானே மஹா மேரு பெரிதென்று சொல்லவும் வேண்டுமோவென உடனே விந்திய மலையானது கோபங்கொண்டு ஆகாச பாதாளம் அஷ்டதிசை

கள் நெருங்கும்படியாய் இடைவளி யில்லாமல் நின்றபோது சூரியர், சந்திரர்களுடைய போக்கு வரவு தடைப்பட பிராமணர், முனிவர்கள் முதலிய உத்தமர்களுடைய யாகங்களும் நித்திய கர்மாநுஷ்டானங்களுந் தவறுண்டன. பூமியில் விளைவின்மையால் உணவுப் பொருள்க ளொழிந்தன. இவை யறிந்த தேவர்களெல்லோருங் கூடி ஆலோசித்துப் பிரமதேவனுடன் முறையிட்டார்கள். அப்பிரமதேவருஞ் சேர்ந்து விஷ்ணுவினிடஞ் சென்று சொல்ல, அவ்விஷ்ணுவுஞ் சேர்ந்து இதற்கு நாமொன்றுஞ் செய்ய முடியாது,வாருங்கள் சிவபெருமானிடம் போய்ச்சொல்லிக்கொள்வோமென பிரம, விஷ்ணு, இந்திராதி சர்வதேவர்களும் உலகத்திலேயுள்ளவர்கள் செய்த தவங்களே உருவெடுத்தாற்போன்ற திருக்கைலாச கிரியை யடைந்தார்கள். பலவிதமான வளங்களுஞ் சிறப்புகளும் வாய்ந்த கைலாச கோபுர வாயிலினின்று ஸ்தோத்திரஞ் செய்த சப்தமானது பெரிதாக நந்தியெம்பெருமான் கேட்டு சிவபெருமானை தரிசனஞ் செய்கின்ற காலந்தெரியாது சத்தமிடுவதென்ன வென்று கோபித்து தலை வாயிலில் நின்ற விஷ்ணு முதலிய தேவர்களைத் தம் கையிலுள்ள பொற் பிரம்பினாலே அடித்தார், தேவர்கள் உடலைத் துடைத்து ஓடினார்கள். பிரமதேவனும், விஷ்ணு மூர்த்தியும் நடுங்கி ஒதுங்கி நின்று நமஸ்கரித்து நின்றபோது இரங்கி பயமடையாதீர்கள், இப்போது சர்வேசுவரனாகிய சிவபெருமான் பார்வதி தேவியாரை விவாகஞ் செய்யும் விஷயமாய் சப்த ரிஷிகளுடன் ஆலோசனை செய்து கொண்டிருக்கின்றார். நான் சமயந் தெரிந்து வருகிறேன் நான் திரும்பி வருமளவும் யாதொரு சப்தமுமில்லாமல் நிற்பீர்களாக என்று நந்தியெம்பெருமான் கோயிலினுள்ளே சென்று சமயந் தெரிந்து திருவடியிலே நமஸ்காரஞ் செய்து சர்வ தேவர்களுடனே பிரமதேவனும்,விஷ்ணுவும் வந்து வாயிலில் நிற்கின்றார்கள் என்று விண்ணப்பஞ் செய்து அவர் குறிப்பின்படியே ஏ தேவர்களே! உங்களை வரும்படி அருள் செய்திருக்கின்றாரென்று கேட்டு மகிழ்ந்து உள்ளே புகுந்து பலவிதமான ஸ்தோத்திரங்களைச் செய்து நமஸ்கரித்து நிற்கின்ற விஷ்ணுமூர்த்தி முதலியவர்களைப் பார்த்து க்ஷேமம் விசாரித்து அப்பால் இப்போது இங்கே வந்த காரணம் என்னவென்று கேட்க வணங்கி வாய் புதைத்து நின்று எமது கர்த்தரே உம்முடைய திருவருளினாலே யாதுங் குறைவில்லை ஆனால் இப்போது விந்திய மலையானது உலக முழுதும் பரந்து வளர்ந்து பெருந் துன்பத்தை உண்டாக்கிக் கொண்டிருக்கிறது அதை யடக்க உமது திருவருளல்லது யாராலும் முடியாது என்று சொல்லக் கேட்டிரங்கி அடக்கித் தருவோம் என்றருளிய தருணத்திலே சிவபெருமானுடைய கல்யாண தெரிசனத்தின் பொருட்டு சித்தர்கள், சாரணர்கள், கின்னரர்கள், வித்

தியாதரர்கள், கந்தருவர்கள், முனிவர்கள், தேவர்கள், அசுரர்கள், இராக்கதர்கள், பிசாசுகள், கணங்கள், சூரியர், சந்திரர் எத்திசைக்குள்ளாரும் ஒன்ருக வந்து சூழ்ந்தார்கள். ஒரு வழியாய் வடபாகத்தில் எல்லோரும் வந்து சேர்ந்தமையினுலே தென்பாக மேலெழுந்து வடபாகம் மிகத்தாழ்ந்து அமிழ்ந்தியது. அதுகண்டு அங்குள்ள தேவர், முனிவர் முதலிய எல்லோரும் பூமி தலைகீழாகப் புரண்டுவிடுமோ வென்று நடுங்கிப் பயமடைந்தார்கள். அப்போது சிவபெருமான் திருநந்திதேவரைப் பார்த்து தவஞ்செய்கின்ற முனிவர் கூட்டத்தில் மேன்மையுடையவராகிய அகஸ்திய முனிவரை விரைவாக இங்கே யழைத்து வருவாயாக என்று ஆக்ஞாபனம் செய்தார். அவ்வாறு சென்று அழைப்பறிவிக்க அகத்திய முனிவர் ஓடி வந்து எம்பெருமானே அடியேன் செய்யவேண்டிய பணிவிடையாது அருளல் வேண்டுமென, ஏ முனிவனே! தென்றிசை மேலெழுந்து நிற்கின்றது அதைச் சமஞ்செய்யவேண்டும். அவ்வாறு செய்யப் புகுங்காலத்தில் விந்திய மலையின் தூர்ச்செயலும் வாதாவி, வில்வலன் என்னும் அசுரர்களின் கொடுந்துன்பமும் நீங்கும், உனக்குப் பெரும்புக முண்டாகும், உலகத்துக்கு நன்மையுண்டாகும், உலகத்துக்கு நன்மை செய்தலே பெரும் புண்ணியமாகும், விரைவாகப் புறப்படுவாயாகவென நமஸ்காரஞ் செய்து ஏ பிரபுவே! பிரம விஷ்ணுக்களால் முடியாத காரியம் என்னுலே முடியுமா? அன்றியும் பார்வதி தேவியைத் தாங்கள் விவாஹஞ் செய்கின்ற அத்புத மஹா வைபவ தெரிசனத்ஸத எல்லோருடன் தெரிசிக்கும் புண்ணியஞ் செய்தேனில்லைப்போலுமென்று வருந்துந் தருணத்தில் ஏ முனிசிரேஷ்டனே! என்னுடைய கருணையானது உனக்கு நிரம்பவிருக்கிறபடியால் உனக்கு முடியாதது ஒன்றுமில்லை கிடைக்காததும் ஒன்றுமில்லை. நம்முடைய கல்யாண தெரிசனஞ் செய்ய விருப்பமிருக்குமானுல் நாள்கு வேதங்களும் பூசை செய்து இட்ட சித்தியை அடைந்த தென்பாலுள்ள வேதாரணிய க்ஷேத்திரத்திலே வந்து தெரிசனங் கொடுக்கின்ருேம். அன்று முதல் அந்த இடந் தென்கைலாசமாகும், ஆதலின் விரைவாகச் சென்று விஷயங்களைப் பூரணஞ் செய்து வேதாரணியத்தை யடைந்து கோடியின் வடபக்கலான இடத்தில் ஸ்ரீ பஞ்சாக்ஷர செபஞ் செய்து கொண்டிருப்பாயாக என்று விடைகொடுத்தனுப்பினுர். அகத்திய முனிவர் திருவருள் துணையாக எண்ணி தென்றிசை நோக்கிச் செல்ல எதிர் நிற்கின்ற விந்திய மலையைப் பார்த்து சில இத வசனங்கள் சொல்லக் கேளாமையால் மகிமா என்னும் வடிவத்தை எடுத்து அதன் தலையிலே ஒரு கையை வைத்தமிழ்த்தப் பாதலத்திலே யமிழ்ந்தியது. உலகமெல்லாம் நடுங்கவும் ஒருவராலும் அடக்க முடியாததாகவுமுள்ள மலையை ஒரு கையினுலே அமிழ்த்தினனென்ருல் அவனுடைய

தவத்தை அல்லது அவனடைந்த அருளின் பெருமையை யாராலே சொல்ல முடியும். அப்பால் சென்று வாதாவி, வில் வலன் என்பவரையுஞ் சங்காரஞ் செய்து செல்ல பூமியும் முன் போலவே சமானமாயிற்று. முனிவர் வேதாரணியத்தை யடைந்து வேதநதி, வேதாமிர்தம், மணிகர்ணிகை என்னும் மூன்று தீர்த்தங் களிலும் ஸ்நானஞ் செய்து ஆதி இராமனலே பூசிக்கப்பட்ட ஸ்ரீ வேதாரணியேசுவரப் பெருமானை வணங்கி அச்சிவலிங்கப் பெருமானுக்கு தென்பால் ஒரு குரோச தூரத்திலே தங்குதற்கு ஒரு ஆச்சிரமம் உண்டாக்கி மணலாலே ஒரு சிவலிங்கம் பிரதிட்டை செய்து அதில் நித்திய பூசை செய்து நாடோறும் வேதாரணி யேசுவரப் பெருமானை வந்து தெரிசனஞ் செய்து கொண்டு நடன தெரிசனத்தின் பொருட்டுக் காத்திருந்த பதஞ்சலி, வியாக்கிரபாத முனிவர்களைப்போல எக்காலத்திலே கல்யாண தெரிசனஞ் செய்ய நேரும் என்று தவஞ்செய்துக் கொண்டிருந்தார். அது முதல் தவஞ்செய்துக்கொண்டிருந்த அவ்விடத்துக்கு அகத்தியான்பள்ளி என்று நாமமுண்டாயிற்று. சித்திரை மாதத்திலே பூர்வ பக்ஷத் திலே சப்தமி திதியிலே ஞாயிற்றுக்கிழமை உச்சி நேரத்திலே கரு ணைக் கடலாகிய சிவபெருமான் கைலாசத்தில் கல்யாணத்தில் கூடிய தேவ, அசுர, சித்த, கந்தர்வாதி சர்வ கணங்களுடன் கைலாச சிம்ஹாசனத்திலே பார்வதி தேவியாருடனிருந்து நடந்த கல்யாண வைபவ தெரிசனத்தை ஒம தாமத்திலேலே அம்மையா ருடைய கடைக்கண்களின் சிவப்புடன் கையிலே கட்டிய இரக்ஷா பந்தனக் காப்பின் அழகும் விளங்கும்படியாக அகத்திய முனிவ ருக்கு ஆநந்தமான தெரிசனம் அநுக்கிரகஞ் செய்தார். இவ்வாறு திருமணவாளக் கோலந் தெரிசனஞ் செய்த மகாமுனிவர் ஆனந்தக் கடலிலே அமிழ்ந்தினவராய் சரீர முற்றிலும் புளகங்கொள்ள வாய் தடுமாற இரண்டு கைகளுஞ் சிரசின்மேலேற ஆனந்தக் கூத் தாடி எளியேனைய என்னை யோர்பொருளா யெண்ணி உம்மு டைய அபரிமித வைபவ கல்யாண தெரிசனத்தை யநுக்கிரகஞ் செய்த பிரபுவே உமக்கு நமஸ்காரம், சந்திரனை சடையில் தரித்த மகா மூர்த்தியே உமக்கு நமஸ்காரம். வேதங்களினலே பூசித்து வணங்கி ஸ்தோத்திரஞ் செய்யப்பட்ட மணவாளக் கோலத்தை உடையவரே உமக்கு நமஸ்காரம், உமாபதியே உமக்கு நமஸ்கா ரம் என்று இன்னும் பலவாறாகத் துதித்து தண்டாகாரமாய்ப் பாதத்திலே வீழ்ந்து கிடந்த முனிபுங்கவரைச் சிவபெருமான் தமது திருக்கரத்தினலே எடுத்து உடலைத் துடைத்து முதுகைத் தடவி யணைத்து ஏ அன்பனே! கேட்கத்தகாத வரமானலுங்கேள் உனக்கு இப்போது தருகிறோம் என்ன, பின்னையும் நமஸ்கரித்து எம்பெருமானே தேவரீர் அளவு கடந்த கருணை என்னிடத்தில் வைத்திருக்கிறீர் யான் எதை வேண்டுவேன், வேண்டத்தக்கது

ஒன்றுமில்லை. ஆனால் உலகத்திலேயுள்ளவர்கள் வாழும் பொருட்டு இந்த மணவாளக் கோலத்துடன் எப்போதும் இவ்விடத்திலே எழுந்தருளியிருத்தல் வேண்டும். தரிசனங் கொடுத்த புண்ய காலமாகிய தினத்திலே ஒவ்வொரு வருஷங்களிலேயும் சொல்லப் பட்ட புண்ய தீர்த்தங்களிலே ஸ்நானஞ் செய்து உம்முடைய மணவாளக் கோலத்தை தரிசித்து வலஞ்செய்து வன்னிவிருக்ஷ மூலத்திருந்து ஸ்ரீ பஞ்சாக்ஷர செபஞ்செய்தவர்களுக்கும் மாசி மகத்திலே மணவாளக் கோலத்தை தரிசித்தவர்களுக்கும் சிவ கணங்கள் சூழ்ந்து வணங்கும்படியான பெரிய பதவியை அநுக் கிரகஞ்செய்யவேண்டும் என்று கேட்ட வரங்களெல்லாம் குறை வரக்கொடுத்துத் திருமூலட்டானத்துக்கு மேல் பால் கீழ்திசை நோக்கி எழுந்தருளியிருந்தார். சர்வதேவர்களோடுங்கூடச் சிவ பெருமான் கைலையினின்று மெழுந்தருளிவந்து தங்கியருளிய படியால் அதுமுதல் அந்தத்தலத்துக்குத் தட்சிண கைலாயம் என்று ஒரு நாம முண்டாயிற்று. அங்குள்ள திருவுருவத்தைக் கண்டு தரிசித்தவ ரடையும் பேற்றைக் குறித்துச் சொல்லுதல் முடியாது. மணவாளக்கோல வைபவத்தைக் கேட்பவர்கள் சொல் லுபவர்களும் சிவசம்பதமடைவ தல்லது இம்மை மறுமைத் துய ரத்தை ஒருபோதும் அடையார்கள்.

மணவாளச் சருக்கம் முற்றிற்று.

புவனிவிடங்கச் சருக்கம்

திருக்கைலாயத்திலே நடந்த கலியாணக் கோலத்தை அகஸ் திய மகரிஷியின் பொருட்டு இங்கே அநுக்கிரகம்செய்த கதை யைச் சொன்னோம். புவனி விடங்கேசப் பெருமான் எழுந்தருளி வந்த கதையைச் சொல்லுகின்றோம் கேளுங்கள். முன்னொரு காலத்திலே தேவர்களுக்கும் அசுரர்களுக்கும், ஒரு மஹா யுத்தம் ஏற்பட்டு அதில் தேவர்கள் படை தோல்வியடைந்து யாதுசெய் வோமென்று வைகுந்தத்தை யடைந்து விஷ்ணுமூர்த்தியினிடத்தி லே சொல்ல அவர் ஓ தேவர்களே ! இந்த யுத்தத்தில் சயம்பெற வேண்டுமானால் பூலோகத்திலே சூரியகுலத்திலே பிறந்த முசுகுந் தன் என்னும் பெயரையுடைய ஒரு அரசனிருக்கின்றான். அவன் என்னைப்பார்க்கிலும் அதிக பராக்கிரமமுடையவன், அவனிடஞ் சென்று சொல்லுங்கள் அவன் சயித்து தருவான் எனக்கேட்டு முசு குந்த சக்கரவர்த்தியிடத்தில் வந்து சொன்னமாத்திரத்தில் அச்ச மடையாதீர், அப்படியே உங்களுக்கு சயமுண்டாக்கித் தருகிறேன்

என்று தன்குமாரனிடத்தில்இராச்சியத்தை யொப்புவித்து ஆளும் படிசெய்து பாண்டவர்களுக்கு உதவிசெய்த விஷ்ணுவைப்போலத் தேவர்களுடன் இரதம் கஜம் துரகம் பதாதி யென்னும் நால்வகைச் சேனைகளுடன் அசுரர்களுடன் பலவாறாக நெடுநேரம் யுத்தஞ் செய்து அவ்வவுணர்களை சயித்து சயங்கொண்டான். அப்போது தேவர்கள் முசுகுந்தனை கைகளினாலே தழுவி யணைத்து அநேகம் ஆசிர்வாதஞ்செய்தார்கள். சேனைகள் சூழ்ந்து வரும்படி தேவேந் திரன் தன்னுடைய இந்திர விமானத்தில் சமமாக அரசனை ஏற் றிக்கொண்டுபோய் தேவலோகத்திலுள்ள வைபவங்களை யெல் லாம் ஒன்றொன்றாகக் காண்பிக்கக் கண்டுகளித்து உலாவிவருங் காலத்தில் கற்பகதருக்கள் கலந்துநிற்கின்ற சிருங்காரவனநடுவிலே யுள்ள வோராலயத்திலே இரத்தினசிம்ஹாசனத்திலே உமாதேவி யும் ஸ்கந்தமூர்த்தியுந் தானுமாயெழுந்தருளியிருக்கின்ற கருணைக் கடலாகிய சிவபெருமானைக் கண்டான். கண்ட முசுகுந்தனானவன் ஆனந்தவெள்ளத்திலழுந்தி பரவசனாகி மெய்புளகித்து ஒ தேவர் களுக்குத்தலைவனாகிய தேவேந்திரா! எனக்குபரமானந்தத்தையுண் டாக்கிய இவ்விடங்கேசனைத் தரல்வேண்டுமென்று வேண்ட வேண் டியபடியே கொடுக்க மனமிணங்காமலும் பேருதவியாய் வந்து யுத்த விசயஞ்செய்துக்கொடுத்த உத்தமனை மறுக்கமாட்டாமலும் மனநொந்துநின்ற சமயத்திலே தேவர்கள்கூடி ஏ இந்திரா! அவன் கேட்டபடி கொடுக்கவேண்டுமென்றுசொல்ல தேவேந்திரனானவன் மனதிலே ஆலோசனைசெய்துக்கொண்டு பின்னையும் அம்முசுகுந்த னுடன் சென்று சில வளப்பங்களைக் காட்டிக்கொண்டு வருகின் றான். இதற்கிடையில் விசுவகர்மாவை யழைத்து இவ்விடங்கர் போல பேதமில்லாமல் செய்துவைத்து வந்தழைப்பாயாகவென்று சொல்லக்கேட்டு உடனே மனதினாலே சிருட்டிசெய்து மயன் அவன் கையில்கொடுக்க தேவேந்திரன் வாங்கி வீதிவிடங்கரிருந்த இடத்திலே விசுவகர்ம சிருட்டிமூர்த்தியை அமைத்துவைத்து முசு குந்தனுக்கு நவரத்தினங்கள் பொன்னுடை முதலிய தேவலோகப் பொருள்கள் உபசாரணையாகக் கொடுத்து நீ விருப்பி இவ்விடங் கேசரையும் உன்னுடைய இராஜதானியாகிய அயோத்திபுரிக்குக் கொண்டுசெல்வாயாக வென்னலும் முசுகுந்தன் நந்தனவனத்திற் சென்று வேறுவைத்த மூர்த்தியைப் பார்க்க முன்னுள்ள ஆனந் தந்தோன்றாமையால் தேவேந்திரனிடத்தில் வந்து நான்வேண்டின மூர்த்தி இதுவன்று என்றுசொன்னான். தேவேந்திரன் வேறு ஐந்து விக்கிரகங்களை உண்டாக்கி அரசனுக்கறியாதபடி ஒவ்வொன் றாகக்காட்ட அன்று அன்று என்று அனைத்தையும் மறுத்தான். இவ்வாறையும் மாற்றி அவ்வீதிவிடங்கரைக் காட்ட வேந்தன் கண்டு பரவசமடைந்து இம்மூர்த்திதான் நான்வேண்டிய மூர்த்தி, தருவாயாக வென, ஆறுமூர்த்திகளுடனே வீதிவிடங்கரையுஞ்

சேர்த்து ஆக ஏழு விடங்கரையும் பூலோகத்திலே புண்ணியக்ஷேத்திரங்களிலே பிரதிட்டை செய்வாயென்று கொடுத்தான், வாங்கிய அரசன் நவரத்னமயமாகிய விமானத்திலே ஏற்றிக்கொண்டு தேவர்கள் ஆசீர்வாதத்துடன் விடைகொடுத்தனுப்ப அயோத்தியாபுரிக்கு வந்து சேர்ந்து அப்பால் இம்மூர்த்திகளை உலகத்தின் க்ஷேமநிமித்தமாய் எவ்விடங்களில் வைக்கலாமென்று ஆலோசித்து வீதிவிடங்கரைத் திருவாரூரிலே பிரதிட்டை செய்தான் இரண்டாவ தாகிய புவனிவிடங்கரை வேதாரணியத்திலேயும் மற்ற ஐந்தையும் திருநாகை, திருநள்ளாறு, திருக்கோளிலி, திருவாய்மூர், திருக்காறாயில் ஆகிய இடங்களில் பிரதிட்டை செய்து தேவேந்திர பூசைப்போலவே இம்மூர்த்திகளுக்குப் பூசைநைவேத்திய முதலியவைகள் நடைபெறச் செய்தான். ஆறு விடங்கர்களினும் இம்மூர்த்தியில் அதிகமான விருப்பத்துடன் முசுகுந்தனும் தேவேந்திரனும் அடிக்கடி பலமுறை வந்து வணங்கிச் செல்வார்கள், பரமசிவனும் திருவாரூரிலுள்ள வீதிவிடங்கரைப்போலஇந்த விடங்கரிலும் சாந்நித்தியமாகி அநுக்கிரகஞ்செய்வார். ஆதலினலே இவ்வேதாரணிய க்ஷேத்திரத்திலே எழுந்தருளியிருக்கின்ற புவனிவிடங்கத் தியாகேசமூர்த்தியை தரிசித்தவர்கள் பிறந்த பயன் அடைந்தவர்களாவார். இல்லாதவர்கள் பிறப்பின் பயன் அற்றவராவார், தேவர்களாலே வணங்கப்பட்ட இம்மூர்த்தியைக் கண்டவர்களுந் துதித்தவர்களும் புகழைப்பேசுபவர்களும் கேட்டவர்களும் சிவபெருமானுடைய ஆனந்தபதவியை யடைவார்கள்.

புவனிவிடங்கச் சருக்கம் முற்றிற்று.

வீரகத்தி விமோசனச் சருக்கம்

ஓ தவமுனிவர்களே! இப்போது தேவேந்திரன் முசுகுந்தனுக்குக் கொடுக்க, அவன் வழியா யிங்கே வந்து எழுந்தருளிய புவனிவிடங்கேச மகாத்மியத்தைச் சொன்னோம். இனி இராமனுடைய வீரகத்தி விமோசனமடைந்த கதையைச் சொல்லுகின்றோம் கேட்பீர்களாக. வைகுண்டபதியாகிய விஷ்ணுமூர்த்தியானவர் பின்னொரு கற்பத்திலே தேவர்கள், முனிவர்கள் முதலிய உலகத்தவர்களுடைய துன்பங்களை நீக்கும் பொருட்டு தசரத குமாரனை இராமனாகவந்து அவதரித்து பஞ்சவடிதீரத்தையடையுங்காலத்தில் அதி பரிசுத்தையாகிய சீதாதேவியை அபகரித்துச்சென்ற இராவணனை வதஞ்செய்யும் ஆலோசனையுடன் அநேக வானர

வீரர்களுடன் மகேந்திரகிரிக்கு வந்தார். அப்போதில் அநீதியுடைய வனான இராவணனிடத்தில் நாமிருக்கலாகாதென்று அவன் தம்பியாகிய விபிஷணன் வந்து சரணமடைந்து அபயம் பெற்றுக் கொண்டு ஏ இராமா! இலங்கைக்குச்செல்வதற்கு அணை செய்ய வென்றால் கிழ்த்திசையிலே சர்வலோகங்களும் புகழத்தக்க வேதாரணியமென்று ஒரு க்ஷேத்திரமுண்டு, அதில் எழுந்தருளியிருக்கின்ற பார்வதிநாயகனான பரமசிவனை வணங்கி, அவனுடைய திருவருளையடைந்து தொடங்கல் வேண்டும். அது நன்மையாக முடியுமென்று வணங்கிச்சொல்ல, அது கேட்ட இராமன் அவ்வாறு வேதாரணியமடைந்து வேதநதி மணிகர்ணிகை முதலிய தீர்த்தங்களிலே ஸ்நானஞ்செய்து அங்கு செய்யவேண்டிய தானங்களுங் கொடுத்து, வேதாரணியேசுவரப் பெருமானுடைய சந்நிதியிலே வந்து நமஸ்காரஞ் செய்து பல விதமான ஸ்தோத்திரங்களைச் சொல்லி நிற்கின்றபோது பரமசிவன் பிரசந்நமாகி ஏ இராமா! உனக்கு வேண்டிய வரமென்ன கேளென, ஏ பிரபுவே! சீதையை யபகரித்துக்கொண்டுபோன இராவணனைக்கொன்று,மீட்டும் அந்த சீதையை நான் அடையும்படிக்கு அனுக்கிரகஞ்செய்யவேண்டும் என்ன, அப்படியேயாகவென்றருளி மறைந்தார். உடனே வானரச் சேனைகள் பலவித மலைகளையும், மரங்களையும் பிடுங்கிக் கொண்டு வந்து போட்டு ஒரு தினத்திலே பத்துயோசனை தூரம் அணைகட்டினபோது கடலானது பொங்கி யெழுந்து பெருக, உலகத்தவர்கள் முறையிடுமோசைகேட்டு மனமிரங்கிச் சிவபெருமான் கடலை நிற்பாயாகவென்று நிறுத்தினார். அவ்வாணையில் கட்டுப்பட்ட கடலானது மேலெழாதபடி உள்ளே கட்டப்பட்ட அணையை உடைப்பக் கண்கலங்கி மனமிரங்கி இராமன், இலக்குமணன், விபீடணன் இதர வானர சேனாதிபதிகள் எல்லோரும் வருந்தி நிற்கும்போது பார்வதி சமேதராய்ச் சிவபெருமான்தோன்றி, ஏ இராமா! மனந் தளரவேண்டாம், இந்த இடத்தில் அணைக்கட்டுவது சரியல்ல, வேறிடத்திலே செய்வாயாக வென்ன, அவ்விடத்தை யருளல் வேண்டும் என்று கேட்ட இராமனுக்கு இதற்கு நிருதி திக்கிலே ஒரு இடமுண்டு, அது உமாதேவியானவள் மகிடாசுரனை சம்ஹாரஞ்செய்து அதனாலே தேவிபட்டணம் என்னும் பெயரை யுடையது. அவ்விடந் தொடுத்து விசாலமாக அணைக்கட்டினால் உனக்கனுகூலமாக முடியும். இதுவுமன்றி, நீ கட்டிய இக்கடற்கோடியில் அமாவாசை முதலிய புண்ணிய காலங்களிலே ஸ்நானஞ் செய்தவர் பஞ்ச மஹா பாதகங்கள் செய்தவர்களானாலும், அவைகள் நீங்கி மேலான கதி யடைவார்கள். இதை நினைந்தாலும், புகழ்ந்தாலும், படிந்தாலும் எவ்வித கொடிய பாபங்களு நீங்கும், பிதுரர்களுக்குக் கடன்செய்தால் உலகமழியுமளவும் பேரின்பத்திலிருப்பார்கள். பதினாயிரங்காலங் கங்கையிலாடும் பலனை

இதிற்புகுந் தொருமுறையாட அப்போதே யடையலாம். உலகத்திலே புண்ணியம் என்பன எவைகளோ அவைகளை ஒரு சேரத் திரட்டி அதற்கு கோடிமடங்கு பலனும் இதில்ஆடுதல்என்று சொல்லிச் சென்றூர். பரமசிவனருளியபடியே திருவணைகட்டிச்சென்று இராவணனைக் கொன்று விபீடணனுக்கு பட்டங்கட்டி சீதையை யழைத்துக்கொண்டு வருங்காலத்தில் இராவணனைக் கொன்ற பிரமகத்தி தொடர அச்சேது மூலத்திலே இலிங்க பிரதிட்டை செய்து பாபத்தினீங்கி புஷ்பவிமானத்திலேறிச் சேனைகள்சூழ்ந்து வரும்படி அயோத்தியா புரியை நோக்கி வருங்காலத்தில் இயமனுக்குச் சமானமான கொடுமையுங் குரூரமு முடையதான ஒரு பெண்வடிவமாய்ப் பின்தொடர்ந்து வரக்கண்டு இராமன் பயந்து நீ யார் என்று கேட்க ஆகாசமும் அட்டதிக்குகளும் நடுங்கும்படி சப்தித்து அதட்டி தாடகை இராவணனை நீ கொன்றதனல் உனை விடாது தொடருகின்ற வீரகத்தியாகும், யான் உன்னுடனேவந்து உன்னை மட்டிலுமல்ல உன்சகோதரர் உன் குலத்திலுள்ளவர்கள் எல்லோரையும் வதஞ்செய்வேனென்றுள். அது கேட்ட இராமன் மனந்தளர்ந்து இன்னுமொரு சிவலிங்க பிரதிட்டை செய்யலாமாவென்று எண்ணும்போது ஒரு ஆகாயவாணி யெழுந்து ஏ இராமா ! இங்கே சிவலிங்கபிரதிட்டை செய்தால் தீராது. தேவலோகமும் வாழ்த்துகின்ற வேதாரணியத்திலேபோய் பிரதிட்டை செய்தால் இப்பழி நீங்கும். ஆனல் இப்போது ஒரு இடத்திலுந் தாமதிக்கலாகாது. தண்டகவனத்திலே பரதனுக்கு சொல்லிய வார்த்தையை நினைத்துக்கொண்டு நாட்களை எண்ணிக்கழித்து உன்வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றூன், சொன்னநேரஞ் சிறிதுதவறினும் உடனே அக்னிப்ரவேசம்செய்வான் அது இதினும் பெரும்பழியாகும். ஆதலாலயோத்திக்குச்சென்று மகுடாபிஷேகஞ்செய்துக்கொண்டு அப்பால் வேதாரணியம்வந்து சிவலிங்க பிரதிட்டைசெய்து பூசை செய்தால் வீரகத்தி நீங்கும். உன் பேரினலே ஒரூர் தானஞ்செய்தால் புத்திரப்பேறுனக்குண்டாகும் வீரகத்தி விமோசனத்தின் பொருட்டு உன்னலே பிரதிட்டை செய்யப்பட்ட மூர்த்தியை தரிசனஞ் செய்தவர்கள் கைலாயத்தில் வாழ்வார்கள் அல்லது பிறப்பிறப்பில் அலையமாட்டார்கள், இந்த சேதுவிலே ஸ்தாபித்த இலிங்கத்தை வணங்கினலும் இனிமேல் வேதாரணியத்திலே பிரதிஷ்டை செய்யும் சிவலிங்கத்தை வணங்கினலும் ஒரு தரமான பலனையே அடைவார்கள். இந்த சேதுவுக்கும் வேதாரணியத்தில் நீ கட்டிய சேதுவுக்கும் அதிகங்குறைவு என்பது இல்லை. என் பெயர் பூதநாயகன் உன்னுடைய துன்பம் நீங்கும்படி இதைச்சொல்ல வேதநாயகனென்னை யனுப்பும்படி வந்தேன் என்று சொல்லியது. அது கேட்டு மகிழ்ந்து அயோத்தியை அடைந்து மகுடதாரணஞ்செய்து இராச்சிய பரிபாலனஞ்செய்து

வரும்போது சிலநாட்சென்று ஒருநாளிலே இராக்காலத்திலே கனவிலே கரியமேனியுங் கொடிய பயங்கர உருவத்தை முன்போலக் கண்டுநடுங்கி ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை சபித்து காலையிலெழுந்து புண்ணிய தீர்த்தங்களிலே ஸ்நானஞ்செய்து நித்திய கர்மாநுட்டானம் பூசை தான முதலிய நியதிகளை நடத்தி சபாமண்டபத்திலிருந்து ஆசாரியராகிய வசிட்டரிடத்தில் இக்கனவைச்சொல்லி இலங்கையில் விசயம் அடைந்தபோது என்னைத்தொடர்ந்த வீரகத்தி இதை நீக்கும்வரை அசரீரி முன்னஞ் சொல்லியருளிய பிரகாரம் வேதாரணியம்சென்று இலிங்க பிரதிட்டை செய்தல் வேண்டுமென்ன வசிட்டர் இராமனைப் பார்த்து ஓ அரசனே ! அதற்கொத்த தவம் எந்த உலகத்திலுமில்லை. எவர்களுக்குந்தீவினையொழித்து நல்வினை கொடுக்கும் முத்தியையுங் கொடுக்கும் அந்த க்ஷேத்திரத்தை நினைந்தவர்களும் சொன்னவர்களும் அங்கு போகவேண்டுமென்று மனதிலே நினைத்தவர்களும் அங்கு சென்றவர்களும் அத்திருவெல்லைப்புறத்தை யடைந்தவர்களும் கண்டவர்களும் அங்கு வசிப்பவர்களும் அடையும் புண்ணியம் இவ்வளவுஎன்று சொல்லத்தக்கதன்ருன். தவஞ்செய்ய விரும்பினவர்களுக்கு பூலோகம் விசேடமுடையது. அதில் மேன்மை யுடையது சம்புத்திபம், அதன் மேலது பரதகண்டம், அதன் மேலது தென்திசை, அதனினும் மேலது வேதாரணியமாம். யாகங்கள் செய்யாமல் தேவலோக வாழ்வடையவும் நியதிகள் செய்யாமல் அவைகளின் பலன்கள் அடையவும் ஞானம்பெருமல் முத்தியடையவும் விரும்பினவர்கள் வேதாரணியத்தில்போய் வசிக்கப் பெறுவார்களேயானல் மேற்சொல்லியபடி பலன்களை நிச்சயமாக அடைவார்கள். இன்னும் அங்கு வசித்தவர்களுக்கு சர்வ தீர்த்தங்களினும் போயாடியபலன் கிடைக்கும். ஒரு பிராயச்சித்தமு மில்லாமல் சர்வ பாபங்களுங் கெட்டொழியும் என்று இவ்வாறு வசிட்டர் சொல்ல இராமன் கேட்டு அம்முனிவருடன் சிதை இலக்குமனன் இருவரையும் அழைத்துக்கொண்டு பரதனை இராச்சியவகிப்பில் வைத்துவிட்டு வேதாரணியத்தை நோக்கிச் செல்கின்ருன். அப்போது அவ்வீரகத்தியானது போகவொட்டாது தடுத்து அலறிக்கொண்டு பின்னே தொடர்ந்து வர பயந்து நடுங்கிய உள்ளத்தனுய் வேதாரணியம்வந்து சேர்ந்தான், வந்து சேருந்தருணத்தில் வீரகத்தியானது வடவாமுகாக்கினியைப் பொங்கிக்கோபித்து எட்டுத்திக்கிலுள்ளவர்களும் நடுங்கும்படி வாய்விட்டலறி ஆரவாரிக்க சிவபெருமானுடைய திருவருளினலே சிவாலயத்தில் எழுந்தருளியிருக்கின்ற விநாயகப் பெருமானெழுந்து திரும்பிப்பார்த்து இந்த சப்தம் எது என்று தெரிந்து மேற்கு முகமாய் நின்று வீரகத்தி என்னும் பழிரூபமான பெண்வடிவத்தையுதைக்கும்படி ஒருகாலை தூக்கிக்கோபித்து உங்கார சப்தமிட்டு அடக்கினர். அதுவும் அவ்

வாணைக்கஞ்சி உள்ளே செல்லாமல் இராமனைவிட்டு நீங்கியது. அவ் விநாயகப் பெருமானும் அக்கோலத்துடன் சர்வத்திராளும் அறியும்படி மேற்குநோக்கியபடியே வீரகத்திச்சேதக விநாயகனெனத் திருநாமம் பூண்டு நின்றருளினர். விநாயகப் பெருமானுக்கு விசேஷ பூசை முதலியவைகள் செய்து வணங்கி இனி ஒருபோதும் இப்பழி என்னை அடையாதிருக்க அருள்செய்ய வேண்டுமென அவ்வாறே யருளினர். இந்த விநாயகப்பெருமானை தரிசித்தவர்கள் பிரமஹத்தி முதலிய பாவங்களை நீக்கி இட்ட சித்திகளை பெற்று வாழ்வார்கள். பரம சந்தோஷத்தையடைந்த இராமமூர்த்தியானவர் மணிகர்ணிகை வேதநதி முதலிய தீர்த்தங்களிலே ஸ்நானஞ் செய்து வேதாரணியேசுவரப் பெருமானையும் மணவாளக்கோல மூர்த்தியையும் புவனிவிடங் கேசரையுந் தரிசித்து ஸ்தோத்திர நமஸ்காரங்கள் செய்து உத்தமமான புண்ணியகாலத்திலே உச்சி நேரத்திலே வேதாரணியேசுவரப் பெருமானுக்குத் தென்பக்கத்திலே வேதாகம விதிப்படியே வசிட்டமுனி வழியாக ஒரு சிவ லிங்கத்தைப் பிரதிட்டை செய்தார்.

அவ்விராமநாதனை தரிசனஞ்செய்தவர்கள் எவ்வளவு பாபங்கள் செய்திருந்தாலும் அவை நீங்கி முத்தியடைவார்கள். (உத்தமப் பிராமணர்களுக்கு) வேதாரணியத்துக்கு மேற்பால் இராம சந்திரபுரம் என்று ஒரு கிராமமும் பூமிதானஞ்செய்து அயோத்தியாபுரியை யடைந்தார், இராமேசுவரத்தில் சிவலிங்க பிரதிட்டை செய்துந் தீராத பழி இங்கே தீர்ந்ததென்றால் இதன் மேன்மைகள் யாராலே சொல்ல முடியும். புவனிவிடங்கப் பெருமான் சந்நிதானத்திருநீற்றை நெற்றியில் தரித்தால் முத்திகிடைக்கும், இராம நாதனீறிடப் பெரிய விஷங்கள் தீரும், பாபத்தைப் போக்கும். இச்சருக்கத்தைக் கேட்பவர்கள் படித்தவர்கள் பிரமஹத்தி முதலிய பாபத்தை நீக்கி சந்தோஷத்தை யடைவார்கள்,

வீரகத்தி விமோசனச் சருக்கம் முற்றிற்று.

பிரமசாரிச் சருக்கம்

ஓ முனிவர்களே! வீரகத்தி விமோசனத்தைச் சொன்னேம். பிரமசாரிப் பிராமணனுடைய பாபவிமோசனத்தைச் சொல்லுகின்றேம் கேட்பீர்களாக. இராமசந்திரபுரமென்னும் ஊரிலே ஒரு பிராமணனிருந்தான், வேதமுதலியசாஸ்திரங்களிலே தேர்ச்சியுள்ளவன் அவன் தனக்குப் பிறந்த பிள்ளையினுடைய சாதகத்தை கவனித்துப் பார்த்தபோது பதினாறுவது வயதிலே மதுபானம்,

மாதுருகமனம், கோகத்தி இவைகளைச் செய்வான் என்று தெரிந்து அதுவே சோகமாயிருந்து இறந்தான். சிலகாலஞ்சென்று பிள்ளை தகப்பன் எழுதிவைத்த சாதகபலனைப்பார்த்து மனம் வருந்தி இங்கே இருந்தாலல்லவா இவைநேரும், அக்காலம் அளவும் நீங்கி தேசசஞ்சாரம் செய்து அப்பால் வருவோம் என்று நினைத்துத் திருவாரூர், திருவிடைமருதூர் முதலிய புண்யஸ்தல தரிசனங்கள் தீர்த்தஸ்நான முதலியன செய்துகொண்டு காசியை அடைந்தான். கங்கா ஸ்நானம் பிண்ட தருப்பண முதலியவை செய்து பின்னு மநேக மிடங்கள்சென்று நம்முடைய சரீரம் பேறடைந்தது என்று நினைத்துப்பதினைந்தாவது வயதிலே பதினாறுமுடிந்ததாக எண்ணி இனி நம்மூரைப்போயடைவோமென்று திரும்பிவரும்போது திரு வாரூரையடைந்து தன்னூர்வளம் விசாரிக்க முன்னையி னின்றுங் குறைவடைந்ததாகக்கேட்டுப் பார்க்க விரும்பிவந்தான். இராக் காலமும்வந்தது சந்தியாவந்தனாதிகளை முடித்துக்கொண்டு ஊரில் உள்ள அடையாளங்கள் மறந்தும் மாறியும் போயிருப்பதால் விடிந்து கவனிப்போம், எப்போதும்போல இவ்விடத்தில் பிச்சை யுணவைக்கொண்டு உண்போமெனப் புறப்பட்டான்.

இஃதிப்படியாக இவன் தாயானவள் கணவனிறந்து பிள்ளை யுந்தேசாந்திரஞ் சென்ற பின்னர் உத்தம குணம் நடை இவைகள் மாறி ஒரு வீட்டில் வேலைசெய்து கொண்டிருக்கின்றாள். அவ்வீட் டிற்கு அவன் வந்து ஊரில் வாங்கிய பிக்ஷையை யுண்ணுவதற்கு இடந்தரலாமோவென்று வினவியபோது அப்பிரமசாரியின் அழ கைக்கண்டு அமங்கலியாகிய அத்தாய் மகனென்றறியாது மயங்கி வேண்டிய உபசரணையுடன் உண்ணச்செய்ய அப்போது உட்கொள் ளத்தண்ணீரை விரும்பிக்கேட்டவனுக்கு அணையும் காமவிருப்பத் துடன் மனந்தடுமாறச்செய்ய எண்ணி மதுவைத் தண்ணீரென்று கொடுத்தாள், வினைவழியாலறியாது உண்டு உன்மத்தனாகிப் பக் கில் கட்டியிருந்த பசுவை ஒரு தடியினாலே அடித்துக் கொன்று தின்றான். இதுதான் நல்ல தருணம் என நினைத்து அவளை பள்ளி யில் யிழுத்து அணைத்து நினைத்தபடியே கூடினான். இராக்கால முடிய விடியலிலே மதுமயக்க நீங்க என்ன காரியஞ் செய்தோ மென நடுங்கிப் பிரமசாரி யக்கைமையை நீ யாரென்று விசாரித்த போது பிள்ளை பிறந்ததுஞ் சாதகமமைந்ததும் அதனாற் கணவ னிறந்ததும் பிள்ளைபரதேசஞ்சென்றதுமாகிய கதைகளைச்சொல்ல மனநொந்து கணிதநூல் சொன்ன காரியம் நேர்ந்து விட்டதே இனி என்ன செய்வோம், இப்படியும் ஒருவிதி யுண்டோவென ஏங்கி மதுபானம் கோஹத்தி மாதிருகமனமாகிய மகா பாபங் களைச்செய்து நரகத்தடையத்தக்க இந்த உடலை இன்னமும் வைத் துக்கொள்ளலாமா இதற்கு யாதொரு பரிகாரமுமில்லை, கழுத்தை யறுத்துக்கொண்டு மரணமடைவதே தீர்மானமெனச் செய்யும்

காலத்திலே வேதவனேசப்பெருமான் எதிரேவந்து வாள் ஊட்டி தண்டு முன் தன்திருக்கரத்தினுலே பிடித்துக்கொண்டு, ஏ பிராமணு ! அரிதலை நிறுத்து, பெரும்பாவஞ்செய்தோ மென்று பயமடையாதே, நம்முடைய மணிகர்ணிகா தீர்த்தத்திலும் வேதநதியிலும்வந்து மூழ்கு உடனேதீரும், என்றருளிய சிவசந்நிதானத்திலே என் பாப நீங்குமானுல் என் தாய்செய்த பாபப்ராயச்சித்தமென்ன வென அவளுக்கும் அதுதான், அப்படியே மூழ்கத்தீரும் என்றருளி மறைய பிராமணனுந்தாயுமாய் வேதாரணியம் வந்து மணிகர்ணிகையிலும் வேதநதியிலும் ஸ்நானஞ்செய்து வேதாரணியேசுவர சந்நிதியடைந்து சுவாமியையும் அம்பாளையும் வணங்கிப் பலவிதமான ஸ்தோத்திரங்களைச்செய்ய சிவபதத்தை பிராமனனுக்கும், சத்திபதத்தைஅவனுடைய தாய்க்கும் அநுக்கிரகித்தார். உலகத்திலே செய்யத்தகாத பெரும் பாவஞ் செய்தவர்களுக்கும் பெரும் புண்ணியஞ் செய்த உத்தமர்களடையத்தக்க மோக்ஷம் கிடைக்குமேயானுல் வேதாரணிய வைபவம் யாராலேசொல்லமுடியும். இதைக்கேட்டவர்களும் சொன்னவர்களும் பாப நிவர்த்தியடைந்து சிவலோகத்தை யடைவார்கள்.

பிரமசாரிச் சருக்கம் முற்றிற்று.

கோலாகலச் சருக்கம்

ஓ முனிபுங்கவரே ! அறியாதபடி செய்த பாவங்கள் தீரும் அல்லது அறிந்துசெய்த பாவங்களுந்தீருமென்று சொன்னதற்குக் காரணமென்ன, அப்படித்தீர்ந்த துண்டா, சொல்லியருளவேண்டும் என்று நைமிசவாசிகள் கேட்கச் சூதமுனிவர் சொல்லுகின்றுர். முன்னெருகாலத்திலே சாகல்யபுரத்திலே வேளாளர் குலத்திலே பிறந்த கோலாகலன் என்பவன் ஒருவன் இருந்தான். அவன் ஐசுவரியத்தாலும், அழகினுலும், யௌவனத்தாலுஞ் சிறந்தவன் அத்தேசத்து அரச குமாரனுக்கு மிக்க நண்புடையவனுக இருந்தான். இவைகளோடு துன்மார்க்க புத்தியினு மேம்பட்டவனுதலால் காமவழியிலே புத்தியைச் செலுத்தி நல்லவர்கள், தீயவர்கள், உயர்ந்தவர்கள், இழிந்தவர்கள் என்பதை எண்ணுதபடி நினைத்த மடவார்களிடத்திலே கூடிக்காமஞ்செய்து சிலநாட்களில் பெரியோர்கள் தேடிவைத்த பொருள்களை முற்றிலும் அழித்துவிட்டு அப்பால் தீச்செயலின் செலவுகளுக்குத் திருட்டுப்பொருளை துணையாக நடத்திவந்தான். அரசன் அறிந்து பெருந்திருடனுன பாவியான இவனை சிரச்சேதம் பண்ணும்படி ஆக்ஞாபனஞ்செய்ய பக்

கத்திலே யுள்ளவர்கள் கீர்த்தியான குடும்பத்திலே பிறந்தவன். இனி இவ்வாறு நடவாதபடி சொல்லி விலக்கிவிட வேண்டுமென்று விலக்கியபடியால் கொலையிநிங்கி அப்பால் காமத்திச்சை செய்கைக்கு வேறுபொருள் பெறமுடியாமையினாலே பெற்றதாயினிடத்திலே கலவிசெய்ய எத்தனித்தான். அப்போது அவள் அடே பிள்ளாய் இதென்ன அடாதகாரியம் இப்படியும் நினைப்பதுண்டா பிரமகத்தி தோஷம் வந்தாலுந் தீரும், இது தீராது. உனக்குப் பிசாசு பேய் பிடித்து அதனுடைய சேட்டையோ அல்லது பைத்தியம் பிடித்து சித்தங்கலங்கி யிருக்கும். அதன் சேட்டையோ தெரியவில்லை. எதுவானாலும் ஆகட்டும் ஆ ஆ விடு விடு மைந்த உனக்கு வேண்டுமென்றால் என்னை யல்லாது யாரை நினைத்தாலும் கூடும்படி செய்கிறேன் என்று பலவிதமாகச்சொல்லியுங் கேளாது காமாவேசத்துட னமளியிலிழுத்துத்தள்ளி நினைத்தபடியே முடித்தான். இதைத் தந்தையானவனறிந்தான் அறிந்தவளவிலே இவனிருப்பது இடையூரானகாரியம் என்று அடித்து அவனையுங்கொன்றான். ஊரிலுள்ளார் சேர்ந்து இவன் மதுபானம் பண்ணியும் மாதாவைப் புணர்ந்தும் பிதாவைக்கொன்ற மகாபாபி, இங்கிருக்கலாகாதென்று துரத்தியபோது தாயையும் பற்றி இழுத்துக்கொண்டு வனங்களிலே போய்த்தங்கி அங்குள்ள மிருகம் பறவைகளைக்கொன்று தின்றும் வனவழி வருபவர்களைமறித்து வழிப்பறி பறித்தும் இவ்வாறு ஒவ்வொருவனங்களாகத் தங்கித்திரியுங்காலத்தில் இவர்களுக்கு இரண்டு பிள்ளைகளும் பிறந்தன.

இப்படிச் சிலநாட்கள் சென்றபின்னர் ஊழ்வலியினால் பல வனங்களிலும் போவதுபோல நான்கு வேதங்களும பூசித்த உத்தம க்ஷேத்திர வேதாரணிய வனத்தை அடைந்தான். இரண்டு மாதங்களிருந்தார்கள். அப்போது ஒருநாள் மிருகங்களைத்தேடிச் செல்லும்போது அங்குள்ள ஒரு புலியானது எழுந்து கோலாகலன் முதலிய நால்வரையும் அடித்துக்கொன்றது. உடனே மகா பாபிகளின் காலமுடிவு இன்றென்று இயமதூதர்கள் ஓடிவந்து நால்வரையுங் கால பாசத்தினாற் கட்டி யிழுக்கின்ற காலத்திலே திருக்கைலாசத்திலே எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமான் நந்திதேவரைப்பார்த்து ஓ நந்திதேவா! நம்முடைய வேதாரணியத்திலே தங்கினவர்களும் இறந்தவர்களும் என்ன பாவிகளானாலுந் தீவினை நீங்கி நற்கதியடைவார்கள். அப்படியாக இன்று அங்கு இறந்த கோலாகலனை இயமதூதர்கள் இம்சித்து இழுக்கின்றார்கள். ஆதலால் நம்முடைய கணங்களை சீக்கிரத்தில் அனுப்பி இங்கு அழைத்து வரும்படி செய்வாயாக எனக்கேட்டுச் சிவகணங்களை யனுப்ப அவர்கள்போய் இயமகணங்களோடு யுத்தஞ்செய்து விலக்கி நால்வரையும் விமானத்தி லேற்றிச் சிவலோகங் கொண்டு வந்து சேர்த்தார்கள். இயம தூதர்கள் எமசந்நிதியிற்போய்

ஏ மஹாராஜாவே! மகா பாபியாகிய கோலாகலன் முதல் நால்வர்களையும் பாசத்தால் கட்டி இழுத்தபோது சிவகணங்கள் வந்து எங்களுடன் போர்புரிந்து அவர்களை மீட்டுச் சிவலோகங் கொண்டு போய்ச் சேர்த்தார்களெனக் கேட்ட இயமராசன் சித்திரகுத்தனை யழைத்து கோலாகலன் ஏதேனும் புண்ணியஞ் செய்த கணக்குண்டாவென அவன் இறக்குமளவும் பாவமேதான் செய்திருக்கிறானென்று சொல்ல, மிகுந்த கோபங்கொண்டு பரமசிவனாலே தன்னதிகாரம் நடைபெறும்படி கொடுக்கப்பட்ட கால பாசம், தண்டம், கொடி முதலியவைகளை எடுத்துக்கொண்டு சிவசந்நிதானத்தை யடைந்துத் தண்டாகாரமாக நமஸ்கரித்து இவைகளைத் திருமுன்னேவைத்து ஸ்தோத்திரஞ் செய்து நின்ற இயமனைப் பார்த்து, இங்கு இவைகளை இன்றுவைத்தகாரணம் என்னவென, உடனே பணிந்து எம்பெருமானே! கோலாகலன் என்பவன் மகா பாவி. இவன் சிவலோக மடைவானேயானால் நரகமடைபவர்கள் யாவர், எனக்கு அதிகாரம் எதற்காக, தண்ட முதலியவைகளை வைத்துக்கொள்வது எதற்காக, ஏ பகவானே! உம்முடைய திருவுளப்படி எவர்களையாவது என்வேலையை பார்க்கவைத்துஎனக்கு உம்முடைய சந்நிதானத்தில் வேறு பணிவிடை செய்துகொண்டிருக்கும்படி அநுக்கிரகம் பண்ணவேண்டும் என்று பிரார்த்தித்தான். அப்போது பரமசிவன் கருணைகூர்ந்து அழைத்து ஓ இயமனே! கோலாகலன் மகா பாபி என்பது உண்மைதான், ஆனால் அவன் நமக்கு பிரீதிகரமாகிய உத்தம சிவக்ஷேத்திர வேதாரணியத்திலே சிலகாலம்வாசஞ்செய்து இறந்தான். அப்பெரும் புண்ணியத்தால் சிவலோகமடையக்கூடியவனானான்,

அவ்வேதாரணியத்திலே ஒருகணப்போது இருந்தாலும் அல்லது இறந்தாலும் பாசநீக்கமடைந்து என்னிடம் வருவார்களல்லது உன் வசமாகமாட்டார்கள், அந்த இடத்தின் பெருமைகள் என்னாலேயுஞ் சொல்ல முடிந்ததன்று ஆதலால் வேதாரணியத்திலிறந்தவர்கள் வசித்தவர்களிடத்திலே நீ போகாமல் உன்னுடைய அதிகாரத்தைமாற்றும்படி குறைவறச்செலுத்திவருவாயாக என்று ஆக்ஞாபனம்பண்ண கீழே வீழ்ந்து நமஸ்காரஞ்செய்து இப்படியானால் இனி வேதத்தில் வகுத்தபடி தவம், செபம், பூசை, யாகம் முதலியவைகளை ஒருவரும் செய்யமாட்டார்கள் செய்யவும் வேண்டுவதில்லை. வேதாரணியத்தில் சிலநேரம் வசித்து அல்லது அங்கிறந்து சிவலோகத்தை யடைவார்கள். நரகபூமிக்கு வேலை இல்லை. ஆனாலும் சந்நிதானத்தில் நானொன்றுஞ் சொல்லத்தக்கவனல்ல கேட்க வேண்டியதானபடியால் உத்தரவு பெற்றுக்கொள்ளுகின்றேன் என்று சொல்லி தம்முடைய பட்டணம்போய்ச்சேர்ந்தான் கோலாகலன் முதலிய நால்வர்களுக்குங் கருணாநிதியாகிய சிவபெருமான் தன்னுடைய திருவடி நீழலைத் தந்தருளினார். பெற்ற

தாயென்று தெரிந்தும் அடாதகாரியஞ்செய்த மகா பாவியாகிய கோலாகலனும் அப்பாவம் நீங்கி மேலானகதி யடைவானென்றால் வேறு என்ன பாவங்களானாலும் தீருமென்று சொல்லவும் வேண்டுமோ என்றருளினார். இதைச் சொன்னவர்களும், கேட்டவர்களும் பாவங்களினின்று நீங்கி மேலான சிவபதத்தை அடைவார்கள்.

கோலாகலச் சருக்கம் முற்றிற்று.

மகாபலிச் சருக்கம்

தவத்தவர்களே! கோலாகலனுடைய சரித்திரஞ் சொன்னோம். இனி மகாபலியின் சரித்திரஞ் சொல்லுகின்றோம் கேட்பீர்களாக. வேதாரணியத்திலே அகத்தியமுனிவரின் பொருட்டுக் கலியாணக் கோலங்கொண்டெழுந்தருளிய சிவாலயத்திலே ஆகம விதிப்படி ஆதிசைவர்கள் ஒவ்வொருநாளும் பூசை செய்துவருவது போல ஒருநாட்செய்து அர்த்தசாமத்திலே அகண்ட தீபமும் எரியும்படிசெய்து திருக்காப்பிட்டுக்கொண்டு வந்தபிறகு பார்வதி தேவியாரும் பரமசிவனும் ஆனந்தமாக இருக்குந் தருணத்தில் சந்நிதானத்துத் திருவிளக்கானது மங்குதலடைய அதுநோக்கிய பரமசிவன் தன் தேவியாகிய பார்வதியைப்பார்த்துப் பெண்ணே! இதோ மெலிவாக வெறிகிற விளக்கை இப்போது யாராவது தூண்டுவார்களேயானால் அவர்களுக்குச் சக்கிரவர்த்தியாயிருக்கும்படி அநுக்கிரகம் செய்வோமெனக் கேட்ட அம்மையார் ஏ பிரபுவே! கதவு திருக்காப்பிட்டு நாம் இருவரும் ஏகாந்தமாயிருக்குமிங்கே வந்து யாவர் தூண்டி உம்முடைய திருவருளினாலே கொடுக்குங்கொடையைப் பெறப்போகிறார்கள் என்று சொன்னாள். அப்போது பூர்வசன்மத்தினாலேசெய்த புண்ணியவசத்தினாலே அங்கு உள்ளே சஞ்சரிக்கின்ற ஒரு எலியானது ஓடி விளக்கிலேறி நெய்யைத் தின்றது. தின்னும்போது நெய்ச்சுடர்த்தி மூக்கிலே சுட, உடனே சூடுதாங்கமாட்டாமல் மூக்கை யசைத்து நீட்டத் திரித் தூண்டப்பட்டு விளக்குப் பிரகாசமாக வெரிந்தது. பரமசிவனுக்கு சந்தோஷமுண்டாயிற்று. அதுகண்ட பார்வதி தேவியார் ஏ கர்த்தரே! தேவரீர் சொல்லிய பிரகாரம் இவ்வெலிக்கு அரசு உரிமை அளித்தருளல்வேண்டுமெனச் சிவபெருமான் எலியை யழைத்து பூமி, அந்தரம், சுவர்க்கம் ஆகிய மூன்றுலகங்களுக்கும் அரசனாகும்படி அநுக்கிரகித்தார். அவ்வெலியானது விரோசனனுடைய மனைவி வயிற்றிலே புத்திரனாய்ப்பிறந்து மகாபலியென்னும் பெயர் பூண்டு மூன்றுலகங்களையுஞ் சயித்து சக்கிரவர்த்தியாகித் தேவ

லோகபாக்கியங்களாகிய காமதேனு, கற்பகவிருக்ஷம், சிந்தாமணி அரம்பை, ஊர்வசிமுதலிய அளவிடப்படாத எல்லாப்போகங்களேயும் அனுபவித்தான். அப்படி யனுபவிக்குங் காலத்திலும் இவ் வாழ்க்கை வேதாரணியேசுவரப் பெருமான் றிருவருளால் வந்த தென்றெண்ணி யனுபவித்தான். ஆனாலும் அசுரகுலசனனமடைந் தவனானபடியால் அகந்தையால் மூடப்பட்டுத் தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் மற்று முத்தமர்களுக்கும் இடுக்கண் செய்யத் தொடங்கினான்.

அது தாங்கமுடியாமல் எல்லோரும் வருந்தினார்கள். தேவர்கள் ஒருங்குசேர்ந்து பிரமதேவனிடஞ் சென்று சொல்ல, அத் தேவர்களுடன் பிரமதேவன் கூடி யோசனைசெய்து இது வேதாரணியேசுவரனாலே கொடுக்கப்பட்ட ஆட்சியின் வலுவாகுமென்று எண்ணி வேதாரணியேசுவர சந்நிதானத்தை யடைந்து முறையிட்டபோது சிவபெருமான் விஷ்ணுமூர்த்தியை யழைத்து ஏ முகுந்தா! மகாபலி என்பவனுக்கு ஒருநாள் நம்முடைய சந்நிதானம் விளக்குத் தூண்டிய புண்ணியத்திற்காக சந்தோஷித்து மூன்றுலகங்களையுஞ் சிரஞ்சீவியாக யிருந்து ஆளும்படிக்குக் கொடுத்தோம். அதுபெற்ற வகந்தையினாலே நம்முடைய தொண்டர்களுக்குத் தீமை யதிகஞ் செய்கின்றான், என்னுடைய புத்திரர்களானால் என்ன? எனக்குச் சகோதர பந்துத்வம் உடையவர்களாக யிருந்தால் என்ன? நம்முடைய அன்பர்களுக்குத் தீமை செய்வார்களேயானால் அவர்கள் நமக்கே தீமை செய்கிறவர்களாக நினைப்போம். ஆதலால் அம்மகாபலியை அடக்கிவருவாயாக. அடக்கும்வழியைச்சொல்லுகின்றோங்கேள். அயனுக்கு நாம் மனம் ஒப்பிக்கொடுத்த உலகங்களையும் வலியையும் யுத்தம்செய்து கவர்தல் கூடாது. அன்றியு முடியாது. வாங்குதற்குரிய ஒரு வடிவு யெடுத்து யாசித்து வாங்கிக்கொண்டு பின்னை அவனையுங் கொல்லாதபடி வைத்துவரல்வேண்டும், எனக்கேற்ற விஷ்ணுமூர்த்தியானவர் காசிபமுனிவரிடத்தில் வாமனவதாரம் எடுத்துத் திரிலோகாதிபதியாகிய மகாபலியிடத்திலேபோய் மூன்றடிமண்யாசகமாக வேண்ட, அசுர குருவாகிய சுக்கிரபகவான் கொடுக்கலாகாது. விஷ்ணுவின் மாயம் இது எனவும் கேளாதபடிக்கு ஔதாரியத்தினாலே மூன்றடி மண்ணை தத்தஞ்செய்தான். அங்கு அவ்வாறு தானம் வாங்கியவர் பெரிய உருவத்தை எடுத்துப் பூமி முழுமையையும் ஒரு அடியாக அளந்தார். மற்றடிக்கு என்ன சொல்லுகின்றாயென்றுகேட்டு அவனுடைய வலுமைபொருண் முதலிய யாவையும் வாங்கி அவனுடைய சிரசிலே தன்னுடைய அடியைவைத்துப் பாதாளலோகத்திலே இருத்தி, ஏ மகாபலியே! ஒரு தீமையுஞ்செய்யாது இங்கேயிரு என்று வைத்து மஹா யாகங்களிலே அக்னி சொலிக்கா திருக்குங்காலத்தில் கொடுக்குமவியும்விதியை

அனுசரிக்காமல் செய்கிற புண்ணியங்களும் அபாத்திரங்களில் கொடுக்குந் தானங்களும் உனக்குப் பிரீதியாகக்கடவது என்று சிவாக்ஞைப்படி வரங்கொடுத்து நிறுத்தினர்.

நெய் தின்னப்போன எலி சுட்டைமாற்ற நூக்கியதனுல் தூண்டிய புண்ணியத்துக்கு இவ்வளவு கிடைக்குமேயானுல் மனப் பூர்வமாக வேதநாதன் சந்நிதியில் நெய்யைக்கொண்டு தீபமிட்ட வர் அடையுங் கதியை யாவர் சொல்லுவார்கள். வேதநாதன் சந் நிதியில் அவியுந் தருணத்தில் விளக்கைத் தூண்டினுலவர்கள் அளவிடப்படாத செல்வத்தையும் புத்திரப்பேற்றையும் அடைந்து அரசராகவும் விளங்குவார்கள். விளக்கை யேற்றுவார்களானுல் சிவபதம் அடைவார்கள். ஒரு விளக்கை ஏற்றினவர்களுக்கு இப் படியானுல் சந்நிதானத்தில் பலவிதமான தீபங்களைப் பலவாகப் போட்டவர்கள் பலங்களைச் சொல்லமுடியாது. இக்கதையை படித் தவர்கள் கேட்டவர்கள் நினைத்தவர்கள் மேன்மையுடையவராலும் பெறமுடியாத வின்பத்தை யடைந்து வாழ்வார்கள்.

மகாபலிச் சருக்கம் முற்றிற்று.

சவுதாசச் சருக்கம்

ஓ முனிவர்களே! சவுதாசனுடைய சருக்கத்தைச் சொல்லு கின்றோம் கேட்பீர்களாக. அயோத்தியாபுரியிலே சூரியகுலத்தரச னுன சவுதாச மஹாராஜா என்பவன் ஒருவனிருந்து அரசாக்ஷி செய்துவந்தான். அவன் ஒருநாள் இராசதருமப்படியே வனத்திலே சென்று கரடி, புலி, மான், சிங்கம், பன்றி முதலிய மிருகங்களைக் கொன்று வேட்டையாடி வருங்காலத்திலே ஒரு மலை முழஞ்சிலில் ஆணும் பெண்ணுமான இரண்டு மான்கள் கூடிக் கலவிசெய்துக் கொண்டிருந்தன. அதைக்கண்ட அரசன் ஒரு பாணத்தை விடவே அது பெண்மான்மீது தாக்கி இறந்தது. ஆண்மானுனது ஒரு கொடிய ராக்ஷதவடிவத்துடன் வந்து, ஓ அரசனே! நான் இராக் கதன் என் பெயர் சங்கர்த்தகன். இதோ இறந்து கிடப்பது என் மனைவி, வரரேகை என்பாள். நாங்களிருவரும் காமவேட்கையி னுலே மான் வடிவங்கொண்டு புணர்ந்தோம். வேறு யாதொரு தீமையுஞ் செய்யவில்லை. நீதியறிந்த அரசனுக இருந்தும் புணர்ச் சிக்காலத்திற் கொல்லலாகாதென்பதைவிட்டுக் கொன்றுவிட்டாய் ஆதலாலிப்பெண்பழிக்கு எதிரானபழி எப்படியும் உன்னிடம் வாங்குகிறேன் என்று சொல்லிச் சென்ருன். இதுகேட்டு சவுதாசன் அச்சமடைந்து அயோத்தியில் வந்து தமது குலகுருவாகிய

வசிட்டமஹாமுனிவருடன் சொன்னான். முனிவர்கேட்டு, ஓ அரசனே ! இராக்கதர்கள் மிகக் கொடியவர்கள். என்ன விளையுமோ தெரியவில்லை. அதனால் இனிக் கொஞ்சமேனும் பாவம் வந்தணுகாதபடி கவனமாக இருக்கவேண்டுமென்று சொல்லிச் சென்றார்.

இவ்வாராகச் சிலநாட்கள் சென்றபின்னர் அரசன் வசிட்ட முனிவரை யழைத்து சுவாமீ ! ஒரு யாகஞ் செய்யவேண்டுமென அவர் விதிப்ரகாரமாக யாகத்தை பூரணஞ்செய்து முடித்து அப்பால் மாத்தியாந்நிகஞ் செய்யும்பொருட்டுச் சரயுநதிக்கரையை அடைந்தார். அப்போது சங்கர்த்தகன் என்னும் இராக்கதன் வசிட்டமுனிவருடைய வடிவெடுத்துக்கொண்டுவந்து ஓஅரசனே! இன்றைக்கு மாம்சங்களுடன் உணவுகொள்ள விரும்பினேம் செய்வாய் என்று சொல்லிச் சென்றான். அரசன் எவ்விதம் எவர்களை செய்யச்சொல்வது என்று எண்ணுமுன்னமே அவ்வரக்கனே சமையற்காரனாக வந்து விதவிதமாக மாமிசங்களைப்பாகஞ்செய்து வைத்துச் சென்றான். இப்பால் வசிட்டமுனிவர் மாத்தியாந்நிகம் முடித்துக்கொண்டு வந்தவுடன் அரசனும் பத்னியுமாக பாதப்ரக்ஷாளன முதலியனசெய்து ஆசனத்தி லெழுந்தருளச்செய்து பூசித்து நமஸ்கரித்து போஜன ஸ்தானத்தைச் சுத்திசெய்து பின் பரிகலசுத்தியுஞ்செய்து அன்னம் படைத்தபின்னர் வெள்ளி பாத்திரத்தில் வெவ்வேறாக அமைத்துவைக்கப்பட்டிருந்த மாம்சவகைகளைப் படைக்கவே முனிவர் அளவுகடந்த கோபத்தை யுடையவராய் அரசனே ! இவ்வூனுணவு மிகவும் தாழ்ந்தது தள்ளுதலுடையது என்று தெரிந்தும் இன்று எனக்குப் படைத்தா யாதலால் நீ இவ்வுணவே பெரிதாக அருந்து மிராக்கதனாகக்கடவது என்று சபித்தார். சுவாமீ ! தேவரீர் என்னிடம் வந்து இவ்வாறுசெய்து வையென்று சொல்லிவிட்டு இப்போது சபித்ததற்கு காரணமென்ன ? சொல்லுமென, முனிவர் உடனே சமாதியிலிருந்து பார்க்க இது இராக்கதனுடைய வஞ்சகவேலை என்று தெரிந்து அறியாதபடி அரசனைச் சபித்தோமே நம்முடைய தவமென்ன, நம்முடைய ஞானமென்னவென வருந்துங்காலத்திலே அரசன் கோபித்து பிரதிசாபஞ் செய்யத்தொடங்கினான்.

அப்போது பத்தினியானவள் தடுத்து ஓ நாதா ! குருவானவர் கோபித்தால் பொறுத்திருக்கவேண்டு மல்லது கோபஞ்செய்யலாமா, தங்களுக்கு தெரியாததல்லவே குருவை நிந்தை செய்தவர்களும் எதிர்த்தவர்களுஞ் சூரியர் சந்திர ருள்ளளவும் நரகத்தில் மூழ்கி கிடைப்பார்களே என இவ்வாறு சொல்ல அரசன் கோபம் நீங்கித் தன் மனைவியின் புத்தியையும் அவளுபகாரத்தையும் நினைத்து சந்தோஷித்துப் பெண்ணே ! நீ சொன்னதெல்லாம் உண்மை. இம்மை மறுமைத் துன்பத்துக் கேதுவாகிய குருநிந்தையினுநின்று விலக்கினாய். உன்னுடைய செய்கைக்கு நான்

மிகவுஞ் சந்தோஷமடைகிறேன். உலகத்தில் பெண்கள் வார்த்தை கேட்கலாகாதென்பது விதித்திருந்தாலும் இவ்வாறு நன்மை செய்யுமாறு லவ்வார்த்தை கேழ்க்கலாமென்று சொல்லி பிற்பாடு வசிட்டமுனிவருடைய திருவடியிலே வீழ்ந்து சுவாமீ! அறியாமையாலெதிர்த்து கோபிக்கவந்த என் கொடுமையைப் பொறுத்தருள வேண்டுமென்று வேண்ட ஏ அரசே! என்னாலே சொல்லப்பட்ட சாபம் மாறாது ஆனபடியால் நீ பனிரெண்டு வருடங்களுக்கு அவ்வடிவத்துடனிருந்து அது கழிந்த பிறகு வேதாரணியம் என்னும் க்ஷேத்திரத்திலே போய் வேதநதியிலே ஸ்நானஞ்செய்து வேதாரணியேசுவரப் பெருமானை வலஞ்செய்து நமஸ்காரஞ் செய்தால் அவ்வுருவம் மாறும். அப்பால் உந்நகரத்துக்கு வந்து சேருவாய். பட்டாபிஷேகம்பண்ணிவைக்கிறேன் கவலைப்படாதேஎன்றுசொல்லிச் சென்றார், அரசன் மந்திரியினிடததில் இராச்சியத்தைப் பார்த்து வரும்படி ஒப்புவித்துக் கொடிய இராக்கத வடிவத்தைக் கொண்டு வனங்கள் கல்வழி முதலிய கெட்ட இடங்களிலே இழிவான உணவுகளையும் தொழில்களையும் பூண்டு துன்பங்களை யநுபவித்துத் திரிந்தான். சொன்னகாலம் நீங்கியபோது உத்தமமான பேறிவு தோன்ற வேதாரணிய க்ஷேத்திரத்தை யடைந்து வேதநதியிலே ஸ்நானஞ்செய்து வேதங்களாலே அர்ச்சிக்கப்பட்ட மஹா மூர்த்தியைப் பிரதக்ஷணஞ்செய்து நமஸ்கரித்து ஓ வேதாரணியத்தில் விருப்பத்துடனெழுந்தருளியிருந்து என் பாபத்தைப் போக்கி யருளிய பிரபுவே உமக்கு நமஸ்காரம், வேதத்தினுட்பொருளாய் விளங்குபவரே உமக்கு நமஸ்காரம், சந்திரனைத் தரித்தவரே உமக்கு நமஸ்காரம், பிஞ்ஞகரே உமக்கு நமஸ்காரம், சர்வகர்த்தராய் உமாதேவியாரோடு கூடி வாழ்பவரே உமக்கு நமஸ்காரம் என்று பல ஸ்தோத்திரங்கள் செய்தபோது விருஷபாரூடராயெழுந்தருளி ஏ அரசனே! வேதநதியில் ஸ்நானஞ்செய்த வளவிலே உன்னுடைய சாப நீங்கியது. இனி நீ அயோத்தியை யடைந்து மகுடந்தரித்து முன்போல இராச்சியத்தைப் பரிபாலனம் பண்ணுவாயாக அன்றியும் பின்பு இங்குவந்து நாமெழுந்தருளியிருக்கு மிவ்வாலயத்தைப்புதுக்கி வீதிகளிலே மாடகூட ப்ராகாதிகளையுண்டாக்கி வருஷங்கள்தோறும் உத்ஸவங்கள் நடக்கும்படிக்கும் அதற்குஉபகரணங்களையுஞ் சேகரித்துஎப்போதும்நடைபெறும்படி விஸ்தாரமான பூமிகளைச் சேர்த்து வைப்பாயானல் உனக்கு சந்தானமும் அளவிடப்படாத செல்வமும் உண்டாகி அப்பால் நம்முடைய சிவலோகத்தையும் அடைவாயெனக் கேட்டு மகிழ்ந்து எம்பெருமானாகிய பிரபுவானவர் என்னை இப்பணி செய்யும்படி யருளிய அருளின் பெருமை என்னேயென வியந்து பணிந்து விடைகொண்டு தன் பட்டணஞ்சேர்ந்து மகுடதாரணஞ் செய்து பலகாலமிருந்து ஆண்டு சிவபெருமானுடைய ஆக்ஞையின்

படி வேதாரணியத்திலே பணிசெய்ய அளவிடப்படாத பொருளை எடுத்துக்கொண்டு வந்து சேர்ந்தான். சிவபெருமான் எழுந்தருளி யிருக்கின்ற ஆலயத்தின் விமானங்கள், மண்டபங்கள், மதில்கள், கோபுரங்கள் முதலியவைகளை நவரத்தினகசிதமாக அலங்கரித்து விளக்கினன். அநேக வீதிகளையும் வீதிகளில் முறை முறையாக அந்தணர் முதலியவர்கள் தங்குமிடங்களையும் தவத்தர்கள் தங்க வுந் தருமங்கள் ஓங்கவுங்கூடி பல சைவ மடங்களையும், சத்திரங் களையும், நந்தவனங்களையும் உண்டாக்கினன். இவ்வாறு பலவளங் களினலும் இந்திர நகரம்போல விளங்கச்செய்து சுவாமிக்கு நவ ரத்தினங்களால் அளவுகடந்த வாரப்பணி முதலிய திருவாபரணங் களுஞ்செய்து பலவிதமான வாகனங்கள், கொடி, குடை, கவரி, மேளம், தாதியர்கள் முதலியன பலவாகச் சேகரித்து மாசி மாதத்து மகம் ஈறுகவைத்து உத்ஸவத்துக்குத் துவஜாரோஹணஞ் செய்து சைவாகமவிதிப்படி பஞ்சகிர்த்தியதாற்பரியமாகிய உத்ஸ வத்தைத் தேவர்களும், முனிவர்களும், மனிதர்களும் மற்றுமுள்ள எல்லோரும் ஆனந்தித்து தரிசித்து இகபோக பரமோக்ஷம் அடை யும்படி பூரணஞ்செய்தான் அன்றியும் அதுமுதலாக ஒவ்வொரு வருஷங்களினும் அதேவிதமாக நடந்துவரும்படி பல கிராமங்களை உதவி நமஸ்காரஞ்செய்து விடைகொண்டு அயோத்தியையடைந்து அநேகநாளரசாண்டு சிவலோகத்தை யடைந்தான். ஆனபடியி னலே முனிவர்களே! உத்ஸவகாலத்திலே கொடி, குடை, மேளம் முதலியவைகளை உபகரித்தவர்களும் புஷ்பம், காய், கனி, பருப்பு அரிசி, பால், தயிர், நெய், வெல்லம் இவை முதலியவைகளில் ஒன்றைஉத்ஸவஉபயோகநிமித்தமாய்க்கொடுத்தவர்கள் மோக்ஷம் அடைவார்கள். அதிகமான ஐசுவரிய முடையவர்கள் அதிகஞ் செய்வதும் வறுமையுடையவர்கள் அற்பமாகச் செய்வதும் அங்கு சமமாகு மென்று நூல்கள் சொல்லும். உபயோகப் பொருளில் ஒன்று கொடுத்தவர்கள் பலனிப்படியானல் உத்ஸவத்துக்கு யா தொருகுறைவுமில்லை என்று பூரணமாக நடத்தி வைக்கும் உத்த மர்களுடைய பெருமையை யாரறிந்து சொல்லவல்லார்கள். இதைப் படிப்பவர்கள் கேட்பவர்கள் உறவினர்களுடன் பெருஞ் செல்வ மடைந்து பரமாநந்த மோக்ஷத்தையும் அடைவார்கள்.

சவுதாசச் சருக்கம் முற்றிற்று.

விசுவாமித்திரச் சருக்கம்

முனிவர்களே! சவுதாசச் சருக்கம் சொன்னேம். இனி விசு வாமித்திரச் சருக்கம் சொல்லுகின்றேம் கேட்பீர்களாக. முன்

ளொரு காலத்திலே குசிகன் என்னும் அரச வம்சத்திலே காதி மஹாராஜாவுக்கு விசுவாமித்திரனென்கிற குமாரன்பிறந்து அவன் இராச்சியபரிபாலனஞ்செய்துவருகின்றகாலத்திலே ஒருநாள் தன்னுடைய நாடுகளைக்கோலி பார்க்கும்படி புறப்பட்டு சைன்னியங்களுடன் காடு நாடு மலை தபோவனமுதலிய பிரதேசங்களை கவனித்துப்பார்த்துக்கொண்டு மிகுந்த பசியினேடுவசிட்டமுனிவரிருக்கும் ஆச்சிரமத்தை யடைந்து அம்முனிவரை நமஸ்காரஞ்செய்ய ஆசிர்வாதஞ்செய்தார். சுவாமீ! தாங்களும் இன்னும் தவத்தர்களும் தவங்களுக்கு இடையூறின்றி வசதியாக இருக்கின்றீர்களா ? என அரசனே உன்னுடைய செங்கோல் நடை பெருங்காலத்தில் க்ஷேமமல்லது குறை யென்னவுண்டு ஒன்று மில்லை என்று சொல்லி அரசனுக்குப் பர்ணசாலையிலுள்ள காய், கனி, கிழங்கு முதலிய உணவுகளைஉதவி பிற்பாடு அரசனே! உன்னுடைய இராச்சியமும் சைன்னியமும் நிதிச்சாலைகளும் ஆகிய எல்லாம் க்ஷேமமா என சுவாமீ! தங்களுடைய அநுக்கிரகத்தினலே க்ஷேமமாக இருக்கிறது என்று சொல்லி நகரத்திற்குச் செல்லும்படி விடை தரவேண்டுமென்று பிரார்த்தித்தான். அப்போது முனிவர், அரசனே! நீயும் நின் சேனையும் எமதுபர்ணசாலையிலே போஜனஞ்செய்துபோகவேண்டுமென அரசன், சுவாமீ! தங்களாலுதவிய கிழங்கு, கனி முதலியவைகளால் திருப்தியாயிற்று. அநுமதி தரவேண்டுமென வேண்டவும் இணங்காது பின்னையும் பின்னையும் வற்புறுத்திச்சொல்ல அரசனிசைந்தான். முனிவர் உடனே தம்மிடத்துள்ள காமதேனுவை யழைத்து அரசனுக்கு விருந்துசெய்யவேண்டியவைகளைச் செய்யெனவே அக் காமதேனுவானது போஜனசாலை முதலிய இடங்களையும் ஆறு சுவையோடு கூடிய அன்னபானதி ஆகாரவர்க்காதிகளையும் மனதினலே ஒரு க்ஷணமாத்திரத்தில் உண்டாக்கியது முனிவர் அரசன் முதலிய எல்லோர்க்கும் அவ்வவர் விரும்பியபடியேவிருந்துசெய்து மகிழ்வித்தார். அவ்வாறு சைன்னியங்களுடன் போஜனஞ்செய்த அரசன் காமதேனுவின் செய்கைக்கு மிகவும் ஆச்சரியமடைந்து இந்தக் காமதேனுவை எனக்குத் தந்தருளவேண்டுமென்றான். முனிவருடன்படவில்லை பின்னையும்வலிந்து கேட்க அரசனே! உனக்கு வல்லபமிருந்தால் பிடித்துக்கொண்டு போகலாமென காமதேனுவின் சமீபத்தை யடைந்தபோது இது முனிவருடைய ஏவலல்ல எனநினைந்து காமதேனுவானது தன்னுடைய சுவாசத்திலிருந்து அநேகம் சைன்னியங்களை யுண்டாக்கியது.உண்டாக்கிய சைன்னியங்களை அரசன் சேனைமீது செலுத்திஅச்சேனைகள் மடியச்செய்ய அரசன் மடங்கி வெற்றியற்றவனுய் ஓடினன். பிற்பாடு இருக்கை சென்று ஆயுதசாலையிற்போய் யாராதனஞ்செய்து ஆயுதங்களை எடுத்துக்கொண்டு வந்து வசிட்டமுனிவருடன் யுத்தஞ்செய்ய ஆரம்பித்து சரமழையாகப் பொழிந்தான்.

வருகிற பாணங்களுக்கு இதுதான் இலக்கு என்று தம்முடைய யோகதண்டத்தை யெடுத்து நாட்டிவிட்டு முனிவர் முன்புபோல நிட்டையிலிருந்தார்.

அரசனாலே விடப்பட்ட பாணங்கள் யோகதண்டம் வரையில் போய்ப் போய்த் திரும்பிவருவதன்றி முனிவரிடஞ் செல்வன வில்லை. இதைக்கண்ட அரசன் ஆச்சரியமடைந்து நம்முடைய பராக்கிரமங்கள் பாணங்கள் ஒன்று முனிவரிடஞ்செல்லவில்லை. ஆனபடியால் தவந்தான் பெரிது அரசு பெரிதல்ல எவ்வகையினும் நாம் பிரமரிஷியாகவேண்டுமென நினைத்து இராச்சியத்தைவிட்டு சடைமுடி தோலுடை விபூதி உருத்திராக்ஷதாரண முதலிய தவவேடம் பூண்டு மலைகளிலேயும், வனங்களிலேயும், சுரங்களிலேயும் போயிருந்து, அநேககாலந் தவஞ்செய்து அத்தவப்பயனைப் பலவிதசித்திகளை யடைந்தான், பிரமரிஷி என்னும் பெருமைபெறவில்லை. இவைகளை அடைந்த நாம் நம்முடைய உத்தேசமான அப்பதவியையு மடைந்தே முடியவேண்டுமெனப் பலவிடங்களிலும் போய் நிறைவேறாமையினாற் றிரிந்து தென்கடற்கோடியாகிய ஆதி சேதுவின் வடபாலுள்ள வேதாரணிய க்ஷேத்திர யெல்லையை அடைந்த போது அரசனுக்கு ஆகாயவாணி ஒன்றெழுந்து ஓ முனிவனே ! இந்த இடம் புருஷார்த்தமாகிய நான்கையும் அடையத்தக்கயிடம் என்று சொல்லக்கேட்டு வந்து மணிகர்ணிகா தீர்த்த மேல்கரையில் ஒரு ஆச்சிரமமுண்டாக்கி பிரதி தினம் மணிகர்ணிகையிலும் விசேஷகாலங்களில் வேதநதியிலும் ஸ்நானஞ்செய்து சிவசின்னந் தரித்து சிவாலயத்துக்கு அக்கினிதிக்கிலே வன்னிவிருக்ஷமூலத்திலே ஸ்ரீபஞ்சாக்ஷரஜெபஞ்செய்து தியானஞ்செய்துகொண்டிருந்தார். அப்படியிருக்குங் காலத்தில் திரிசங்கு மஹாராஜாவானவன் வசிட்டமுனிவருடன் சரீரத்துடன் சுவர்க்கம் பெறவேண்டுமென முடியாது என்றதைக் கேட்டுவந்த அவனுக்கு வேதநதி முதலிய மூன்று தீர்த்தங்களினும் ஸ்நானஞ் செய்யச்செய்து வேதாரணியேசுவர தரிசனஞ்செய்வித்து பனிரெண்டுவருஷம் யாகஞ்செய்து பிரமசிருட்டிக்கு மாறாக வீரசொர்க்கமுண்டாக்கி சரணமடைந்த திரிசங்கு மஹா ராஜாவை சரீரத்துடன் சுவர்க்கம் அடையச் செய்து இன்னும் பல சித்திகளைச் செய்துகொண்டிருக்குங் காலத்திலே தேவலோகத்திலே யுள்ள மேனகை என்பவள் வேதாரணியம் வந்து மூன்று தீர்த்தங்களிலேயும் ஸ்நானஞ்செய்து வேதாரணியேசுவர தரிசனம்செய்யும்படிவந்தாள். அப்போது யௌவன உருவத்தையும் தவக்கோலத்தையுங் கொண்டு மன்மதனைப்போல விளங்குகின்ற விசுவாமித்திர முனிவரைக்கண்டு காமத்தினால் மோகங்கொண்டு மயங்கி நின்றாள். அப்படி நிற்கின்ற அவளைப்பார்த்து நீ யார் ? தனியே இங்கு நிற்கின்ற காரணமென்ன தேவதாசியானால் சிவசந்நிதியில் பாடல் ஆடல் முதலிய கைங்கரியங்களை

செய்தல் வேண்டும். குடும்பத்திலுள்ள பெண்ணானல் கனவனு டைய ஆணைப்படி அடங்கி அவனிடத்திலேயிருக்கவேண்டுமெனக் கேட்டு சுவாமீ ! நான் தேவலோகத்திலே தேவசபையிலே நடனஞ் செய்கின்ற தேவதாசி என்மனதுக்கு இசைந்தவர்களாய் யார்நேர் வார்களோ அவர்களே யெனக்குத் தலைவர்கள் ஆனபடியால் மன் மதாகாரமாய் விளங்குகிற தேவரீரை யடையும்படி விரும்புகின் றேன். உம்மைக் கூடினலல்லது என்னுயிர் பிழைப்பதில்லை. நீரிணங்காத பக்ஷத்தில் பெண்பழி யடைய வேண்டுமெனக் கேட்ட முனிவர் பெண்ணே ! நான் நெடுநாட்களாகக் காமவழியிற் செல் லாது பாசுபத விரதியாய்த் தவஞ்செய்து கொண்டிருக்கின்றேன். அறிவிலாதவர்கள் தான் இந்த விருப்பத்தைக் கொள்ளுவார்கள். அனேக காலந்தவஞ்செய்தாலும் ஒரு நாளிற் செய்யுமித்தகைய காரியத்தால் கெட்டுவிடும். அதுவுமன்றி உன் காம வாஞ்சையை யுத்தேசித்து ஒருபோது கூடினலவ்வளவோடு நில்லாது. ஆனபடி யினலே என் தவத்துக்கு கேடு செய்யாதபடி போவாயாக வெனக் கேட்டு இந்த சமாதானங்களினலே என்னுசை பூரணமாமா, நீர் தவஞ்செய்தவரிருந்த இடத்தி லிருந்தவரா என்னுயிரைக்காக்க வென்றபொழுது காவாவிட்டா லது தவமாமா என்னவே முனிவர் கோபித்து உன்னுயிர் இருந்தாலென்ன அது போனலென்ன வென்று பலவிதமாகப் பெண் புணர்ச்சியின் இழிவுகளையுந் துன் பங்களையுஞ்சொல்லி இகழ்ந்து பாவத்திற்குவித்தாகிய பெண்ணின் முன்னே இவ்வளவு நேரம் வீண் வார்த்தை பேசநேர்ந்ததே இது என்ன பாபம் சிவா சங்கரா என்று செவி புதைத்து நின்றார், அது கண்ட மேனகை மிகுந்த கோபங்கொண்டு காமவேட்கையி னல் தாங்காதபடி வலியவந்திரந்து கேட்டவனுக்கு உடன் படா மையினல் பெண்களாலிகழத்தக்க கிழப்பருவத்தை யடைவீராக என்று சபித்தாள். உடனே முனிவர் நரைதிரை முதலிய வடை யாளங்களுடன் கூடிய முதிர்ந்த கிழப் பருவம் அடைந்து சினந்து நீயு மிக்கிழப் பருவமடையக்கடவது என்று சபித்தார். அச்சாபத் தாற் கிழப்பருவமடைந்த மேனகையானவள் முன்னொருநாள் சாபவிமோசனத்துக்கு ஏதுவாயிருந்து அடைந்த மேன்மையை நினைந்து வேதநதியிலேபோய் ஸ்நானஞ்செய்த மாத்திரத்தில் சாப நீங்கி முன்னைப்பார்க்கிலும் இளமையையும் அழகையும் அடைந்தாள். அதைக்கண்ட முனிவரு மவள் சொல்லியவழி யவ்வாறே செய்து கிழப்பருவம் மாறப்பெற்று அவள் மேன் மையையும் அறிவையும் வியந்து இனி இவள் மனப்படி இணங் காத பக்ஷத்தில ஏதேனுந் தீமைவந்தணுகும். இவள் மனிதப் பெண்ணன்று தெய்வப்பெண்ணாக இருக்கின்றாளென நினைந்து கலந்து நெடுநா ளனுபவித்துக்கொண்டிருக்குங்காலத்தில் மேன கையைப்பார்த்து வேதநதியின் விசேஷங்களைச் சொல்வாயென,

முனிவரே! நான் முற்சென்மத்திலே மானுக இருந்தேன். ஒரு வேடுவன் அம்பாலடிக்க ஆற்றுதபடி ஓடிவந்து இந்நதியிலே வீழ்ந்திறந்த மேன்மையா லிந்தப்பதவியை யானடைந்தேன் இதில் மூழ்கினவர்களுக்கு மூப்பு பிணி முதலியன நீங்குவதன்றி ஞானமும் மோக்ஷமுங் கிடைக்கும். தேவபூஷணம் என்கிற நாமதேயமு மிதற்குண்டு என்று அதன் காரண முதலிய விசேஷங்களைச் சொல்லக்கேட்டு மிகவு மகிழ்ந்து நெடுநா ளனுபவித்துக் கொண்டிருந்து பிற்பாடு யென்னகாரியஞ்செய்தோம் நாம் உத்தேசம்பண்ணிய காரியம் ஏதுவான தவத்தை மறந்தோமே யென வருந்தி மேனகையை விடுத்து வெய்யிற்காலத்தில் பஞ்சாக்கினி மத்தியிலும் பனிக்காலத்திலே தடாகத்திலுமிருந்து அதிகோரமான தவத்தைச் செய்தார். அது தெரிந்த தேவேந்திரன் தவத்தினாலே நம்முடைய பதவியை அடைந்துவிடுவானென்று நினைத்து திலோத்தமையை யழைத்துப் பெண்ணே! உன்னுடைய வல்லமையினாலே பூலோகத்தில் விசுவாமித்திரன் செய்யு மருந்தவத்தைக் கெடுத்துவருவாயென்றனுப்ப அத்திலோத்தமை ஆடல் பாடல் முதலிய காமாவேச ஏதுவான காரியங்களுடன் விசுவாமித்திர முனிவர் முன்னே வந்து நடித்து நிற்பக்கண்டு, ஏ பெண்ணே! நீ எவ்வாறு கலக்கினு மென்மனங் கலங்காது, நான் தேவலோக வாழ்வை யிச்சித்துத் தவஞ்செய்யவில்லை, பிரமரிஷித்துவம் வேண்டிச் செய்கின்றேன், உன்னை யனுப்பிய இந்திரனிடத்திலே போய் இதைச்சொல்லு, இங்கே நில்லாதே. இனி நின்றால் சபிப்பேன் யெனத் திலோத்தமை திகைத்து தேவலோகம்போனு லிந்திரன் சபிப்பான், இங்கு நின்றால் முனிவர் சாபஞ்செய்வாரென, ஒருமானுருவம் எடுத்துக்கொண்டு காட்டிலே திரிந்தாள். அப்படித் திரிந்தவள் ஒருநாள் முனிவருடைய பர்ணசாலையின் பக்கத்திலே அதிக சவுந்தரியத்துடன் மான் வடிவாய் நிற்பக் கண்டு, இது திலோத்தமையின் வடிவெனத் தெரிந்து, யான் உன்னை இங்கு நிற்காதே என்று சொல்லிய வார்த்தைத்தட்டி நின்றபடியினாலே இம்மானுருவமே உருவமாகக்கடவது என்று சபித்தார். அச்சாபத்தால் நெடுநாள் மான் வடிவமாய்க் காட்டிலே திரிந்து ஒருநாள் நீர்வேட்கையினாலே வேதநதியிற்போய் நீர்பருக அப்போதே மானுருவநீங்கிப் பழையவடிவந் தோன்ற மகிழ்ந்து ஆச்சரியமடைநது வேதநதியிலே ஸ்நானஞ்செய்து அப்பால் மணிகர்ணியிலே தோய்ந்து ஆலயத்தைப் பிரதக்ஷிணஞ்செய்து வேதாரணியேசுவர சன்னிதானத்திலே நமஸ்கரித்து துதிக்கின்றாள். வேதவனேசா! நமஸ்காரம் என் சாபத்தைப்போக்கிய புண்ணியனே நமஸ்காரம், திரிசங்கு மஹாராஜாவின் சாபத்தையும், சவுதாமஹாராஜனுடைய ராக்ஷதசாபத்தையும் போக்கி யருளியவரே நமஸ்காரம், முசுகுந்தநாதா நமஸ்காரம், மகாபலிக்குத் திரிலோகாதிபத்தியங் கொடுத்தவரே

நமஸ்காரம், இராமருடைய விரகத்தியைப்போக்கியவரே நமஸ்காரம், பிரமசாரிக் கருளியவரே நமஸ்காரம், கோலாகலனுக்கு மோக்ஷங்கொடுத்த கருணைவள்ளலே நமஸ்காரம், அகத்திய முனிவரின் பொருட்டு கல்யாணக்கோல மருளியவரே நமஸ்காரம், ஏமாங்கத குமாரர்களுடைய பாபத்தைப்போக்கியவரேநமஸ்காரம், இந்திரனுடைய பிரமகத்தியையும். வசிட்டருடைய சரீர மஹாரோகத்தையும் போக்கி யருளியவரே நமஸ்காரம், தருமன் முதலிய பாண்டவர்கள் ஐவருடைய துன்பங்களை நீக்கியவரே நமஸ்காரம், நாரதருக்கும், சனகாதிமுனிவர்களுக்கும் மோக்ஷமருளிய பிரபுவே நமஸ்காரம், சடாமகுடமுடையவராய பார்வதிதேவியை யடையப் பாகங்கொண்டு நித்திய கால ரூபமாய் எழுந்தருளியவரே நமஸ்காரம், தேவாதிதேவனை் விளங்குகின்ற வேதாந்தத்தெளிவே நமஸ்காரம், ஏ கிருபாநிதியே! உம்முடைய கடைக்கண் பார்வை என் மீது விழ்ந்து அநுக்கிரகம் பண்ணவேண்டும் சங்கரா என்று ஸ்தோத்திரஞ்செய்தாள். உடனே பிரசன்னமாகி, ஏ திலோத்தமா விசுவாமித்திரனுலுண்டாகிய சாபமின்று நீங்கியது. உன்னுடைய ஸ்தோத்திரத்தினல் சந்தோஷமடைந்தோம். உனக்கு வேண்டுவதென்ன கேள் என சுவாமீ! உம்மிடத்தில் விட்டு நீங்காத பக்தி வேண்டும், உம்மைத் துதித்த இந்த ஸ்தோத்திரத்தை யாவர்கள் துதித்தாலும் அவர்களுக்கு இகபோகமும் பரமோக்ஷமும் அருளல் வேண்டுமென்னக்கேட்டபடியே அநுக்கிரகஞ்செய்யப்பெற்று இரத்தினங்க ளிழைத்த விமானத்தி லேறிக்கொண்டு தேவலோகம் போய் வாழ்ந்தாள். இப்பால் விசுவாமித்திர ரிஷியானவர் வேதநாதனை மனதிலே தியானஞ்செய்து சமாதிவழியிலே ஆயிரம் வருஷந்தவஞ்செய்தார். அத்தவக்கனலானது எழுந்து ஊழித்தீயைப்போல மேலுள்ள உலகங்களை வாட்டத் தேவர்கள் ஒருங்கு சேர்ந்து பிரமதேவரிடம் போய் சுவாமீ! பிரமதேவரே! விசுவாமித்திரன் செய்கின்ற தவத்தின் அக்கினியானது உலகங்களை வெதுப்புகிறது. இன்னுஞ் சிலநேரஞ்சென்றாற் பொடியாக்கிவிடும் போலத்தோன்றுகிறது என்றுசொல்ல அதைக்கேட்ட பிரமதேவர் எல்லா தேவர்களுடனே வேதாரணியம் வந்து விசுவாமித்திரனைக் கண்டார்கள். உடனே தவநிலையில் நிற்கின்றபடியே விசுவாமித்திரர் பிரமதேவருக்கு உபசாரமான பூசை ஸ்தோத்திர நமஸ்காரங்களை மனதினலேசெய்தார். அம்முனிவரை பிரமதேவன்பார்த்து எதை யுத்தேசித்து இவ்வளவு கடுமையான தவஞ்செய்கின்றாய் என்று கேட்க, ஏ பிரமதேவரே! பிரமரிஷியாகவேண்டுமென்று செய்கின்றேனெனப் பிரமதேவர் ஏ விசுவாமித்திரா! சர்வதேவர்களும், முனிவர்களும் கூடிய இவ்விடத்திலே உன்னல் விரும்பப்பட்ட பிரமரிஷி என்னும் சிறப்பை யுனக்குத் தந்தோம். இனி இத்தவத்தினின்று நீங்குவாய் எனக்கேட்ட முனிவர் சந்தோஷ

மடைந்து சுவாமீ ! இன்னுமொரு காரியமுண்டு. அதாவது தாங்கள் சொல்லியபடியே வசிட்டமுனிவருடைய வாயினாலே சொல்ல வேண்டுமெனவே பிரமதேவர் வசிட்டரை யழைத்து தேவர்களுக்கு முன்னே இவனை பிரமரிஷியாய்விட்டாயென்று சொல்லென அதற்குடன்படாத வசிட்டரை தேவர்கள் முனிவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து, ஓ வசிட்டமுனிவரே ! அவனுடைய தவக்கனலானது அண்டங்களைப் பொடிசெய்கின்றது. அவனோ வேதநாதனுக்கு அன்புடையவனாகிறான். அதனால் அண்டங்க ளழியாமலும் வேதநாதனுடைய திருவருளுக்குப் பிழைசெய்யாமலு மிப்போது நீர் சொல்லவேண்டுமில்லையேல் உம்மைச் சாபம்செய்வோமெனத் தேவர்கள் முன்னிலையிலேபோய் விசுவாமித்திரரைப் பார்த்து, ஓ முனிவனே ! நீ பிரமரிஷியாய்விட்டாய். மூன்றுலகங்களும் அறிய உண்மையாகச்சொல்லுகின்றேன். இனித் தவத்தினின்று நீங்குஎனக்கேட்டுத்தவத்தினின்றெழுந்து வசிட்டருடைய பாதத்திலே நமஸ்காரஞ்செய்து எனக்கு ஞானகுரு நீரே என்று சொல்லி அவரிடத்தில் பிரமோபதேச முதலிய அந்தணர்க் குரிய எல்லா முறைகளையும் நூல்வழிகளை ஓதித் தெரிந்துக்கொண்டார். மகாதேவரு மற்றுமுள்ளவர்களுந் தங்களிடம் போய்ச் சேர்ந்தார்கள். அப்பால் வசிட்டமுனிவரும் விசுவாமித்திரமுனிவரும் நெடுநாட்கள் வேதாரணியத்திலே மகிழ்ச்சியுடனிருந்தார்கள். இந்த உலகத்திலே பிரமரிஷியாக நினைத்துப் பலவிடங்களிலே தவஞ் செய்துங் கிடைக்காதபேறானது வேதாரணியத்திலே கிடைத்தது என்றால் அதன் பெருமை யாவர் சொல்லுவார்கள் என்று சொன்னார். இதைப் படித்தவர்கள் கேட்பவர்கள் துன்பத்தினின்று நீங்கி மோக்ஷத்தை யடைவார்கள்.

விசுவாமித்திரச் சருக்கம் முற்றிற்று.

குளகேசச் சருக்கம்

ஓ முனிவர்களே ! பெருந்தவத்தைச்செய்து விசுவாமித்திரரிஷியானவர்பிரமரிஷித்துவம் அடைந்ததைச்சொன்னோம். அந்த க்ஷேத்திரத்திலேயே அமிர்தமே திரண்டு ஒரு இலிங்கவடிவாய் விளங்குகின்ற குளகேசருடைய பெருமையைச் சொல்லுகின்றோம் கேட்பீர்களாக. முன்னொருகாலத்திலேதேவர்களும், அசுரர்களும் ஒன்றுசேர்ந்து திருப்பாற்கடலிலே அமிர்தங் கடைந் தெடுக்க நினைத்து மந்தரகிரியை மத்தாகவும் வாசுகி என்னு மஹாசர்ப்பத்தைக் கயிறாகவும் எடுத்தமைத்துக் கடைந்தார்கள். அப்போது

காமதேனு முதலிலே தோன்றியது. அதன்பின்னர் பஞ்சதருக்களும், அநேகந் தெய்வப்பெண்களும், சந்திரனும் தோன்ற இவைகளைத் தேவர்கள் கைப்பற்றிக்கொண்டு மீளவும் அநேகநாள் அக்கடலைக்கடைந்தார்கள். அதினின்றும் ஆலகாலவிஷமுண்டாகி உலகத்தை யழிக்கத் தக்க ஊழித் தீயைப்போல வெழுந்து பெருகிய போது பிரம விஷ்ணு முதலிய எல்லோரும் பயந்து பெருஞ் சத்தமிட்டுப் பரமசிவனை அடைக்கலமடைய அவர்களை இரக்ஷிக்கும் பொருட்டு அஞ்சாதீர்கள் என்று அபயமளித்து அவ்விஷத்தைக் கையிலேந்தி உலகங்களுய்யும்படி உண்டு கண்டத்தி லடக்கினர். பிற்பாடு சிவபெருமானை பிரார்த்தனை செய்துக்கொண்டு பாற்கடலைக் கடைய மந்தரகிரி யமிழ்ந்தியபோது விஷ்ணுமூர்த்தியானவர் பாதாளத்திலேபோய் ஆமைவடிவாய்த் தன் முதுகினாலே தாங்க அம்மலையின் முடியைச் சில தேவர்கள் பிதிரிடாதபடி பிடிக்கவும் மற்றையோர்க ளிருபுறமு மிழுத்துக் கடைந்தபோது உலகத்திலே தூசிகளைப் போக்கும் மாறைத்தாங்கிய கையினளாய் முதலிலே தவ்வை யென்பவள் தோன்றினள். அதன்பின் கௌஸ்துபமணியும், உச்சை சிரவம் என்னுங் குதிரையும், ஐராவத யானையும்வர இவை யிரண்டையு மிந்திரனுக்குக் கொடுத்து முன்னைய இரத்தினத்தை விஷ்ணுவுக்குக் கொடுத்தார்கள். அப்பால் ஆயிரவருஷங் கடையவே உலகத்தைக் காக்கத்தக்க தன்வந்தரி என்பவர் தோன்றினர். அதன்பிறகு நெடுநாட்கள் கடையவே பரிசுத்தத் தோடுகூடிய சர்வாலங்கார சோபிதையான இலக்ஷ்மிதேவி அவதாரமாகி விஷ்ணுவினுடைய மார்பை யடைந்தாள். அப்பால் தேவர்களுடைய உயிர்கள் என்று சொல்லத்தக்க அமிர்தமானது உண்டாயிற்று. அதை விஷ்ணுவானவர் வஞ்சகத்தினாலே ஒரு குடத்திலே அடைத்து வைத்துப்பின் அசுரர்களுக்குக் கொடுக்காதபடி தேவர்களுக்கு மட்டிலுங் கொடுக்க வெவ்வேறாக ஒவ்வொருவரும் உண்டார்கள். அதின்மீதமாகிய அமிர்தத்தை ஒரு குடத்தில் வாங்கியடைத்து இரண்டு அமிர்த கடங்களையும் வாயுவினிடத்திலே கொடுத்து தேவலோகங்கொண்டு சேர்க்கும்படி செய்ய அவன் அசுரர்களறியாதபடி வேகமாய்க் கொண்டு செல்லும்போது தவறிய அமிர்த கும்பமானது வேதாரணியத்திலே மேலிருந்து விழ்ந்து ஒரு சிவலிங்க வடிவமாயிற்று.

வாயுவானவன் மிகமனம் வருந்தி நின்றான். அப்போது சர்வ தேவர்களுடன் விஷ்ணுவானவர் தேவலோகம் போகும்பொழுது அமிர்த கும்பந்தவறி விழ்ந்ததையும் வாயு வருந்தி நிற்பதையுங் கண்டு, வாயுவே! வருத்தமுறாதே என்று தேவர்களைப்பார்த்து வாயுவினிடத்தில் வருத்தமுறலாகாது. உலகங்களுய்யும்படி அமிர்த கும்பஞ் சிவலிங்க வடிவாய்ப் பலித்து விளங்குகின்றது. அமிர்தம் உண்டால் துயில் வேர்வாதிகுற்றங்கள் நீங்கி யின்பந்தரும். இந்த

சிவலிங்கமூர்த்தியை வணங்குவீர்களேயானல் மேற்சொல்லியவைக ளன்றி உள்ளத்திலே நினைந்தவைகளை எல்லாந்தந்தருளும் ஆதலால் இவர்க்காலயஞ் செய்யுங்களென உடனே தேவர்கள் விசுவகர்மா வையழைத்து தெய்வீகமான ஆலயத்தை யுண்டாக்கி அமிர்தகடே சப் பெருமானை சைவாகம வழிப்படி பூசைசெய்து ஸ்தோத்திரஞ் செய்து நிற்கின்றனர். அப்போது சிவபெருமான் சிவலிங்கத்திலே நின்று சுவரூபிகரித்து ஏ தேவர்களே ! எனக்கமுதேசனென்று பெயர், இந்த இடத்துக்கு வருபவர்களுக்கு அநுக்கிரகம் பண்ணும் பொருட்டே இங்கு எழுந்தருளினேம். இவ்விடத்திற்கு உருத்திர கோடி என்பது பெயர். இங்கு கடலிலே ஸ்நானஞ்செய்து நம்மை தரிசித்தவர்களுக்கு வேண்டிய வரங்களையும் முத்தியையும் கொடுப் போம். உங்களாலே செய்யப்பட்ட பூசைக்கும் துதிக்கும் மிகவுஞ் சந்தோஷ மடைந்தோம். உங்களுக்கு வேண்டிய வரங்களைக் கேளுங்கள் தருகின்றேம் எனக்கேட்கத் தேவர்கள் ஏ அமுதேசப் பிரபுவே ! உம்மிடத்திலே அன்புநீங்காமலிருக்கவும் அசுரர் முத லிய துட்டர்களினலே சிரமமடையாமலிருக்கவும் உமது திருவருளை வேண்டுகிறேமென்றார்கள். அவ்வாறு வரங்கொடுத்தருளினர்.

பெற்றுக்கொண்டு தேவர்கள் வணங்கி தத்தம் இடங்களை யடைந்தார்கள். அன்றுமுதல் அவ்விடத்திலே அமுதலிங்கேசப் பெருமான் சாந்நித்தியமா யெழுந்தருளி உருத்திரகோடியில் ஸ்நா னஞ்செய்து தரிசித்தவர்களுக்கு இஷ்ட போகங்களையும் முத்தி யையுங்கொடுத்துக் கொண்டிருக்கின்றார். அம்மூர்த்திக்கே குள கன் என்று ஒரு நாம முண்டாகியது. அதைச்சொல்லுகின்றேங் கேட்பீர்களாக. முன்னொரு காலத்திலே சுவேதமுனிவர் என்பவர் தன் மனைவியாகிய சுசீலையுடனும் குளகனென்னுந் தனையனேடு நிர்மதா நதிக்கரையிலே நெடுநாட்களாகத் தவஞ்செய்துக் கொண் டிருந்தார். அப்போது ஒருகால் அவ்விடத்தில் மழையில்லாத வறு மையினலே அங்குள்ளவர்கள் வெவ்வேறிடங்கட்குச் சென்றார்கள்.

சுவேதமுனிவர் நாம் எங்குச்செல்வது எங்குதங்குவது என்று ஆலோசிக்குங் காலத்தில் தென்பாகமாகிய வேதாரணியத்திலே கிரமமான மழைபெய்து சாகமூலபலங்கள் முதலியவைகளுக்குக் குறைவில்லாததாய் அகஸ்தியாச்சிரமம் நன்றாக யிருக்கிறதென்று தெரிந்து தன்னுடைய குடும்பத்துடன் பதினயிரமுனிவர் சூழ்ந்து வரக் காடுமலை முதலிய இடைவழிகளைக்கடந்து வேதாரணியத்தை யடைந்தார். அவ்வாறடைந்த முனிவர்கள் அளவிடப்படாத சிறப் பையும் வளப்பத்தையுஞ் செல்வத்தையுஞ் சிவஞானப்பொழிவை யுங் கொண்டு விளங்குகின்ற அகத்திய முனிவருடைய ஆச்சிர மத்தை யடைந்தவளவிலே அகத்திய முனிவர் பரமசந்தோஷ மடைந்து வந்தவர்களையுபசரித்து காய், கனி, கிழங்கு முதலிய உண வுகளளித்து அவ்வவர் தங்குதற்குறிய பர்ணசாலைகளையும் உண்

டாக்கிக்கொடுத்தார். அம்முனிவருடைய உதவியைப்பெற்ற எல்லா முனிவர்களும் பசி முதலிய துன்பங்களனுகப்பெருதவர்களாய் நெடுங்காலமங்கிருந்து வேதாரணியேசுவரப் பெருமானைத் தரிசனஞ்செய்து தவஞ்செய்துக் கொண்டிருந்தார்கள்.

அப்படி யிருக்க சுவேத முனிவர் தன் குடும்பத்துடன் இன்னுஞ்சில முனிவர்கள் தொடர்ந்து வரும்படி தென்பாகத்திலுள்ள கோடியில் அமுதலிங்கேச மூர்த்தியின் சந்நிதானத்திலே தவச்சாலைகள் உண்டாக்கித் தவஞ்செய்துக் கொண்டிருந்தார்கள். அப்படி யிருக்குங்காலத்திலே சுவேதமுனிவருடைய குமாரனுகிய குளகன் என்பவர் அமுதலிங்கேசப்பெருமானுக்கு ஒருவராலுஞ்செய்ய முடியாத அன்பு நிறைந்த மானத பூசைசெய்ய நினைந்து எம்பெருமானுடைய சந்நிதானத்திலே பஞ்சேந்திரியங்களை அடக்கி உட்கார்ந்து உள்ளத்தை பரிசாரகனுக்கிக்கொண்டு சமாதியிலே கைலாசத்தை சிங்காதனமாகவும் ஆதிசேடனுடைய முடிகள் பூசைப் பாத்திரங்களாகவும் ஆதிகூர்மம் அவைகளைத் தாங்கும் ஆசனமாகவும் யமுனை, சந்திரபாகை, காவேரி என்பவைகள் பாத்தியாசமனர்க்கியங்களாகவும் செய்து கங்காநதியினுலே அபிஷேகஞ் செய்து அஷ்டதிக்குகளையும் வஸ்திரமாகச் சாத்தி சந்திரனை சந்தனமாகவும், புஷ்பங்கள் நட்சத்திரங்களாகவும்,ஆகாய கங்கையை மாலையாகவும், வாசுகிஎன்னுஞ்சர்ப்பத்தை உபவிதமாகவும்இன்னுமுள்ள இதர சர்ப்பங்களை குண்டலம் வளை அங்கத முதலியவாகவும், பனிரெண்டு சூரியர்களை இன்னும் பலவித ஆபரணங்களாகவும்,தூபமேகமாகவும், தீபங்கள் ஏனையகோள்களாகவும், பதினுன்குலகங்களும் நிவேதன அன்னமாகவும். அவ்வுலகங்களுக்குள்ளே உண்டுபடும் பயன்களே வியஞ்சனங்களாகவும், சமுத்திரங்களே பாலாகவும், அஷ்டகுல பர்வதங்களே பல பேதங்களான ஆபூபங்களாகவும், மலைமுடியினின்றும் பெருகுகின்ற நதிகளெல்லாம் பானியமாகவும், அளவில்லாத இரத்தினங்களே தாம்பூலமாகவும், ஆகாயமே கண்ணுடியாகவும், சர்ப்பங்களே சமரியாகவும், வாயு விசிறியாகவும் இந்தப் பிரகாரம் அர்ச்சனைக்கு வேண்டிய உபகரணங்களை மனதினுலே கற்பித்து ஒவ்வொருநாளும் அமுதேசப் பெருமானைப் பூசைசெய்து எழுந்து ஸ்தோத்திரஞ் செய்கின்ருர். ஏ சங்கரா ! விமலா ! நிராமயா ! அனந்த ! ஆனந்தத் தாண்டவ ! உரககங்கண ! பரம ! பராபர ! நீலகண்ட ! கங்காதர ! அதுல ! புங்கவ ! அமுத்தாண்டெழுவரத ! புராந்தக ! திகம்பர ! புனித அங்கண ! உமக்கு நமஸ்காரம். சரணமடைந்த அடியேனை ஆட்கொண்டருளவேண்டும் என்று பிரார்த்தித்தார்.

அப்போது வேதநாயகன் அமுதலிங்க வடிவினின்று எழுந்து காட்சிகொடுக்க ஆச்சரியமடைந்து சரீரம் புளகங்கொள்ள விழிகளினின்றும் ஆனந்தவெள்ளம் பெருகப் பரவசமடைந்து நின்று

ஆநந்த நிருத்தஞ்செய்தான். அப்போது சிவபெருமான்றனது திருக்கரங்களாலணைத்து ஏ குளக ! நின்னுடைய மானத பூசையினல் மிகவும் மகிழ்ச்சியடைந்தோம். உனக்கு வேண்டிய வரங்களைக்கேளெனச்சந்நிதானத்திலே வீழ்ந்துநமஸ்கரித்து குளகனுஞ் சொல்லுகின்ருன். ஏ பிரபுவே ! தேவரீர் என் பெயரைத் தரித்து விளங்கவேண்டும். அன்றியும் மயுதமாமுனிவரும் யானும் என் தந்தையும் எந்த இடத்திலே இருந்தாலும் அங்கு வறுமைப்பிணி சாராதிருக்கவும் அருளவேண்டுமென அவ்வாறே வரங்கொடுத்து மறைய தந்தையும், தாயும், குளகனு முனிவர்கள் சூழும்படி உலகத்திலே மாதம் மும்மாரிபொழிதலால் வறுமையின்றி சந்தோஷமுடையவர்களாய்த் தவஞ்செய்துக் கொண்டிருந்தார்கள். இதைப் படித்தவர்களுங் கேட்டவர்களும் வறுமையினின்றும் நீங்கி மோக்ஷ இன்பத்தை யடைவார்கள்.

குளகேசச் சருக்கம் முற்றிற்று.

தனபாலச் சருக்கம்

முனிவர்களே ! குளகன் சரித்திரம் சொன்னோம். இனி தனபாலன் சரித்திரஞ் சொல்லுகின்றோம், கேளுங்கள். முன்னொரு நாளிலே அளகாபுரிக்கு இறைவனுகிய குபேரனுக்கு விருப்பமுடைய மந்திரி தனபாலனென்றொருவனுண்டு. அவன் அரசனுக்குவரும் இதமான காரியங்களைச்சொல்லி அரசனும் மந்திரியும் இராச்சிய காரியங்களை நடத்திவருங்காலத்திலே அத்தனபாலனவன் தேவதாசியாகிய கிருதாசி என்பவளிடத்திலே மோகத்தைச்செலுத்தி அளவுகடந்து நெடு நாள் அவள் போகத்திலே மூழ்கி அரசனிடம் வராதிருந்தான். அது தெரிந்த குபேரன் தனபாலன் என்னும் மந்திரியை யழைத்து நீ பெரும் போகத்தைப் பொருளென நினைத்து நம்மிடம் வராதபடி நெடு நாட் கழித்தாய். ஆனபடியினலே நீ யானையாகப் போகக்கடவது என்று சபித்தான். உடனே தனபாலன் வணங்கி நான் செய்த பிழையைப் பொருத்துக்கொண்டு இச் சாபம் நீங்கும் வகையைச் சொல்ல வேண்டுமென வேண்ட இரங்கி ஏ தனபாலா ! யானை உருவத்துடன் அறிவு குறையாமல் பனிரெண்டு வருஷங் காட்டிலே திரிந்து வேதாரணியத்தில் வந்து உனக்கு சாப நிவர்த்தி யாகுமென்றான் அவ்வாறு சொன்னவுடனே யானை யுருவத்தை எடுத்து வேதாரணியத்துக்கு வந்து அந்த யானையானது வேதநதியிலே ஸ்நானஞ் செய்து அவ்வாரணியத்திலேயுள்ள சிறப்புகளையும் அற்புதங்களை

யுங் கண்டு மகிழ்ந்து வேதாரணியேசுவரப்பெருமானை வணங்கித் தவம் செய்யும்படி நினைத்து தங்கியது. அங்ஙனந் தங்கிய யானை யானது அதிகாலையிலெழுந்து ஒவ்வொரு நாட்களிலுங் கடலிலே மூழ்கித் தடாகங்களிலேயும் வனங்களிலேயும் உள்ள மலர்களையும் கனிகளையுங் கொண்டுவந்து வைத்து தன் துதிக்கையிலே நீரை முகந்துவந்து சிவசந்நிதான பலிபீடத்தையே சிவமாக நினைத்து அபிஷேக அர்ச்சனை நைவேத்தியஞ்செய்து காட்டிலுள்ள குக்கி லாற்றூபமும் இரத்தினங்களினால் தீப உபசாராதிகளுஞ் செய்து மானதமாய்ச் செபஞ்செய்யும். அப்பால் துதிக்கையைக் குவித்துக் கும்பிட்டுமிரங்கி நிற்கும், கீழே விழ்ந்து நமஸ்காரம் செய்யும், குதித்து நாதமுண்டாக்கி அதுமுழவாகச் சேர்ப்பிக்கும், தியானஞ் செய்யும், வலம்வரும், சரீரம் புளகாங்கிதமாய் நின்று ஆனந்தநீர் சொரியும். இந்த விதமாகச் செய்துக்கொண்டுவரப் பனிரெண்டு வருஷங்கள் சென்றவுடனே தந்தியினுருவமாறி பழைய தனபால னுடைய உருவம் வரவே சுவர்ண விமானத்திலேறிக்கொண்டு அளகா நகரமடைந்து குபேரனை வணங்கி அவனுக்கு முன்பினு மதிகவிருப்பமுடைய மந்திரியாகி அளவில்லாத சுகபோகங்களை அநுபவித்துக் கொண்டிருந்தான். இதைப் படித்தவர்கள் கேட் டவர்கள் சாபவிமோசனமடைந்து மோக்ஷகதி யடைவார்கள்.

தனபாலச் சருக்கம் முற்றிற்று.

தேவர் தொழுமன்றச் சருக்கம்.

ஓ தவத்தர்களே ! தனபாலன் சரித்திரஞ்சொன்னோம். இனி முன்னமே இந்த உலகத்திலே நடராச சபைகள் பதினாறு என்று சொல்லியவைகளுக்குள் இது தேவபக்த சபையாய கதையைச் சொல்லுகின்றோம். தோன்றப்பட்ட சிவகோடிகளுக்கு நினைந் தாலும் துதித்தாலுங் கண்டாலும் மிகவு மேலான முத்தியைத் தரத்தக்கதாய் பரம இரகசியமாய் யாவரும் போற்றத்தக்க அரு மையுடைய ஆநந்தத் தாண்டவத்தைக் கருணைவள்ளலாகிய சிவ பெருமான் செய்யும் சபைகள் பதினெட்டாகும்.

அவைகளுள் முதலாவதுசபை சிதம்பரசபை, இரண்டாவது சபை அதற்கு மேல் பக்கத்துள்ள சிற்றம்பலம் என்னுஞ் சபை, மூன்றாவது மேல் பாகத்திலே ஐந்து யோசனைக் கப்பாலுள்ள குடந்தையாகும், நான்காவது அதற்குத் தென்பாகத்தில் இரண் டரை யோசனை தூரத்திலுள்ள கன்னகுப்பசம் என்னுஞ் சபை, ஐந்தாவது அதன் கீழ்பாகத்திலே நாலரை யோசனை தூரத்தி

னுள்ள திருவெண்காடாகும், ஆருவது அதற்கு வடபாலாக ஒரு யோசனைக்குக் கொஞ்சம் குறைந்த தூரத்திலுள்ள காளிபுரம், ஏழாவது அதன்பக்கத்திலே கிழக்கே கால் யோசனை தூரத்திலே கடற்கரைமேல் பாலதான பிரவேசினி என்னுஞ் சபை, எட்டாவது அதற்குத் தென்பால் கொஞ்சங் குறைந்த ஒரு யோசனையில் உள்ள சம்பு விநோதம் என்னுஞ் சபை, ஒன்பதாவது அதற்கரை யோசனை தூரத்திலே காலநாசனி என்னுஞ் சபை, பத்தாவது இதன் வாயுமூலையில் அரைக்குரோசனையிலே யிருக்கும் பாவநாசனி என்னுஞ்சபை, பதினேராவது அதற்குச் சமீப பக்கத்திலே யுள்ள சுப்பிராந்தம் என்னுஞ் சபை, பனிரெண்டாவது அதற்குத்தென்கீழ்ப்புரத்திசையிலே மூன்றரை யோசனை தூரத்திலுள்ள காரோகணம் என்னுஞ்சபை, பதின்மூன்ருவது அதற்குத்தென்பால் மூன்று யோசனை தூரத்திலே வேதாரணியத்திலே தேவபக்தசபையென விளங்கும் இம்முறைப்படி இன்னுமுள்ள மூன்று சபைகளுஞ்சொல்வதற்கு விளங்கவில்லை. இவ்வேதாரணியந் தேவபக்த சபையாய் விளங்கப்பெற்ற காரணத்தைக் கேளுங்கள். முனிவர்களே! முன்னெரு காலத்திலே இரணியாசுரன் என்பவன் உலகத்திற்கு பெருந்துன்பஞ்செய்துக் கொண்டிருந்தான். அப்போது விஷ்ணுமூர்த்தியானவர் நரசிங்க வடிவமெடுத்து அவனைக் கொன்று அவனிரத்தத்தைப் பானம்பண்ணியபடியினுலே மிகுந்த மயக்கமும் அகந்தையு முடையவராய்த் தனக்கு மேற்பட்டவர்களொருவருமில்லை என்று நினைத்து பிரமன், இந்திரன் முதலிய தேவர்களை யழைத்து உலகத்திலே நமக்கு மேற்பட்ட பொருள் ஒன்றுமில்லை. உங்களாலே துதிக்கத்தக்க பொருள் யாமே, ஆதலாலெமை வணங்குங்கள். சர்வதேவர்களுக்கும் தலைவன் நாமல்லது வேறில்லை. நீங்களும் உங்கள் பதவியிலிருந்து தவருது வாழவேண்டில் நம்முடைய பாதமே கதி என்று பற்றுங்கள் என்ருன்.

இதக்கேட்ட பிரமதேவர் நகைசெய்து எதிர்நோக்கி ஒ விஷ்ணுவே! நீர் சொல்லுகின்றது மிகவும் நன்ருயிருக்கிறது, உமக்கும் எனக்கும் ஏனைய தேவர்கள், அசுரர்கள் உலகங்களில் மற்றுமுள்ள யெல்லோருக்கும் தலைவனுகி யுண்டாக்கவும் அழிக்கவும் போகங்களை அநுபவிக்கவும் அநுபவிக்கப்பண்ணவும் வல்லமையுடையவராயெல்லாராலும் வணங்கப்படுந் தெய்வமென்பது சிவபெருமானல்லது வேறுமுண்டோ என்று சொல்ல நரசிங்கமூர்த்தியானது அதை நினையாது மதியாது தன்னகந்தை மேலீட்டையேகொண்டு எல்லோரையும் அடக்கி ஆள நினைந்த தன்மையைச் சிவபெருமானறிந்து தன்னை வணங்காத தக்கனைச்செய்தது போற்செய்ய எண்ணித் தான் சரபப்பறவையி னுருவெடுத்து நரசிங்கத்தின் உருவத்தையும் அகந்தையையுமொழித்தார். விஷ்ணுமூர்த்தியானவர் அறியாமையை விட்டு அவ்வுருவ நீங்கப் பெற்ருர்.

முழுமுதற்கடவுளாய் விளங்குபவர் சிவபெருமானே யென்று அறியும் அறிவு கூடினவுடனே கீழே விழ்ந்து நமஸ்கரித்து எழுந்து இரண்டு கைகளையுஞ் சிரசிலேகுவித்து நின்றுக்கொண்டு அடியேன் செய்த பிழைகளைப் பொறுத்தருளல் வேண்டுமென்று ஸ்தோத்திரஞ் செய்கின்றான். அரகர பரம சிவ சிவ அனந்த ஆனந்தத் தாண்டவ விமல புரகர சரத விஷதர அகண்டபூரண பராபர புனித வரிகரியுரிவை புரிதருவரத மனோகர சங்கர பிரம சிரகர அகிலபுவனமும் பணியும் தேவனே தேவநாயகனே என்று துதித்த மாத்திரத்திலே சரபரூபத்தை மாற்றிநிற்க பிரமா விஷ்ணு முதலிய சர்வதேவர்களும் நமஸ்கரித்தார்கள்.

அவர்களுக்கு அனுக்கிரகம் பண்ணி தேவாதிகளுடன் தேவலோகமும் பூலோகமும் வாழும்படி வேதாரணியத்தை வந்தடைந்தார். அவ்வாறுவந்து திருமூலட்டான சந்நிதியின் முன்னொரு சபை உண்டாக்கி சர்வ தேவர்கள், அசுரர்கள், முனிவர்கள், சித்தர்கள், வித்தியாதரர்கள், கின்னரர்கள், திக்குபதிகள், திக்குதிகாந்தங்களிலுள்ளார் யாவர்களுடனும் பிரமா, விஷ்ணுவும் ஆனந்த பரவசத்தராய் தரிசிக்கும்படி உமாதேவியானவள் தாளமிடும்படி ஒத்தரமித்து பரமானந்த தாண்டவஞ் செய்தருளினார். அவ்வாறு செய்த கருணைவள்ளல் தேவர்களைப் பார்த்து ஓ தேவர்களே! இந்தப் பிரகாரம் இங்கேயே நம்முடைய நடனத்தை தரிசனஞ் செய்துக் கொண்டிருங்கள் என்று அருளிச் செய்தார்.

தேவர்கள் பலரும் தம் தம் பெயரால் சிவலிங்க பிரதிஷ்டை செய்து, பூசைசெய்து, ஆனந்தத்தாண்டவ தரிசனமுஞ் செய்துக் கொண்டிருந்தார்கள். ஆதலாலன்றுமுத லதற்கு தேவ பக்த சபை என்பது பெயராயிற்று. விஷ்ணு, பிரமன், இந்திரன் இவர்களால் பூசித்த இலிங்கங்களைத்தரிசித்தவர்கள் அந்தந்தபதவிகளையடைந்து வாழ்வார்கள். சூரியனாலேபூசித்த இலிங்கம் பெருமையைக்கொடுக்கும், அக்கினிப்ரதிஷ்டா இலிங்கம் பிரகாசத்தைக்கொடுக்கும், வாயு இலிங்கம் வலிமையைக் கொடுக்கும், இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் வேதங்களினாலும் பிரதிஷ்டைசெய்து ஆகமோக்தப்பிரகாரமாய்ப் பூசை செய்யப்பட்ட வித்யேசுவர மூர்த்தியைத் தரிசனஞ் செய்வார்களேயானால் உயர்வையுங் கல்வியையும் வரச்செய்யும் உயர்கல்வி என்றபடியால் இவ்வுலகத்திலே கல்வியானது அறிவைத்தந்து தருமஞ்செய்ய வற்புறுத்தி அவ்வழிச் செலுத்தலாலும் அவ்வழி நிற்பவர்களுக்குத் தாமுந்துணையாக நின்று பெரும்பொருளைக்கூட்டுவித்தும் அப்பெரும்பொருளோடு தாமுந்துணையாகநின்று இகபோகங்களாகிய எல்லாவற்றையும் அனுபவிக்கவும் மறுமை இன்பத்துக்கு வேண்டுவன சேமநிதிபோற்சேமித்து வைத்தனுபவிக்கவும் அவ்வனுபவத்தோடு துணையாகநின்று பராபர ஞானவடிவாய்த்தங்கித் தெளிந்துநின்று முத்திகூடச் செய்

வதும் அதுவாதலால் அவ்வறிவு உதிக்குங்கல்வியை உயர்கல்வி என்றுர்.

இதனுல் வேதங்களாலே பூசிக்கப்பட்ட வித்தியேசுவரரை தரிசனம் பண்ணுவார்களானுல் இகபோகம் எல்லாமடைந்து பர மோக்ஷமும் அடைவர் என்பதாயிற்று. ஓ! முனிவர்களே ஒத்தர மித்து நடமிட்ட பெருமானுகிய தேவபக்த சபா நாதரை சாதாரணகாலங்களில் தரிசனஞ் செய்தவர்கள் சர்வ பாவங்களி னின்று நீங்கப்பெறுவார்கள். ஒவ்வொரு மாதங்களினுங் கிருஷ்ண பக்ஷம் அஷ்டமி திதியினும் குருதினத்தினும் வேதநதியிலே ஸ்நனஞ் செய்து தரிசித்தவர்கள் மோக்ஷத்தை அடைவார்கள். மாசி மாதத்திலே மக நட்சத்திரங்கூடிய பௌர்ணமியிலே வேத நதியிலே ஸ்நானஞ் செய்து நடராஜவள்ளலைத் தரிசனஞ் செய்வார் களானுல் விரும்பிய அருமையான போகங்களெல்லாவற்றையும் அனுபவித்து மோக்ஷபதவியை அடைவார்கள்.

தில்லையிலுள்ள நடராஜ தரிசனத்தால் எவ்வளவு அடைய லாமோ அவ்வளவு பலனுமிந்த சந்நிதானத்திலே அடையக்கூடும். அல்லாமல் வேதாரணியத்தின் நிருதி திக்கிலே ராக்ஷஸர்களைத் தும்சம்பண்ணும் பொருட்டுப் பரமசிவனுடைய போகசத்தியா யெழுந்தருளியிருக்கின்ற சருச்சிகை யென்னு நாமத்தையுடைய மோடியம்மையாரைத் தரிசனஞ் செய்தவர்கள் சத்துருபீடை யொருபோது மில்லாதபடி சந்தோஷமாக வாழ்வார்கள். மாசி மாதத்திலே பூர்வபக்ஷசப்தமி திதியிலே வேதாரணியத்திலே ஆதித் திய மூர்த்தியை ஸ்தோத்திர நமஸ்காரஞ்செய்வார்களானுல் சர்வ ரோகங்களினின்று நீங்கி அநேக நன்மைகளினுலே அதிகமான சந்தோஷங்களையும் அடைவார்கள். இதை நினைத்தவர்களுந் துதித்தவர்களுந் தரிசித்தவர்களுங் கேட்டவர்களும் உணர்ந்து சொன்னவர்களும் பரிபூரணுனந்த மோக்ஷத்தை யடைவார்கள்.

தேவர் தொழுமன்றச் சருக்கம் முற்றிற்று.

தீர்த்த முத்திச் சருக்கம்

ஓ முனிவர்களே! விஷ்ணுமூர்த்தியானவர் பரமசிவனைப் பார்த்து சுவாமி பிறப்பு இறப்பு என்னுந் துன்பநீங்கி நித்தியானந் தமான மோக்ஷம் எப்படியடையக்கூடும் அவ்வழியை அருளல் வேண்டுமென அதுகேட்ட பரமசிவன் ஓ விஷ்ணுவே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் இவைகளை முறையாக அடைந் தால் ஞானத்தினுலே மோக்ஷம் சம்பவிக்கும், ஞானமில்லாமல்

ஒருபோது முத்தியடைய முடியாது. அம் முத்திக்கேதுவான ஞானம் பலசன்மப்பழக்கங்களினுலே வரவேண்டும், ஆனுல் ஒரு சன்மத்திலப்போதே மோக்ஷமடைய உபாயமுண்டு.

அதாவது வேதாரணியத்திலே வேதநதியிலே ஸ்நானஞ் செய்தால் அடையலாம், திருவாரூரில் பிறந்தவர்கள் மோக்ஷமடைவார்கள், சிதம்பரத்திலே தரிசித்தவர்கள் மோக்ஷமடைவார்கள், காசியில் இறந்தவர்கள் மோக்ஷமடைவார்கள் அப்படியே வேதாரணியத்து வேதநதியிலே ஸ்நானஞ் செய்தவர்கள் மோக்ஷமடைவார்கள் என்ருர். அன்றியும் அப்படியடைந்தவர்கள் அனேகர்களுண்டு, அதிற்சில சொல்லுகின்ரும் கேட்பீர்களாக. விதிசை என்னுமொரு பெரிய நதிக்கரையிலே உத்தாலகனெனும் பெயர் பூண்ட உத்தமமுனிவரானவர் அங்குபலமுனிவர்கள் தவஞ்செய்வது போலத் தாமுந்தவஞ்செய்துக்கொண்டிருந்தார் அப்படியிருக்குங் காலத்தில் பக்கத்தில் தவஞ்செய்துக் கொண்டிருப்பவர்களும் முறவினர்களுமாகிய சில முனிவர்கள் உத்தாலகரைப்பார்த்து ஒ முனிவரே ! நீர் பிரமசரியநீங்கி இல்லறமடையவேண்டும் இல்லறம் மிகவும் பெரியது, புத்திரப்பேறு அவசியம் வேண்டும், புத்திரப் பேறில்லாதவர்கள் நரகத்தை யடைவதாக நூல்களிற் சொல்லியிருக்கிறது என்று பலவிதமாகச் சொல்லியுங்கேளாது துறவறமே பெரியதென்று நினைத்து தவஞ்செய்துக் கொண்டிருநதார்.

அவ்வாறிருக்குங் காலத்தில் ஒருநாள் இரவிலே கனவிலே இந்திரியமானது கலிதமாயிற்று அது பூமியில் படலாகாதே என்று யோகியில்விடுவதாக எண்ணி ஒருதாமரை மலரிதழிலேந்தி ஆற்றிலே மிதக்கும்படி விட்டார். அது பிரமதேவரைத் தாங்கிய தாமரை மலர்போல ஆற்றிலே மிதந்து செல்லும்போது பிரதாதரன் என்னும் அரசனுடைய குமாரி சுகேசினி என்பவள் தன்னுடைய சேடிகளுடன் ஸ்நானஞ்செய்யும்படி அவ்வாற்றை வந்தடைந்து அங்கு ஸ்நானஞ்செய்யும்போது தேசோரூபமாய் விளங்கி மிதக்கின்ற தாமரையிதழைக் கண்டு எடுத்து இது வென்னவென நினைத்து முகந்தாள். அப்போது அவ்வீரியமானது நாசியின் வழியா யுள்ளேசென்று கருப்பையிற்றங்கியது.

இவ்விஷயம் ஒன்று மறியாதபடி ஸ்நானஞ்செய்து சேடிகளுடன் வந்து சேர்ந்தாள். கருப்பமானது நாள்தோறும் வளர்ந்து அடையாளங்கள் தோன்ற சுகேசினியின் தாயாகிய தேசோவதியென்னும் ராஜஸ்திரியானவள் தன் மகளைத் தனியாக அழைத்து இது என்னவென்று விசாரிக்க அம்மே யாதும் நான் அறியேன் என்ருள். அதுகேட்ட தேசோவதி அரசனிடம் தெரிவிக்க அவன் மிகவும் மனம்நொந்து வருந்தி கோபித்து கொலை செய்தால் பெண் பழி தொடரும், அல்லது மகப்பெறும்படி செய்தால் அப்பழி நம்முடைய வம்சமுழுமையுந் தொடர்ந்து நிற்கும் ஆதலால் செய்

யத்தக்க தென்னவென நினைத்து நமக்கும் பந்தமில்லாமலும் நாட்டிலில்லாமலும் காட்டில் ஒட்டிவிடுதல் தரும விரோத மில்லாத காரியம் எனத் தீர்மானித்துத் தனியே யழைத்துக்கொண்டுபோய் உற்கட முனிவர் தவஞ்செய்துக்கொண்டிருக்கின்ற காட்டிலே விட்டு வந்து சேர்ந்தான்.

முனிவர் இக்கன்னிகையைக்கண்டு தம்புத்திரிகளுடன் இருக்கும்படி அன்பும் அருளும் பாராட்டிவந்தார். பத்துமாதங்கள் நிறைந்தவளவிலே அப்பெண்ணின் நாசிவழியாக அரிய பெரிய தவவடிவான ஒரு குழந்தைபிறந்தது. உற்கட மஹாமுனிவர் இது என்ன ஆச்சரியமென்று ஞானதிருஷ்டியினுல் பார்த்து விஷயங்களறிந்து இவன் உத்தாலக முனிவருடைய குமாரன் என்று தெரிந்து மிகுந்த அன்பு பாராட்டி நாசிகேதுவென்று பெயரிட்டு வித்தியாப்பியாசஞ்செய்வித்துப் பூரணமான பின்பு அவனுடைய பூர்வசன்ம வழிகளைத்தெரிவித்து வேறொருவருக்கும் இவ்விஷயம் வெளிவராமல் அவ்வுத்தாலகமுனிவரிடத்தில்பணிவிடைசெய்துக்கொண்டிருக்கும்படி செய்தார்.

அந்நாசிகேதுவானவர் உத்தாலக முனிவருக்கும் இன்னும் பக்கங்களி லிருக்கின்ற முனிவர் கூட்டங்களுக்கும் அதிகமான விருப்பமுண்டாகும்படி நடந்து வந்தார். இப்படி யிருக்குங் காலத்தில் முனிவர் இப்பிள்ளையின் திறமையையும் விசுவாசத்தையும் நற்செயல்களையும் பார்த்து நீ யார்? உன் வரலாறு என்னவென்று வினவத் தெரிந்த வரலாற்றை முறையாகச்சொல்லி யான் தங்களுடைய குமாரன், என் தாயைத் தங்களுடைய மனைவியாக வாழும்படி யருளல் வேண்டுமென உடனே உத்தாலக முனிவர் கேட்டு ஞானதிருஷ்டியினுலே முச்செயல்களை முறையாகக்கண்டு ஆச்சரியமடைந்து புதல்வனைப்பார்த்து உன் தாயை இங்கு வரும்படி யழைத்து வருவாயாக என்ருர்.

உடனே நாசிகேது தாயினிடத்திலே வந்து அம்மே உத்தாலக முனிவரென்னுந் தந்தையானவர் என்னை வினவியதுமன்றி ஞான திருஷ்டியினுலே ஆராய்ந்து தெரிந்து மகிழ்ந்து உன்னை அங்கு அழைத்துவரும்படிசொல்லி என்னை இப்போது அனுப்பினுர் என்று சொல்லச் சுகேசினி என்பவள் பிள்ளாய் நீ சொல்லுவது சரி, ஆனுல் முன்னம் நான் ஒன்றும் அறியாதபடிவந்த அபவாதம் போதாதா இன்னமும் ஒன்று வரவேண்டுமா அது முடியாது, அப்படி அம்முனிவருக்கு என்னை மனைவியாக ஆளவிருப்பமிருக்குமானுல் என்னிடஞ் சொல்வதில் பலனில்லை, பெண்களுக்கு ஒரு போதும் சுதந்திரமில்லை, பால்யத்தில் பிதாவாலும் மத்திய காலத்தில் கணவனுலும் பிற்காலத்தில் பிள்ளைகளாலுங் காக்கப்படுவார்கள் ஆதலால் என் தகப்பனுகிய பிரதாதர மஹாராசனிடத்தில் இப்போதுக் காக்கின்ற உற்கடமுனிவரனுமதிபெற்றுப்

போய் கேட்டு அவர்கள் கொடுக்கும்படி என்னைப்பெற்றுக்கொண்
டால் பெறலாமல்லது முடியாதுஎன்று சொல்லக்கேட்டு நாசிகேது
வானவர் இவ்வார்த்தையை உத்தாலக முனிவரிடஞ் சொன்னார்.

முனிவர் அது உண்மைதான் தர்மசாஸ்திர விரோதமில்லா
ததும் அதுவே எனநினைத்து நாசிகேதுவுடன் உற்கட முனிவர்
இடம் வந்து சொல்ல அவர் பிரதூதர மஹாராசனிடம் போய்
அரசே உன் மகளாகிய சுகேசினி விஷயங்கள் இன்னது என்று
முறையாகச்சொல்லி அவ்வுத்தாலக முனிவரிப்போது மனைவியாக
அடைய நினைக்கின்றார் என்ற அளவிலே அரசனுக்கு வேறு
தப்பாக எண்ணிய எண்ணங்கள் மாறி நம்முடைய வம்சத்துக்குப்
பழியாக நினைத்தோமே அது தீர்ந்ததுமன்றி இவ்வாறு நிகழில்
யாம் பெரும் பாக்கியவானும் புண்ணியவானுமானோம் என மனங்
களிகூர்ந்து உடன் பட்டு உற்கட முனிவரிடத்திலிருக்கும் நாசி
கேதுவையுந் தன் குமாரியையும் அழைத்து வந்து அரண்மனை
யிலே வைத்துவிட்டு மண முரசு அறைவித்து பல தேச அரசர்
கள் இஷ்ட மித்திர பந்து ஜனங்களும் இன்னும் எல்லோருங் களி
கூறும்படி உத்தாலக முனிவருக்குச் சுகேசினி யென்னும் புதல்
வியை விதிப்பிரகாரம் பாணிக்கிரகணஞ் செய்து கொடுத்தார்.

அவ்வாறு விவாகம் முடிந்த பின்னர் உத்தாலக முனிவரான
வர் பிரதூதர மஹா ராசாவுக்கு இக பர சௌக்கியம் அடையத்
தக்க ஞானங்களையும் நீதிகளையும் போதித்து விடைசொல்லி மனைவி
யையும் மைந்தனையும் அழைத்துக்கொண்டு தபோ வனம் வந்து
சேர்ந்து முன்பு போலவே தவஞ் செய்துக் கொண்டிருந்தார். பல
நாளங்கிருந்துஅப்பால் பலபுண்ணியதீர்த்த ஸ்தலயாத்திரையாகச்
சென்று பதரிகாச்சிரமம் வந்து அங்குள்ள முனிவர்களோடு தவஞ்
செய்துக்கொண்டிருக்கின்றகாலத்தில் ஒரு நாள் காலையிலெழுந்து
கோதாவரி நதியிற் சென்று ஸ்நானஞ் செய்து புஷ்பம், சமித்து,
தருப்பை முதலியவைகளை சேகரித்துக்கொண்டு வந்து பக்கத்தி
லே வைத்து அந் நதிக்கரையிலே நெடுநேரந் தவஞ்செய்துக் கொ
ண்டிருந்தார். தவ வழியில் நின்றபடியால் நெடுநேரமானது தோ
ன்றாதபடி எழுந்து பார்த்து, நேரமாயினமையைத் தெரிந்து மாத்
தியான்நிக காலந்தவறுமற் செய்வதை நினைத்து அவசரமாய் வைத்
திருந்த சமித்து வகையறுக்களை எடுக்க மறந்து ஆச்சிரமத்துக்கு
வந்து தன் மகனாகிய நாசிகேதுவை யழைத்து. ஓமாங்கமான
சமித்து முதலியவைகளை நதிக்கரையில் வைத்து மறந்து வந்தேன்
சீக்கிரமாய்ப் போயெடுத்து வருவாயாக என்றார்.

அதுகேட்ட நாசிகேது அவசரமாகப்போய் நதிக்கரையிலே
தேடிப்பார்த்துக் காணாமையினால் வந்து சொல்லப் பசிவருந்த
கர்மாநுஷ்டானங்கள் செய்யாது தாழ்த்திருந்த உத்தாலகமுனி
வர் மகனைப்பார்த்து அடே பிள்ளாய் இப்போது என்னுடைய

தளர்ச்சியும் பூசைமுதலியவைகளுக்கு நேரமாயினமையும் நீ தெரிந்தும் அங்கு வைத்தபொருள் கிடையாதாயின் வேறேயாவது சேகரித்துக் கொண்டுவராது இவ்வாறு சொல்லியபடியால் நீ இயமனைக்காண்பாயாக வென்று சபித்தார், சபித்தவளவில் உயிரானது செல்ல அதுகண்டு தெரியாதபடி மகனுடலை மடியிலே சாய்த்து வைத்துக்கொண்டு என்னபாவஞ் செய்தோமென்று விழுநீர் சொரியப் புலம்பிப் பெருந் துக்கசாகரத்தி லழுந்தியிருந்தார். அத்தருணத்தில் அவ்வுடலிலே உயிர்வந்துபுக நாசிகேது உறக்கம் நீங்கியது போலவெழுந்தார். அப்போது தழுவியணைத்து மகிழ்ந்த தந்தையைப் பார்த்து ஏ பிதாவே! உயர்ந்தவர்களிப்படித்துன்பமடைவதுண்டா நான் செய்தகுற்றத்திற்காகச் சபித்தபடி நேர்ந்தவொரு விஷயத்துக்குத் துன்பமடைவது சரியல்ல

அன்றியும் புத்திரர்கள் மாணுக்கர்கள் இறந்தார்களானல் அவர்களை நினைத்துத் தந்தை, குரு இவர்கள் விசனித்தால் இறந்தவர்கள் மோக்ஷமடையமாட்டார்கள் நரகத்தை யடைவார்கள் என்பது தெரிந்தும் தாங்கள் இப்படி வியசனிப்பது சரியல்ல, முன்னரே நான் செய்த பாபவழியினலே காற்றுனது தங்களாலே நதிக்கரையில்சேகரித்துவைத்த ஓமாங்கப்பொருளை நதியிலேதள்ள அதுவுணராது உள்ளத்திலே தவருக நினைத்துச் சாபஞ்செய்ய நேர்ந்தது, தவருகவானுலும் நீதியாகவானுலும் சொன்னல் புத்திரர், மாணுக்கர் அதைக்கொள்ளுதல் நீதியான காரியமல்லவா, ஏ பிதாவே! தாங்கள் அடையுந் துன்பந் தெரிந்து இப்போது வந்தேன் எனக்கு மீளப்போம்படி விடைதரவேண்டுமென்று வேண்ட மைந்தனைப்பார்த்து, ஏ பிள்ளாய்! என்னுடைய கோபத்தினுலே அந்தகனைக் காண்பாயென்று சொன்னதல்லது மனமொப்பிச்சொன்னதல்ல, ஆதலாலிந்தசரீரத்துடன் நெடுநாள்கள் சீவித்துவாழ்வாய் அல்லது இயமலோகமடையவேண்டுவதில்லை யென்றுர்.

உடனே சீவித்தெழுந்த புத்திரன் தந்தையாருடைய பாதத்திலே விழுந்து நமஸ்கரித்தான். இந்த சமாசாரங்களை ஆச்சரியமாகக்கேட்டுத் தபோவனங்களிலுள்ள முனிவர்கூட்டங்கள்நாசிகேதுவைக் காணும்படி வந்தார்கள். வந்த முனிவர்கள் உத்தாலகரை சாபவழியே போனபுதல்வன் வந்தானு என்று க்ஷேமவிசாரித்து நாசிகேதுவைக்கண்டு பிள்ளாய்! நீ மிகவுஞ் சாமார்த்தியமுடையவன், இயமலோகம் போய்ப்பார்த்து இங்கு விட்டுப்போன அந்தச் சரீரதுக்குள்ளே சீவன்வந்து பிரவேசிக்க உயிர்த்து வாழ்பவர்களொருவருமில்லை நீ யத்தகையபேறு பெற்ருய், அங்கு நரகத்திலே துன்பமடைகிறவர்கள் யாவர், சுவர்க்கலோகத்திலே போய் இன்புறுபவர் யாவர், தெரிந்து வந்தவைகளை எங்களுக்குச் சொல்லவேண்டுமென நாசிகேதுவானவர் ஓ முனிவர்களே! நரகஅரசாக்ஷி செய்யும் இயமதரும ராசனுடைய ஆக்ஞையினலே சித்திரகுப்தன்

சொன்னதும் யான் கண்டதுமான காரியங்களைச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

வாயினாலே சொல்லுதற்கரிய துன்பங்கள் யாவும் அடையத்தக்க இரௌரவமுதலிய கொடிய நரகங்கள் இருபத்தெட்டும் அதில் அநந்தபேதங்களுண்டு, சிவர்கள்செய்த தீவினைக்கிடாக அநுபவிப்பதைக் கண்டவரையில் சில சொல்லுகின்றேன். குருவை, சிவபெருமானை நிந்தை செய்தவர்கள் கொண்ட விரதத்தை இடையிலே விட்டவர்கள இரௌரவம் என்னும் நரகத்தை யடைவார்கள். தாய் தந்தையை நிந்தைசெய்த தீயவர்கள் கும்பிபாத நரகத்தை யடைவார்கள், தாகத்தினாலே தண்ணீரருந்தும்படி சென்ற பசுக்கூட்டத்தைத் தடுத்த பாபிகள் கைகள் முதலிய அங்கங்களை மீட்டும் மீட்டும் வெட்டி வீழ்த்திக் கொண்டிருக்கிற பலவாளே வடிவான நரகத்திலே துன்புறுவார்கள், பரஸ்திரீயை இச்சித்துப் பார்த்த புருடர்களும்,பரபுருடர்களை இச்சித்துப் பார்த்த ஸ்திரீகளும் முட்கள் நிறைந்த இலவ மரத்திலே சேர்த்துக் கட்டப்பட்டு நீண்ட மூக்கையுடைய பல காகங்களால் விழிகளைக் கொத்திக்கொத்திப் பிடுங்கித் துன்புறுத்தப் பெறுவார்கள். அயன் மனையவளைத் தழுவிய ஆடவனும், பரபுருடனைத் தழுவிய ஸ்திரீகளும் இரும்பினாலே பெண் வடிவமாகவும் ஆண் வடிவமாகவும் அமைந்து நெருப்பிலே காய்ச்சிப் பழுத்திருக்கிற வடிவங்களைத் தழுவி ஐயோ ஐயோ என்று அலறித் துன்புறுவார்கள். கொஞ்ச மேனுங் கொலைக்குஞ் சாது செய்யும் பாபிகள் மகா இரௌரவம என்னும் நரகத்தில் விட்டு நீங்காதபடி எந்நாளும் துன்புற்றிருப்பார்கள். வஞ்சனையினாலே கொலை செய்தவர்கள் நிகும்பம் என்னும் நரகத்தில் பெருந் துன்ப மடைவார்கள், தரித்திரர்கள், நோயாளிகள்,வழிநடை நடந்து சிரமம் அடைந்தவர்கள் யாசித்தால் சொற்ப ஆகாரமுங் கொடாத தீயவர்கள் உற்கடகம் என்னும் நரகத்திலமிழ்ந்தி வருவார்கள். நியாயவாதம் பேசும்போது பொருளாசையினாலே நியாய நடுநிலை மாறிச் சொல்லுகின்றவர்கள் சங்கடநரகம் என்பதில் அமிழ்ந்திப் பெருந்துன்ப மடைவார்கள்.

பெரியோர்களை அபவாதமாகப் பேசினவர்கள் சுடு மணல்காகப் பொழிந்து கொண்டிருக்கிற வாலுகமென்னும் நரகத்திலழுந்துவார்கள். உத்தம கன்னிகைகளைத் தீய சொற் சொன்னவர்கள் யெரிந்து பொழிந்துக் கொண்டிருக்கின்ற தைலகும்பமென்னும் நரகத்தை யடைவார்கள். ஒருவனுக்கு உணவையிட்டு அவனுண்ணும்போது அவனை நிந்திக்கின்றவர்கள், தீக்கடை என்னும் நரகமடைவார்கள். பிராமணர்கள், முதியவர்கள், தந்தை, பசு, இவர்களுக்கு துன்பம் வரும்போது உதவியில்லாத பாபிகள் மாசட நரகத்தில் வருந்துவார்கள். அயலவர்கள் வீட்டிலிருக்கவும், உண்ணவும் விரும்புகின்றவர்கள் இருளே வடிவமான நரகத்தை

யடைவார்கள். கோள்வார்த்தை சொல்லுகின்ற தீயவர்கள் சூசிமுகம் என்னும் நரகத்தையடைவார்கள். தனது மனைவியை விட்டு ஆசையினாலே அயலான் மனைவியைத் தழுவிய பாபிகள் அஞ்சத்தக்க சர்ப்பங்களும், தேள்களும் நிரம்பி யிருக்கின்ற ஆகோரம் என்னும் நரகத்திலே பெருந்துன்ப மடைவார்கள். இவைகள் முதலாக இன்னும் பலவிதமான பாவங்களுக்கும் அததற்கு நூலிலே வகுத்தபடி கோரமாகிய நரகத்திலே பல காலங்கள் அநுபவிப்பார்கள். ஓமுனிவர்களே, பெரியதீயவினைகள் செய்தாலும் சில புண்யங்களால் அவைகள் தீருமென்பதும், பெரிய புண்ணியங்கள் செய்தாலும் சிலபாபங்கள் செய்தால் அவர்கள் நரகத்தை அடைவார்கள் என்றும் சொல்லிய விவரங்களைச் சொல்லுகின்றேன். தங்கள் சாதி ஆச்சிரமங்களுக்கேற்ற நித்திய கருமாநுட்டானங்களைத் தவறுது செய்கின்றவர்களும், தடாகம் அமைப்பவர்களும், நந்தவனம் வைப்பவர்களும், வேதியர்களுக்கு வீடு கட்டிவைப்பவர்களும், தேவாலயங்களைக் கட்டுவிப்பவர்களும், தண்ணீர்ப்பந்தர் வைப்பவர்களும், பலபாவங்களைச் செய்தவர்களாயிருந்தாலும் அவர்கள் நரகத்தை அடையமாட்டார்கள். வறியவர்கள், குருடர், அநாதர், சிறுவர், படைவீரர் இவர்களைக்காக்கின்றவர்களும், சிவக்ஷேத்திரங்களைக் கண்டு கொண்டாடுவார்களும், ஞான மாதவர்களாகிய பெரியோர் வழியில் அடங்கி நிற்பவர்களும், ஈனமான பாபங்களைச் செய்திருந்தபோதிலும் நரகத்தை யடையமாட்டார்கள். பிராமணர்களுக்கும், பசுக்களுக்கும் நேர்ந்த துன்பங்களை நீக்குபவர்களும், சிவாலயங்களிலும், மடாலயங்களிலேயும், திருவிளக்கேற்றினோரும், அமாவாசை, பௌணர்மி இவைகளில் பெரிய புண்ணிய நதிகளிலே ஸ்நானஞ் செய்தவர்களும், கொடிய பாவங்களைச் செய்தவர்களானாலும், நரகத்தை யடையமாட்டார்கள். ஒவ்வொரு தினங்களிலும் பசுவுக்குப் புல்லளித்து உண்ணுகிற நியமத்தை யுடையவர்களும், அன்னம், எண்ணெய், பால், எள்ளு இவைகளில் இயன்றவைகளை இயன்ற அளவு கொடுத்தவர்களும், வறியவர்களுக்கு வீடு, வஸ்திரம் இவைகளை தானஞ்செய்தவர்களும் பெரும் பாவஞ் செய்தவர்களானாலும் நரகத்தை யடையமாட்டார்கள். மடந்தையர்களை பௌர்ணமியிலே கூடுபவர்களும், பிறர் மனைவியை விரும்பிக் கலந்தவர்களும், அயலவர்கள் பொருளை விரும்பி வஞ்சனையினாலே கவர்ந்தவர்களும் பெரும் புண்ணியத்தையுடையவர்களானாலும் நரகத்தையே யடைவார்கள். குளங்கள், கிணறு, ஏரி, தண்ணீர்ப்பந்தர் இவைகளை அழிக்கின்றவர்களும், வேத பாராயணஞ் செய்பவர்களுக்கும் பசுக்களுக்குந் துன்பம உண்டாக்குவோர்களும் உத்தமமான புண்ணியங்களைச் செய்பவர்களானாலும் நரகத்தையே யடைவார்கள். பதிதர் பாசண்டர்களாகிய கெட்டவர்களைக் காப்பாற்றுவார்களும், ஆகம முணர்ந்த

குரவர்களை நிந்தனைசெய்தவர்களும், புத்தி பூர்வமாய்க் கொலை செய்தவர்களும், வஞ்சக மனத்தை யுடையவர்களும் அதிகமான புண்ணியத்தைச் செய்தவராயினும் நரகத்தை யடைவார்கள், அமாவாசையில் எண்ணெய், நெல்லிக்காய், பல் விளக்கல், பரான்னம், மாம்சம் இவைகளை உபயோகிப்பவர்களும், அருகமில்லாதவர்களுக்கு உயர்வான வேதத்தைச் சொன்னவர்களும், உலோகங்களை விற்பனைசெய்பவர்களும், புண்ணிய சிலர்களானாலும் நரகத்தை யடைவார்கள். முனிவர்களே! தேவலோகத்துக்குச் சிவர்கள் போகும்வழி எப்படியிருக்கிறதென்றால் அடிக்கடி பல அன்ன சாலைகள், பல தண்ணீர்பந்தர்கள், நல்ல மாளிகைகள், பல சிருங்கார வனங்கள் அவர்கள் அநுபவிக்கும்படி இன்னமும் சாமரை கொடி குடை வாகனங்கள் மற்றும் எவை எவைகளை நினைத்தாலும் இலேசாக அவர்களுக்குக் கிடைக்கும்.

நரகத்தை யடையுமாந்தர் செல்லும் வழியானது ஒரு பக்கத்திலே பெரும் பள்ளமும், ஒரு பக்கத்திலே பெரு மேடும், முட்கள் நிறைந்த காடுகளும் நெருப்பைக் கொதித்து வீசுகின்ற ஓடைகளும், கொடிய துஷ்ட மிருகங்கள் ஒரு பக்கமும், வெப்பமாகிய மணலும், சிறிய கல்லுகளும், கொதித்து வெப்பஞ்செய்யுமிடமும், சர்ப்பங்களும், தேள்களும் துன்பஞ்செய்யும் வழியெதிர்ப்படவும், இயமதூதர்கள் வேறு துன்புறுத்தி இழுத்துச் செல்வார்கள் இவ்வாறு செல்லும்போது எதிர்ப்படும் வைதரணி என்னும் நதியானது புண்ணிய சிலர்களுக்குக் குளிர்ச்சியாகிய நீர் நிறைந்து விளங்கும். அவர்களாலே தானஞ்செய்த பசு அங்குவந்து நின்று அதின் வாலைப் பற்றிக்கொண்டு சுலபமாகக் கடந்து செல்லச் செய்யும். தீயவர்களுக்கு அந்நதியானது கண்டவுடன் உல்லோல கல்லோலமாய்ப் பொங்கி அதிர்த்துப் பெருஞ்சுழியிட்டு பெரிய கொடிய முதலை, மீன்கள், சர்ப்பங்கள் இவை நிறைந்து கிடக்க இயமதூதர் மிகக் கோபித்து அதில் வீழ்த்தித் துன்பப்படுத்திக் கரையேறச் செய்யும். இவ்வாற்றைக் கடந்து இயம சந்நிதான மடைந்தபோது புண்ணியசிலர்களைக் கண்டால் தருமராசன் எதிரே வந்து உபசரித்து நவரத்னகசிதமான விமானத்திலேற்றி தேவலோகத்துக்கு அநுப்புவான். பாபிகள் வந்தபோது தானுமவர்களைப் பார்க்காதபடி தள்ளி அவர்கள் பாவத்துக்குத் தக்க நரகத்திலே பெருந்துன்பமடைய செலுத்தச் செய்வான் என்று இநதப்பிரகாரம் சொர்க்கநரகமடையும் விஷயங்களை நாசிகேது சொல்லக்கேட்டு மகிழ்ந்து வியந்து ஆசீர்வாதஞ் செய்து முனிவர்கள் தபோவனஞ் சென்றார்கள். அப்பால் நாசிகேது முனிவர் தந்தையார் பாதத்திலே நமஸ்காரஞ் செய்து ஏ பிதாவே! இவ்விருவினைப் பயன்களை யநுபவிக்காமல மோக்ஷமடைவ தெப்போது அவ்வழி யருளல் வேண்டுமென உத்தாலக முனிவர் புதல்வனைப் பார்த்து பிள்ளாய்!

யோக வழியினின்று அப்பாவனை முதிர்ந்தால் சிவஞானமுதிக்கும். அந்த சிவாஞானோதயமே மோக்ஷ ஏதுவாகும். இந்த வழியினாலே சிரமப்பட்டு கிடைக்கத்தக்க முத்தியானது. சிவபெருமானெழுந்தருளி யிருக்கின்ற வேதாரணிய க்ஷேத்திரத்திலே போய் தீர்த்த ஸ்நானஞ் செய்தமாத்திரத்திலே சுலபமாக யடையலாம் இது நான் சொல்வதல்ல வேதங்களும் ஆகமங்களும் முறையிடுவது என்று சொல்லக் கேட்டு மகிழ்ந்து புத்திரனாகிய நாசிகேது முனிவர் தந்தையினிடத்தில் விடைபெற்றுக்கொண்டு வேதாரணியம் வந்து எல்லோராலும் புகழப்பட்ட வேததீர்த்தத்திலே ஸ்நானஞ் செய்தார். அப்படி ஸ்நானஞ் செய்து நினைக்கு முன்னமே சிவஞானமுதயமாயிற்று. நாசிகேது முனிவருடனே வேதங்களினாலே பூசித்த மூர்த்தியாகிய வேதாரணியேசுவர சந்நிதானத்தை யடைந்து ஆணவாதி பாச நீங்கி ஷாட்குண்ணிய சம்பன்ன மோக்ஷத்தை யடைந்தார். இன்னும் விசுவாமித்திரர் பிரமரிஷித்துவம் பெற்றதும் நாரதமுனிவர் விரும்பிய இஷ்டசித்திகளடைந்து சிவன் முத்தரானதும் அங்கு தீர்த்த ஸ்நான விசேஷத்தினாலேயாம். இதுவுமன்றி யாக்ஞியவாக்கி என்பவர் அமாவாசையில் வந்து ஸ்நானம்பண்ணி சிவஞானத்தை யடைந்து முனிவர்களுள் முத்தி முதன்மை யடைந்தார், அம்மட்டோ மைத்திரி, பாற்கேயி, என்று சொல்லுகின்ற இரண்டு மாதர்களுந் தீவினை நீங்கிச் சிவஞானம் பெற்றார்கள். வருணன், சுவேதகேது, பிருகுவாகிய இவர்கள் இந்த க்ஷேத்திரத்திலே தீர்த்த ஸ்நானஞ் செய்து மோக்ஷ சாம்ராச்சிய மடைந்தார்கள். இந்தப் பிரகாரமாக வேதாரணிய க்ஷேத்திரத்திலே ஸ்நானஞ் செய்து ஸ்ரீவேதாரணி யேசுவரப் பெருமானை தெரிசனஞ் செய்து மோக்ஷமடைந்தவர்களை இவ்வளவு என்று கணக்கிட்டுச் சொல்லுதல் முடிந்ததன்று. எத்தன்மையை யுடையவர்களாயினும் அந்த இடத்திலே போய் ஸ்நானஞ் செய்வார்களேயானால் அவர்கள் சிவன்முத்தராவார்கள், வேறொருவருஞ் சொன்னதன்று இது பரமசிவன் கருணை கூர்ந்து சொல்லியருளியதாகும்.

முனிவர்களே! உங்களுக்கு யான் இப்போது சொல்லிய வேதாரணியக்ஷேத்திர மகாத்மியத்தை தவத்தர்களுடைய கூட்டத்திலேயாவது சிவாலயத்திலேயாவது இருந்து சொல்லுவார்களேயானால் பெறும் புகழை அடைந்து அப்பால் மோக்ஷத்தை அடைவார்கள். இந்த வேதாரணிய க்ஷேத்திர மகாத்மியத்தை விளக்குகின்ற இப்புராணத்தை படிப்பவர்களை விருப்பத்துடன் அர்ச்சித்து பொருள், பட்டு ஆடை, ஆபரணம் இவைகளைக் கொடுப்போர் தம்மாலே செய்யப்பட்ட தீமைகளிருந்தாலவை முழுமையும் நீங்கிப் பரமசிவனுடைய திருவருளைப் பெறுவார்கள் அளவிடப்படாத பெருமையையுடைய இதை அசுத்தமான

இடத்திலிருந்து கேட்பவர், சொல்பவர்களும் இப் புராணத்தை நிந்தனைசெய்பவர்களும் நரகத்தை யடைவார்கள். இப்புராணத்தை நாடோறும் படிப்பவர்களும், கேட்பவர்களும் இச்சித்தவைகள் முழுமையும் பெற்று வாழ்வார்கள். வேதாரணியேசுவர சந்நிதானத்திலிருந்து படிப்பார்களேயானால் அவர்கள் மோக்ஷ இன்பத்தை யடைவார்கள். புண்யகாலங்களிலே இதைப் படிப்பவர்களும் எவ்வளவு கொடிய பாவங்களைச் செய்திருந்த போதினும் அவைகள் நீங்கப் பெறுவதன்றி வேதாரணிய க்ஷேத்திரத்தில் ஒரு மாதம் வசித்த புண்ணிய பலனையும் அடைவார்கள். அன்றியும் இதைப் படித்தவர்களும், கேட்டவர்களும் சர்வ வேதங்கள், ஆகமங்கள், பதினெண் புராணங்கள் ஆகிய இவைகளெல்லாம் முற்றிலும் கேட்ட பலனுக்குக் கோடிமடங்கு அதிகமான பலனை அடைவார்கள். இவ்வேதாரணிய புராணத்தைத் துதித்தவர்கள் சாலோக பதவியையடைவார்கள், எழுதிவைத்தவர்கள் சாமீப பதவியை யடைவார்கள், இதைப்படிப்பவர்கள் சாரூப பதவியை யடைவார்கள், கேட்டவர்கள் சிவசாயுச்சிய பதவியை யடைவார்கள். சுபம்!

தீர்த்த முத்திச் சருக்கம் முற்றிற்று.

முக்கிய கவனிப்பு.

இப்புத்தக விற்பனையினால் வரும் இலாப ரூபாயை வேதாரணியம் பிரதோஷ மடத்தின் தரும பரிபாலனத்தின் பொருட்டு உபயோகிக்கப்படும்.

இங்ஙனம்,
மா. சோமா. முத்துமாணிக்க பட்டாரகர்,
பிரதோஷ மடாதிபர்,
வேதாரணியம்.